கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 | 02 - 08 ஏப்ரல் 1998 | முழக்கம்: 168

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# வல்லிபுரம் - எழுதுமட்டுவாள் - தாளையடி
# குடாநாட்டில் மீண்டும் கடும் சமர்

## நாகர்கோவில் புலிகளின் தளம்?

வடமராட்சி கிழக்கின் மையப்பகுதியில் உள்ள நாகர்கோயில் பிரதேசம் விடுதலைப் புலிகளின், குறிப்பாக கடற்புலிகளின் தளமாக இருந்துவருகிறது. அண்மையில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் நடந்த பாரிய கடற்சமருக்கு இந்தத் தளமே பயன்படுத்தப் பட்டிருப்பதாக சிறீலங்காப் படையினர் சந்தேகம் கொண்டிருப்பதால் இப் பகுதியை கைப்பற்றும் நோக்கிலேயே இவ் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நாகர்கோயில் பகுதி நீண்ட மணல்குன்றுகளையும், பற்றைக் காடுகளையும் உள்ளடக்கியிருப்பதால் புலிகளுக்கு சாதகமான பிரதேசமாக இருந்து வருவதாக கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதேசமயம் நாகர்கோயிலில் தளம் கொண்டுள்ள புலிகள் தெற்கே வெற்றிலைக்

(☞ 2ம் பக்கம்)




## முதலாவது முயற்சி தோல்வி

(30.03.98)

இன்று அதிகாலை தாளையடி இராணுவ முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்களின் உதவியுடன் புறப்பட்ட ஆயிரக்கணக்கான படையினர் மாமுனை வரை முன்னேறினர். அவர்களை காலை 6.30 மணியளவில் மாமுனையில் எதிர்கொண்ட விடுதலைப் புலிகள் பலத்த பதிலடி தாக்குதலை நடாத்தினர். சிலமணி நேரம் தொடர்ந்து நடந்த தாக்குதலின் பின்னர்

(☞ 2ம் பக்கம்)




## இராணுவ ஹெலி சேதம்

(30.03.98)

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் எனக் கருதப்படும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களை கைப்பற்றும் நோக்குடன் ஆயிரக்கணக்கான சிறீலங்கா துருப்பினர் கனரக ஆயுத தளபாடங்கள் சகிதம் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கே வல்லிபுரத்திலிருந்தும், மேற்கே எழுதுமட்டுவாளிலிருந்து நாகர்கோயில் நோக்கியும், தெற்கே தாளையடியிலிருந்தும் இப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நகர்வுகளை இன்று காலை சிறீலங்காப் படையினர் ஆரம்பித்தனர். தரைப்படையினருக்கு உதவியாக உலங்கு வானூர்திகளும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இவ் இராணுவ நகர்வுகளை இடைநிறுத்தி புலிகளின் போராணிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வல்லிபுரத்திலி

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் தாக்குதல் யுக்தி இருவகையானது - *தளபதி கருணா*

சிறீலங்காவின் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் 'வலிந்து தாக்குதல்', 'பாதுகாப்புத் தாக்குதல்' என இரு வகையாக மேற்கொள்ளப் படுவதாக விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா தெரிவித்ததாக புலிகளின் குரல் வானொலி குறிப்பிட்டுள்ளது.

தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களது தேர்வாக அமையும் இராணுவ நிலைகள் மீது 'வலிந்து தாக்குதல்' முறையில் அதிரடித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு அந் நிலைகள் அழிக்கப்படும் அதே வேளை முன்னேறி வர முயலும் இராணுவ அணிகளை தடுத்து நிறுத்துவதற்காக 'பாது

(☞ 2ம் பக்கம்)

**மாங்குளம் தந்திரோபாயமும் எதிர்த் தந்திரோபாயங்களும்**
- இராணுவ ஆய்வு பக். 7

# இனப்படுகொலையை தடுக்க உதவுங்கள்
# கோபி அனானிடம் வன்னி மக்கள் மனு

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் வாழும் மக்கள் தமது தற்போதைய அவல நிலைபற்றி ஐ.நா பொதுச் செயலாளர் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். சிறீலங்கா அரசால் வன்னியில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவ அடக்குமுறைகளையும், உணவையும், மருந்தையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவது குறித்தும் ஐ.நா.விடம் முறையிட்டுள்ளனர். மக்கள் பாதிக்கப்பட்டு சீரழிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளமை இம்முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடரும் இராணுவ நடவடிக்கைகள், வேலை வாய்ப்பின்மை, பொருளாதாரத் தடை என்பவற்றால் வன்னியில் வாழும் மக்கள் 80 வீதம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வரும்நிலை, இங்கு பிறக்கின்ற பிள்ளைகளில் 60 வீதமானோர் நிறைகுறைவாகப் பிறப்பது, அதனால் ஆரோக்கியமற்ற எதிர்கால சந்ததி ஒன்று உருவாகும் அச்சநிலை, இம் மாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களில் அரைவாசித் தொகையினருக்கு மேல் பட்டினிச்சாவுக்குத் தள்ளப்பட்டநிலை, வேலை வாய்ப்பின்மை, போக்குவரத்துப் பிரச்சினை உட்பட பல விடயங்கள் இம் முறையீட்டு மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக சிறீலங்காவின் 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை காரணமாக திட்டமிட்ட இராணுவ, பொருளாதார, சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு இனப்படுகொலையை எதிர்நோக்கியுள்ள வன்னி வாழ் மக்களின் பிரச்சினைகளை உடனடியாக ஐக்கிய நாடுகள் சபை கருத்திற்கொண்டு இதற்கு தீர்வுகாண உதவுமாறு கேட்டுள்ள இம் முறையீட்டு மனுவின் பிரதிகள் சர்வதேச மன்னிப்பு சபைக்கும், ஐநா மனித உரிமை ஆணைக் குழுவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546
சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374
லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527
நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# மாணவியை நிர்வாணமாக்கி படையினர் சித்திரவதை

மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவியை சிறீலங்காப் படையினர் நிர்வாணமாக்கி சித்திரவதை செய்த கொடூரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பழுகாமம் பகுதியைச் சேர்ந்த இம் மாணவி தனது கல்வி காரணமாக வின்சன் மகளிர் கல்லூரி விடுதியில் தங்கியிருப்பவர். க.பொ.த சாதாரணதர செய்முறை பரீட்சைக்கான அனுமதி அட்டையை எடுத்துவர கடந்த 17.03.98 அன்று பிற்பகல் பாடசாலைக்கு சென்ற பின் தனது தோழியின் வீட்டுக்கு சென்ற வேளையிலே சிறீலங்கா இராணுவத்தினாலும், தமிழ் குழுக்களாலும் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டார். முகாமில் இவரை நிர்வாணமாக்கி, கை, கால்களைக் கட்டிய படையினர் அவரது பிருஷ்டத்தில் பொல்லுகளால் தாக்குதல் நடத்தியதியுள்ளனர். பின்னர் மாலை ஆறுமணியளவிலேயே இவர் இராணுவத்தால் கட்டு அவிழ்த்துவிடப்பட்டுள்ளார். தனது உடல்வலியுடன் கல்லடியிலுள்ள ஒரு வீட்டிற்கு சென்ற அம் மாணவி தனக்கு நேர்ந்த கொடுமையை விபரித்துள்ளார்.

மட்டக்களப்புப் பகுதிகளில் அண்மைக்காலமாக பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டு வருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## முதலாவது...

படையினர் மீண்டும் தாளையடி முகாமிற்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

மீண்டும் வெற்றிலைக்கேணி தளத்திலிருந்து மேலதிக படையினரையும், படைக்கல உதவிகளையும் பெற்றுக்கொண்டு இரண்டாவது தடவையாகவும் முன்னேற முயன்று வருகின்றனர். அவர்களது இம் முயற்சியை விடுதலைப் புலிகள் பலமான எதிர்தாக்குதல் நடத்தி தடுத்துநிறுத்தி வருகின்றனர்.

தாளையடி இராணுவ முகாம் வெற்றிலைக்கேணி, ஆனையிறவு, இயக்கச்சி ஆகிய இராணுவத் தளத்தை உள்ளடக்கிய இராணுவ வலையத்தினுள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நாகர்கோவில்...

கேணி, ஆனையிறவு இராணுவத் தளங்களை நோக்கியும், வடக்கே பருத்தித்துறையை நோக்கியும், மேற்கே எழுதுமட்டுவாளூடாக தென்மராட்சியை நோக்கியும், கிழக்கே பரந்து விரிந்த வங்கக் கடற்பரப்பை கண்காணிக்கும், கட்டுப்படுத்தும் நோக்கிலும் தமது படைப்பிரிவுகளை நகர்த்துவதற்கு வாய்ப்பாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## புலிகளின் தாக்குதல்...

காப்புத் தாக்குதல்கள்' நடாத்தப்பட்டு இராணுவத் தரப்பிற்கு பலத்த இழப்பு ஏற்படுத்தப்படுகிறது.

இவ்வாறான தாக்குதல்களின் விளைவாக எமது போராளிகளின் இரத்தம் தோய்ந்த வீதியாக வவுனியா - மாங்குளம் வீதி மாறியுள்ளது எனவும் ஜயசிக்குறுய் படை நகர்வில் முதல் எட்டு மாதங்களில் 1165 போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகவும் தளபதி கருணா தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ ஹெலி...

ருந்து நகர்ந்த படையினரை குடத்தனை, அம்பன் பகுதிகளில் இடைமறித்த விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல்களை தொடுத்துவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இராணுவத்திற்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்ட உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளதாக இராணுவத் தரப்பினர் ஒத்துக் கொண்டுள்ளனர்.

மோதல்கள் தொடர்ச்சியாகவும், உக்கிரமாகவும் இடம்பெற்று வருவதால் சேதங்கள் பற்றிய உறுதிப்படுத்தப்பட்ட விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகளின்படி இன்று மதியம்வரை பத்துக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், ஏராளமானோர் படுகாயப்படுத்தப் பட்டுள்ளனர்.

எழுதுமட்டுவாள் பகுதியில் அமைந்திருந்த பாலத்தடியில் சிறீலங்காப் படையினரை இடைமறித்து தாக்குதல் தொடுத்த விடுதலைப் புலிகளின் அணியொன்று படையினரை அங்கிருந்து நாகர்கோயில் நோக்கி முன்னேறதாவாறு தடுத்துவிட்டது.

இதேவேளை எழுதுமட்டுவாளின் உள்பகுதிகளுக்கும், அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களுக்கும் சண்டையை விடுதலைப் புலிகள் நகர்த்திச் சென்றுவிட்டதாக இராணுவத்தினர் ஒத்துக்கொண்டுள்ளனர்.

# யாழில் எச்சரிக்கை சுவரொட்டிகள்

யாழ் குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கசிப்பு விற்பனை மற்றும், விபச்சாரம், கள்ளச்சந்தை, ஆகிய சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான எச்சரிக்கைச் சுவரொட்டிகள் யாழ் நகரில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. 'யாழ் மக்கள்' என அடிக் குறிப்பிடப்பட்ட இச் சுவரொட்டிகளை மக்கள் குழுவாக நின்று வாசித்ததாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழிலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையில் 'மின்னல்' என்ற புனை பெயரில் எழுதப்படும் பத்தியிலும் மேற்குறிப்பிடப்பட்ட சமூக விரோதச் செயல்கள் குறித்து கண்டித்து எழுதப்பட்டுள்ளது.

இவ் வாறான சமூகவிரோதச் செயல்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

விற்பனைக்கு
முடிதிருத்தும் இடம்
Nena Salon
சூரிச் கிரைஸ் 5–ல் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு: 01/2715872

முதலாவது
பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் நவித்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை பத்திரகாளி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த குலதாஸ்-சுலோஜனா தம்பதிகளின் செல்வப்புதல்வன் நவித் 02.04.98 அன்று வரும் தனது முதலாவது பிறந்தநாளை 04.04.98 சனிக்கிழமை சுவிஸ் லுசான் நகரில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.



இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா (ஹொலன்ட்) அம்மம்மா (இலங்கை), பெரியப்பா, பெரியம்மா, தர்சி அக்கா, அஜித் அண்ணா (ஹொலன்ட்) மாமா, அத்தை (இலங்கை) ஆசையப்பா (இலங்கை), மாமா, அத்தை, மிதுனன் மச்சாள் (ஹொலன்ட்), பெரியமாமா (பிரான்ஸ்), சின்னம்மா (இலங்கை), பூட்டப்பா (இலங்கை), அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், அண்ணாமார் அக்காமார் (இலங்கை), அம்மம்மா (ஜேர்மனி), அப்பப்பாமார், அம்மம்மாமார் (ஜேர்மனி), மாமாமார், மாமிமார், அப்பப்பாமார், அம்மம்மாமார் (சுவிஸ்)மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் பத்திரகாளி அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்கலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

திரு.திருமதி. குலதாஸ் (சுவிஸ்)
தொலைபேசி: 021/617 58 46

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,600 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# தேசிய செய்தித் தொகுப்பு

## வன்னியில் குண்டு வீச்சு வெறித்தனம் எண்மர் பலி - உடமைகள் அழிப்பு

கடந்தவாரம் வன்னி பெருநிலப்பரப்பில் சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் தமது வெறித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புக்கள் மீது நடாத்தியுள்ளன.

இவ் வெறித்தனத்திற்கு எட்டு தமிழர்கள் பலியாகியுள்ளதுடன், எட்டுக்கு மேற்பட்டோர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். வீடுகள், உழவு இயந்திரங்கள் என்பனவும் அழிக்கப்பட்டுள்ளன.

காலை எட்டு மணியிளவில் வன்னி வான்பரப்பில் தோன்றிய கிபீர் விமானங்கள் புதுக்குடியிருப்பு, வட்டக்கச்சி, கண்டாவளை பகுதிகளில் 250 கிலோ எடையுள்ள குண்டுகளை வீசின. இதிலொரு குண்டு வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள வேலாயுதம் (உடையார் வீடு) என்பவர் வீட்டில் வீழ்ந்து வெடித்ததில் ஐவர் கொல்லப்பட்டனர். இவர்களுள் சி. வன்னிப்பிள்ளை, (60), ராமநாதன் செல்லம்மா(50) ஆகியோர் உடல் சிதறி பலியானார்கள், ஏனையோரான வேலாயுதம் யாழினி(22), பாலசிங்கள்(50) ஆகியோர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் மரணமானார்கள்.

காயமடைந்த ஏனையோர் தற்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்குண்டு வீச்சு நடாத்தப்படுவதற்கு சில மணி நேரத்தின் முன்னர் முல்லைக் கரையோரத்திலும் கடுமையான விமானக்குண்டு வீச்சுகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

விமானப் படையினரின் வெறித்தனம் நடைபெற்ற வேளையில் சிறீலங்கா கடற்படையினரும் முல்லை கடற்பரப்பில் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலின் விளைவால் மீன்பிடிக்கச்சென்ற இருவர் காணாமற் போயுள்ளனர்.

## உப்பாறு கிராம மக்களின் அவலநிலை நீடிக்கிறது

உப்பாறு கிராமத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிசாரினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள் கிராமத்தினுள் மீண்டும் நுழையக்கூடாதென திருகோணமலை மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

திருமலை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சிறீலங்கா பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும்போது இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். உப்பாறு மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்துக்குச் சென்று குடியேற அனுமதி அளிக்க வேண்டும். குறைந்த பட்சம்அவர்களால் கைவிடப்பட்ட கால்நடைகள், உடமைகள் என்பவற்றையாவது எடுத்துவர அனுமதிக்கப்படல் வேண்டும் என்று அப் பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தபோது அதனையும் இவ் இணைப்பதிகாரி ஏற்க மறுத்துள்ளார். விரட்டியடிக்கப்பட்ட இம் மக்கள் தஞ்சம் அடைந்த இடங்களிலும் எவ்வித உதிவிகளும் கிடைக்கப் பெறாத நிலையில் அவல வாழ்வு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தன்னியங்கி இழுவைச் சாரதிகள் புளொட்டிற்கு எதிராக போராட்டம்

திருமலை நகரில் சேவையில் ஈடுபடும் முன்னூறுக்கும் அதிகமான தானியங்கி இழுவைகளின் (ஓட்டோ ரிக்ஷா) சாரதிகள் கண்டனப் போராட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

தம்மோடு சேவையிலீடுபடும் சக சாரதியொருவர் கடந்த 21 ஆம் திகதியன்று புளொட் அமைப்பினரால் கடத்தப்பட்டதையடுத்து இவர்கள் அனைவரும் கடந்த 25ம் திகதி திருமலை நகரிலுள்ள புளொட் அலுவலகத்தின் முன்னால் கூடி தமது சக ஊழியரை விடுவிக்குமாறு கோரி போராட்டம் நடாத்தியுள்ளனர்.

சாரதிகளின் போராட்டம் நடைபெற்ற வேளை புளொட் உறுப்பினர்கள் தமது அலுவலகத்தை மூடிவிட்டு உள்ளே இருந்துள்ளனர்.

கடத்தப்பட்ட மேற்படி சாரதி வவுனியா புளொட் அலுவலகத்திற்குக்கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

## போக்குவ்ரத்து கட்டுப்பாட்டிற்கு கிழக்கு ஆயர் கண்டனம்

கிழக்கு மாகாணப் போக்குவரத்துக்கு சிறீலங்கா அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை கிழக்கு மாகாண ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை கடுமையாக சாடியுள்ளார். கிழக்கில் இருந்து கொழும்பு செல்லும் பார வண்டிகளையும் ஏனைய வாகனங்களையும் 24 மணிநேரமும் நிறுத்தி வைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என ஆயர் தெரிவித்தார். இதனால் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், குறிப்பாக மீன் போன்ற பொருட்கள் பழுதடைந்து வருவதாகவும் வர்த்தகர்கள் கூறி வருவது தெரிந்ததே.

இது ஒருபுறமிருக்க மட்டக்களப்பு செங்கலடி, பதுளை வீதியில் உள்ள கரடியனாறு, கித்துள் பன்குடாவெளி போன்ற பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 2000 குடும்பங்களுக்கு கடந்த 4 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களுக்கான உலர் உணவுப் பொருட்களே மேற்படி குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை.

தற்போது அரசினால் விதிக்கப்பட்ட போக்குவரத்துத் தடையினால் இம் மக்களின் எதிர்காலம் பட்டினிச் சாவிற்குத் தள்ளப்பட்டுள்ளது.

## திருமலையில் இராணுவக் கெடுபிடிகள்

சிறீலங்கா ஆக்கிரமிப்புப் பகுதியிலுள்ள திருமலை பகுதியில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நகரின் வீதிகளில் துவிச்சக்கர வண்டியில் செல்லும் பொலிசார் பாதசாரிகளின் அடையாள அட்டைகள், இதர ஆவணங்கள் என்பவனவற்றைச் சோதனையிட்டு வருகின்றனர். இதுபோன்று இராணுவத்தினரும் மோட்டார் சைக்கிள்களிலும் நடமாடித்திரிந்து சோதனைகளை மேற்கொள்ளுகின்றனர். மேலும், திருமலைக்குச் செல்லும் பேருந்துகள், லொறிகள் போன்ற வாகனங்களும் மிகவும் கெடுபிடிக்குள்ளாகின்றன. அனுராதபுரம் போகும் சந்திக்கு அடுத்துள்ள சோதனைச் சாவடியில் பெரும் லொறிகள் மறிக்கப்பட்டு சாரதிகளின் அனுமதிப் பத்திரம் எடுக்கப்பட்டு, வேறு புதுப் பத்திரம் வழங்கும் புதிய நடைமுறை ஒன்று கடந்த வாரம் புதிதாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## வழிபாட்டு இடங்களின் அழிப்பு

### யுனெஸ்கோவிற்கு வடக்கு - கிழக்கு குருமார் முறையீடு

'பிரித்தானியர், பௌத்த சிங்கள அரசிடம் இலங்கையின் இறைமையைவிட்டுச் சென்றபின்னர் இந்துமதமானது படிப்படியாக அழிவுக்குள்ளாக்கி தற்போதைய சந்திரிகா ஆட்சியில் பேரழிவின் விழிம்பில் நிற்கிறது' என வடக்கு கிழக்கு மாகாண இந்துமத குருமார் ஒன்றியம் ஐ.நா யுனெஸ்கோ அமைப்பிற்கு எழுதிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும், குறிப்பிடப்பட்டுள்ளதாவது. 'சிறீலங்காவின் தேசியக் கொடியில் பௌத்தமத சின்னமே பொறிக்கப்பட்டுள்ளது. 1972 ம்ஆண்டு சிறீலங்காவின் அரசியல் அமைப்பு யாப்பில் பௌத்தமதமே சிறீலங்காவின் ஏகோபித்த தனியொருமதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான முழு உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான சிறீலங்கா தேசத்தில் இந்துமதம் படிப்படியாக அழிவுக்குள்ளாகி வருவதுதான் வரலாறு. சிறீலங்காவில் வடக்கு கிழக்குப் பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் 1800ற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயங்களின் உடமைகளும் அழிக்கப்பட்டு புனிதத்தன்மையும் கெடுக்கப்பட்டுவிட்டது. பௌத்த சிங்களவரின் பூரண கட்டுப்பாட்டிற்குக் கீழே உள்ள பல ஆலயங்கள் படையினரின் தேவைக்காக, தங்குமிடமாக காவலரண்களாக பயன்பட்டுவருவது வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறான ஆலயங்களில் மிகவும் புனிதமான விக்கிரகங்களும், உடமைகளும் இராணுவத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்துமதக் குருமார் கண்மூடித்தனமாக கைது செய்யப்பட்டுவரும் இராணுவச் சோதனைச் சாவடிகளில் தரக்குறைவாக நடத்தப்பட்டுவரும் இவர்களுக்கான பாதுகாப்பு மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியது. இவ்வாறாக சிறீலங்காவில் சிங்கள பௌத்த பேரினவாத அரசால் இந்துமதம் அழிப்புக்கசு உள்ளாகி வருகிறது.

எனவே சிறீலங்காவில் மறுக்கப்பட்டு வரும் இந்துமத வழிபாட்டுரிமையை நீக்குவதற்கும், இந்து ஆலயங்கள் மீதும் வழிபாட்டுத் தலங்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்களை தடுத்து நிறுத்தக்கோரியும், இந்துமத ஆலயங்களையும், உடமைகளையும், இந்துமத குருமார்களையும் பாதுகாக்க யுனெஸ்கோ அமைப்பு பூரண நடவடிக்கை எடுக்கவேண்டுமென இவ் அமைப்புக் கோரியுள்ளது. இம் மகஜரின் பிரதிகள் ஜனதாக் கட்சி, சிவசேன, விஷ்வ இந்து பரிஷட், பச்சிரம் கான், காஞ்சி காமகோடி பீடாதிபதி போன்ற அமைப்புக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


அன்னை பூபதியம்மாவின் 10வது ஆண்டு நிறைவையொட்டி
செஞ்சோலைச் சிறார்களுக்காக
தமிழ்ப் பெண்கள் அமைப்பு – சார்சல்
நடாத்தும்

செஞ்சோலை மாலை

எங்களது ஈழமண்ணில்
அந்நிய இராணுவமா
எம்மினத்தின் உரிமைப் போரில்
ஏன் இன்னொருவர் தலையீடென்று
ஓங்கிப்பெரும் குரல் கொடுத்து
உண்ணாமல் நோன்பிருந்து
இணையில்லாத் தன் உயிரை எம்
விடுதலைக்காய் தந்துவிட்டு
தியாகச் சுடரொளியாய்
எம்மனதிலே நிறைந்துவிட்ட
அன்னை பூபதியம்மாவின்
இப் பத்தாம் ஆண்டதனில்
எம் தேசத்தின் செல்வங்கள்
செஞ்சோலைச் சிறார்களிற்கு
மனம்போல உதவி செய்வோம் – அவர்கள்
மலர்விற்காய் கைகொடுப்போம்.



காலம்: 19.04.1998 ஞாயிறு மாலை 4 மணி
இடம்: SALLE PABLO NERUDA
Av. Paul Vellery, 95200 Sarcelles.
RER-D : Garges Sarcelles (புகையிரத நிலையம் முன்பாக)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(இந்நிகழ்ச்சி மூலம் பெறப்படும் நிதியனைத்தும் செஞ்சோலைக்கு வழங்கப்படும்)

தமிழ்ப் பெண்கள் அமைப்பு – பிரான்ஸ் - 01 43 58 11 42

# விடுதலைப் புலிகளே தமிழரின் ஒரே பிரதிநிதிகள் - *சிவசிதம்பரம்*

விடுதலைப் 'புலிகளே தமிழரின் ஒரே பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியுமென தமிழர் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான சன்டே ரைம்சுக்கு கடந்த வாரம் அவர் பேட்டியளித்த போதே இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளைப் போன்ற பயங்கரவாதிகள் பிரதிநிதித்துவப் படுத்த முடியுமா? என்று அப்பேட்டியில் நிருபர் வினவிய போது,

யார் பயங்கரவாதிகள்? விடுதலைப் புலிகளா? அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. மாறாக விடுதலைப் போராளிகள். எனவே, அவர்கள் தான் தமிழ் மக்களை முழுமையாக பிரதிநிதித்துவப் படுத்தமுடியும்.

விடுதலைப் புலிகளுடன் விஜயகுமாரதுங்க, பிரேமதாசா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, சந்திரிகா போன்றவர்கள் ஏன்? இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்றவர்களும் பேச்சுக்களில் அவ்வப்போது ஈடுபட்டபோது அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பது புரியவில்லையா எனவும் சிவசிதம்பரம் வினவியுள்ளார்.

இதே கேள்வி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்திடம் கேட்கப்பட்ட போது,

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என கூறுபவர்கள் கடந்த காலத்தினை திரும்பிப் பார்க்கவேண்டும். 1956-ஆம் ஆண்டு முதல் 1983 யூலை வரை தமிழர்கள் மீது தாக்குதல் நடாத்தியவர்கள், 1988-1989 ஆம் ஆண்டுகளில் குழப்பத்தினை விளைவித்தவர்கள், 1997 அம்பாறை மத்தியமுகாம் பகுதியில் வெறியாட்டம் புரிந்தவர்கள் எல்லோரும் குழப்பகாரர்கள் என வர்ணிக்கப்படுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்கிறார்கள். இது என்ன நியாயம் எனவும் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# மூதூர் இந்திக்குளத்தில் பொதுமக்கள் படையினரால் வெளியேற்றம்

மூதூர் பிரதேசத்தின் இந்திக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 175 தமிழ்க் குடும்பங்களை அக் கிராமத்தைவிட்டு வெளியேறுமாறு படையினர் கட்டளை இட்டிருந்தனர்.

கடந்த புதன்கிழமைக்கு இடையில் அனைவரும் வெளியேறிவிடவேண்டும் என படையினர் கொடுத்த காலக்கெடுவுக்குப் பயந்து மக்கள் அனைவரும் வெளியேறத் தொடங்கிவிட்டனர். வெளியேறிய இம்மக்கள் பள்ளிக் குடியிருப்பில் வந்து தஞ்சம் புகுந்துள்ளனர். வெளியேறி வந்துள்ள இம்மக்கள் தங்குமிட வசதிகள் இன்றியும், உலர் உணவுகள் இன்றியும் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர் என தெரியவருகிறது.

இதேவேளை சிறீலங்கா இராணுவத்தால் உப்பாறு கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஆலங்கேணியில் தஞ்சம் அடைந்திருப்பது தெரிந்ததே. இவர்களுக்கான நிவாரணங்களோ உதவிகள் எவையுமோ இதுவரை கிடைக்கவில்லை எனவும், இதனால் அக் குடும்பங்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளதாகவும். இவர்களுக்கு ஒருவேளை மட்டும் சமைத்த உணவு வழங்கப்படுவதாகவும் பிறிதொரு செய்தி தெரிவிக்கிறது.

# விடுதலைப் புலிகள் தொடர்பான எமது கொள்கை நிலையானது - *ராமதாஸ்*

இந்தியப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் காரணத்தால் பாட்டாளி மக்கள் கட்சி விடுதலைப் புலிகள் தொடர்பான பழைய கொள்கையினை விட்டுக்கொடுக்காது என அக் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் சென்னையில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்க வேண்டும் என்ற உங்கள் கட்சியின் கொள்கையில் ஏதாவது மாறுதல் உண்டா என செய்தியாளர்கள் கேட்டபோது, இது பற்றி தர்க்கம் செய்வதற்கு இடமில்லை. எங்கள் கொள்கைகளை எதற்காகவும் விட்டுக் கொடுக்கமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு தொடர்பாகக் கேட்டபோது, இப்போதுதானே பாராளுமன்றத்திற்குள் நுழைந்துள்ளோம். மொத்தத்தில் தமிழக நலனுக்காக போராடுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சந்திரிகாவின் அக்கா மீண்டும் அரசியலில் குதிக்கிறார்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் அக்காவான சுனேத்திரா சிறீலங்கா அரசியலில் தான் மீண்டும் தீவிரமாக ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மேற்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு வேட்பாளராக போட்டியிட ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அழைக்கும் பட்சத்தில் அதனை தான் ஏற்றுக்கொள்ளப்போவதாகவும் கூறியுள்ள சுனேத்திரா, பண்டாரநாயக்க குடும்பத்திற்கு அரசியல் ஒன்றும் புதிதல்ல என்பதை தான் நிரூபிக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1970-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரை இடதுசாரி ஜனவிகாய அமைப்பில் தனது கணவருடன் இணைந்து செய்யப்பட்ட சுனேத்திரா, அப்போது ஆட்சி புரிந்த தனது தாயாருக்கு சில நெருக்கடிகளை தோற்றுவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபை வேட்பாளராக இவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போதுள்ள ஐ.தே.க. முதலமைச்சர் ஜெயசூரியாவை எதிர்த்துப் போட்டியிடுவார்.

# களுத்துறைச் சிறைச்சாலையில் 5 கைதிகள் உண்ணாவிரதம்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் ஐவர் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். தமக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது தம்மை விடுதலை செய்யவேண்டும் என்று கூறியுள்ள இவர்கள், எவ்வித காரணமுமோ நியாயமுமோ இன்றி தம்மை நீண்டகாலமாக சிறையில் அடைத்து வைத்திருப்பது மனித உரிமையை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு வெலிக்கடை சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இவ் அரசியல் கைதிகள் சென்ற ஆண்டு அங்கு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தபோது சிறைக்காவலர்களால் பலமாக தாக்கப்பட்டு அங்கிருந்து களுத்துறைச் சிறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள். களுத்துறையில் அடைக்கப்பட்டிருந்த வேளை கடந்த டிசம்பர் மாதம் தமிழ் கைதிகள் தாக்கப்பட்டு மூவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அடையாள உண்ணாவிரதத்தினையும் இவர்கள் மேற்கொண்டனர்.

தற்போது சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இவ் ஐந்து பேரில், தம்பையா சிறீகாந்தன் என்பவர் சிறீலங்கா பொலிஸ் நிலையம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றிக்கொண்டிருந்த வேளையே சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவருடன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருபவர்களில் கந்தையா பரமசாமி, பரமசாமி யோகராசா ஆகியோரும் அடங்குவர்.


## புதிய நட்சத்திரங்கள்

A.S.C.E.S இன் 8-வது ஆண்டு நிறைவுவிழா

காலம்: 05 ஏப்ரல் 98 - மாலை 5 மணி
இடம்: Salle Adyar
4, Square Rapp, 75007 paris
Mo. Pont de L'alma ou Alma Marceau

Asces வகுப்புகள்
பாடசாலை மாணவர்களுக்கான Maths. Physique, Biologie, Chimie, Anglais, Informatique வகுப்புகள் 6e, 5e, 4e, 3e....... Terminal வரை ஞாயிறுகாலை 10 மணி முதல்.

பிரெஞ்சு வகுப்புகள்
04.04.98 சனிமாலை 4 மணி
21.04.98 திங்கள் மாலை 4 மணி
கராத்தே வகுப்புகள் ஞாயிறு பி.ப.3மணி

கம்பியூட்டர் வகுப்புகள்
12.04.98 ஞாயிறு பி.ப. 3 மணி
06.04.98 திங்கள் மாலை 4 மணி

ஆங்கில வகுப்புகள்
04.04.98 சனி. பி.ப 1.30 மணி

சிறுவர்களுக்கான தமிழ், ஆங்கில, கணித வகுப்புகள்
சனி பி.ப 1.30 மணி

நடனம். வயலின், சங்கீதம், ஓர்கன் வகுப்புகள்
சனி பி.ப.1.30 மணி

திங்கள், செவ்வாய் வகுப்பு நடைபெறும் இடம்:
4, Rue Esclagnon, 75018 Paris
Mo: Porte de Clgnancourt
Eglise Saint Lfelene

சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:
41, Rue Didot, 75014 Paris
Mo. Pernety
Dir No.13



டோட்முண்ட் பிறைட்டன் வீடியோவின் தமிழ்ப் புத்தாண்டு வெளியீடு

இளையதளபதி விஜய், கவர்ச்சிக்கன்னி ரம்பா, தேவயாணி, மணிவண்ணன், செந்தில், ஆர்.சுந்தரராஜன் நடிப்பிலும்
தேவாவின் தேனிசையிலும்

## 'நினைத்தேன் வந்தாய்'

05.04.98 ஞாயிறு பிற்பகல் 2.30 மணி
Theater Carnera - Mallinckrodt Str 209, 44147, Dortmund.

தொடர்புகளுக்கு:
Brightan Jewellery, Textiles, Video & Asia Shop
Oesternarsch 27 + 37, 44145. Dortmund
Tel: 0231-838703 / 0231-819431 / Fax: 0231 -811858

# தென் தமிழீழச் செய்திகள்

## இல்ல விளையாட்டுகள் இராணுவ சுற்றிவளைப்பினால் இடைநிறுத்தம்

வாழைச்சேனை கல்மடு விவேகானந்தா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய் அன்று இல்ல விளையாட்டுப்போட்டி இடம்பெற்றபோது பாடசாலையைச் சுற்றி வளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் பலரைக் கைதுசெய்து விசாரணைக்கெனக்கொண்டு சென்றுள்ளனர்.

இல்ல விளையாட்டுப் போட்டிகள் இடைநிறுத்தப்பட்டு மாணவர்களின் அடையாள அட்டைகள் சோதனையிடப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளை பார்வையிட வந்த நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் மைதானத்தைவிட்டு பிறிதொரு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டதுடன், கொளுத்தும் வெய்யிலில் குந்தியிருக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளனர். இதன்போது சிலர் கைதுசெய்து மேலதிக விசாரணைக்கென கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்

ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இவ் இல்ல விளையாட்டுப்போட்டியைக் கூட சுதந்திரமாக நடாத்த முடியவில்லை என பலர் கவலை தெரிவித்துள்ளனர். இதேவேளை வாழைச்சேனை பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரதமராக கலந்துகொண்டபோதே இந் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஒரு கல்விப்பணிப்பாளர், இல்ல விளையாட்டுக்கள் நிறுத்தப்பட்டிருந்தும் விசாரணைகள், கைதுகள் இடம்பெற்றமை கல்விப் பணிப்பாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. கைது செய்யப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

## மிதிவெடி வெடித்த பீதியில் படையினர் துப்பாக்கிச்சூடு

மட்டு. கிரான் வீதியில் சிறீலங்கா இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை மிதிவெடியில் சிக்கி ஒரு இராணுவ சிப்பாய் படுகாயம் அடைந்துள்ளனர்.

இம் மிதிவெடி வெடித்ததும் பீதியடைந்த இராணுவத்தினர் நாலாதிசைகளை நோக்கியும் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதன்போது கிரான் சந்தையில் வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் தமது வியாபாரப் பொருட்களையும் விட்டுவிட்டு நாலா திசைகளிலும் சிதறி ஓடினர். கடைகள் அனைத்தும் வேகமாக இழுத்து மூடப்பட்டன. அருகிலுள்ள விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் தமது பாடங்களை நிறுத்திவிட்டு வகுப்பு அறைகளிலே குப்புறவீழ்ந்து படுத்துவிட்டனர்.

சுமார் அரைமணிநேரமாக துப்பாக்கி வேட்டுக்களை நடாத்திவிட்ட படையினர் அவ்விடத்தைவிட்டு சென்றபின்பே பொதுமக்களுக்கு விடயம் தெரிய வந்தது, அதன் பிற்கே மக்கள் தமது வழமையான பணிகளில் மீண்டும் ஈடுபடத்தொடங்கினர்.

## மட்டக்களப்பு வீதிகளில் புதிய உத்தரவு

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் சிறீலங்கா இராணுவ தொடரணி செல்லும்போது வீதிகளின் இருபக்கங்களும் பொதுமக்கள் நிற்கக் கூடாது என புதிய உத்தரவு ஒன்றினை இராணுவத்தினர் பிறப்பித்துள்ளனர்.

சுமார் 20 மைல் நீளம் கொண்ட இவ் வீதியினையே தமது இராணுவ முகாங்களுக்கான தொடர்புகளுக்காகவே படையினர் பயன்படுத்துகின்றனர். அண்மையில் வந்தாறுமூலை, ஏறாவூர், செங்கலடி பகுதிகளில் இத் தொடர் அணிகள் இடைமறிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளானது தெரிந்ததே.

அதனை அடுத்தே இப் புதிய பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். இதனால் பொதுமக்கள் வீதிகளில் வரும்போது இவ் இராணுவ தொடரணிகளைக் கண்டால் வேகமாக அருகிலுள்ள வீதிகளுக்குள்ளும், வீடுகளிலும் ஓடி மறையவேண்டியவர்களாக உள்ளனர். வாகனங்களில் வரும் சாரதிகள் தமது வாகனங்களை வேகமாக உள் வீதிகளில் விடவேண்டியும் உள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.


ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது

தொலைபேசி:
0148765190 அல்லது 0607622689




# யாழ். செய்திகள்

## 'லக்ஸ்' வாங்கினாலே சீனி வழங்கப்படும்

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் விலைகள் கூடி பொதுமக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர்.

குடாநாட்டு பல.நோ.கூ. சங்கங்களிலும் அத்தியாவசிய பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதால், குடும்பங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருட்கள் வழங்கப்படுகின்றன. யாழ். குடாவில் இயங்கிவரும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் இரண்டு லக்ஸ் வாங்கினாலே ஒரு கிலோ சீனி வழங்கப்படுகிறது, அதுவும் அதனது வழமை விலையினை விட 40% அதிகமாக விற்கப்படுகின்றது என தெரியவருகின்றது.

## மினி சினிமா உருவாக்கத்தால் மாணவர்கள் கல்வி பாதிப்பு

யாழ்.குடா நாட்டின் நகரப் பகுதியில் உருவாகியுள்ள மினி சினிமாக்களினால் பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் வருகை மிகவும் குறைந்துள்ளதாக குடாநாட்டுச் செய்திகளில் இருந்து தெரியவருகிறது.

நகரப்பகுதியில் புதிதாக உருவெடுத்துள்ள இம் மினி சினிமாக்களுக்கு 'ஜெனரேட்டர்'கள் மூலம் சிறீலங்கா இராணுவத்தினர் மின்சாரம் வழங்கி வருகின்றனர். இங்கு காண்பிக்கப்பட்டுவரும் தரமற்ற சினிமாக்களைப் பார்க்க செல்வதால் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களை நோக்கி மாணவர்கள் ஒழுங்காகச் செல்வதில்லை. இதனால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டு வருவதாகவும், உடனடியாக இம் மினி சினிமாக்கள் தடை செய்யப்பட வேண்டுமெனவும் பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## சென். பீற்றர்ஸ் ஆலயம் 175-வது ஆண்டுவிழா

யாழ். சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் 175-வது ஆண்டு நினைவு தினம் அண்மையில் கொண்டாடப்பட்டுள்ளது. யாழ் மத்திய கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள இத் தேவாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளின் வழிபாட்டிற்காகவே கடந்த நூற்றாண்டில் நிறுவப்பட்டது.

175 ஆண்டுகள் நிறைவுடைய இவ் ஆலயம் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமாகக் காணப்படுவது மிகவும் வேதனைப்பட வேண்டிய விசயம் என மெதடிஸ் திருச்சபையின் வணபிதா எஸ் கருணைராஜ் இவ் ஆண்டு விழாவின்போது உரையாற்றுகையில் கூறினார்.

## 'பட்டினிக்கு எதிரான செயல்' மரம் நடும் திட்டம்

குடாநாட்டில் பயன்தரும் பழ மரங்களை நாட்டும் திட்டம் ஒன்றினை செயற்படுத்த 'பட்டினிக்கு எதிரான செயல்' எனும் சர்வதேச நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் பல பயன்தரும் மரங்கள் அழிந்து போயுள்ளன. இதனால் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள அன்றாட பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள, பிரான்சை தலைமையகமாகக் கொண்டியங்கும் இவ் அரச சார்பற்ற சர்வதேச நிறுவனம் தனது செயற்பாட்டை வலிகாமம் பகுதியிலும் விரிவுபடுத்தி செயல்ப்படுத்த திட்டமிட்டுள்ளது என அதன் பொறுப்பதிகாரியான எமான்வெல் விகர் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தின் சூட்டுக்கு இளைஞன் பலி !

யாழ். கொடிகாமத்தில் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு 30 வயது இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

கடந்த செவ்வாய் அன்று நிகழ்ந்த இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இவ் இளைஞனின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த திங்கள் அன்று உரும்பிராய் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி யோகேந்திரம் ரதிஸ்குமார் என்பவர் தனது காலை இழந்துள்ளார்.

## பாம்பு கடித்தவர் தப்பிவிட்டார் அருகில் வந்தவருக்கு ஆபத்து

வடமராட்சி சக்கோட்டைப் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான ஒருவரை காப்பாற்ற நினைத்து மற்றவர் உதவி செய்ய முனைந்தபோது மயக்கமடைந்தார்.

இன்பருட்டிப் பகுதியில் நடந்து வந்துகொண்டிருந்த வேளை சிவலிங்கம் (54) என்பவரது காலில் விஷப்பாம்பு கடித்துவிட்டது. அவருடன் கூட வந்த மற்றொருவர் பாம்பு கடித்த இடத்தில் வாயை வைத்து விசத்தை உறிஞ்சி வெளியே துப்பிக்கொண்டிருந்த வேளை மயக்கமடைந்து விழுந்துவிட்டார்.

இதனையடுத்து இருவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தற்போது பாம்புக்கடிக்கு இலக்கானவர் குணமடைந்த போதிலும் விஷத்தை அகற்ற முற்பட்டவர் இன்னும் மயக்க நிலையில் இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.


இலண்டனில்

நகைத் தெரிவுகளுக்கு

ராஜூ பட்னி அன் சன்

PATTNI HOUSE

58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

# ரொனி - அனுரா வழங்கும் 'உள்வீட்டுச் சண்டை'

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற அரசியல் அஞ்சலோட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினரின் உள்வீட்டுச் சண்டை, ஆளும் பொதுஜன முன்னணியின் டில்லி நாடி பிடிப்பு ஆகியன முக்கியமானவை.

இதில் முதலாவதாக வரும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் உள்வீட்டுச் சண்டையில் கட்சியின் இரு பிரமுகர்களாக ரொனி



டி மெல்லும், அனுரா பண்டார நாயக்காவும் பங்கெடுத்து ஒருவரை ஒருவர் மாறி மாறி அறிக்கைகளால் சாடிக்கொண்டு வருகின்றனர். இவர்களின் மோதல் எங்கே கட்சியை உடைத்துவிடுமோ என்று கூட ஐ.தே.கட்சியிடையே சலசலப்புத் தோன்றியுள்ளது. இந்த மோதலுக்கு கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்காதான் காரணமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு சாரார் போர்க்கொடி பிடித்து, கட்சியில் அவரது தலைமைத்துவத்தினையும் சாடியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் உள்வீட்டுச் சண்டை ஏதோ கடந்தவாரம்தான் ஆரம்பமானதல்ல. மாறாக கடந்த வாரம் வெடித்துக்கிளம்பியிருக்கிறது. அவ்வளவுதான்!

கொழும்பில் 94-ம் ஆண்டு நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் ஒன்றின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதன் பின்னர் ரணில் கட்சியின் தலைமைத்துவத்திற்கு வந்தபோதே பிரச்சினைகளும் வந்துவிட்டன.

இது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு சரியான நேரத்தில் கிடைத்த வெற்றியுமாகும். ஏற்கனவே காமினிக்கு சார்பாக இருந்தவர்கள், ரணில் தம் மீது மேலாண்மைக்கு வந்துவிட்டதாக மனம் புழுங்கியதுடன், எப்போதாவது ரணிலின் காலை வாரிவிடவேண்டும் என்ற தருணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனாலும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரை சமாளிப்பதற்காக இவர்கள் அனைவரையும் ஒரே அணியில் திரண்டு நிற்குமாறு செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் கிழட்டுத் தலைகள் படாதபாடுபட்டதால் கட்சி கொஞ்சம் ஒட்டாக இருப்பதுபோல காட்சியளித்தது.

ஆனால் கடந்தவாரம் அது எப்படியோ வெடித்துவிட்டது. முன்னாள் அமைச்சர் விஜேயபால மென்டிஸை இராஜினாமாச் செய்யும்படி ரணில் கோரியமை இதற்கு 'வடிகால்' அமைத்துவிட்டது.

அரசாங்கக் காணிகளை குறைந்த விலையில் விஜயபால மென்டிஸ் அமைச்சராக இருந்த வேளையில் சுருட்டிக் கொண்டார் என்பது ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட போது, விஜயபால மென்டிஸை கட்சிக்குள் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமா? என்ற கருத்து கட்சியின் ஒரு சாராரிடையே தோன்றியது.

**இவ் விழாவிற்கு வழமைக்கு மாறாக அனுரா கைத்தடி ஒன்று சகிதம் வந்திருந்ததைக் கண்ட ஐக்கிய முன்னணி அமைச்சர்கள், அது பற்றி வின வவே 'நான் ரொனியை தேடிக் கொண்டிருக்கிறேன்' (அடிக்க?) என பதிலளித்தமை வேடிக்கை யாகவும், விவகாரமாகவும் அமைந்துள்ளது.**

தொடரும் ஜெயசிக்குறுய் தோல்விக்கு மாற்றாக மென்டிஸ் விவகாரம் சூடுபிடிப்பதை அறிந்த ரணில், மென்டிஸ் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று காயை நகர்த்த, ஐ.தே.க.வின் பாராளுமன்ற குழுவில் தனக்குப் பெரும்பான்மை இருப்பதால் அப்படி இராஜினாமாச் செய்யமுடியாது என மென்டிஸும் பதில் காய் ஒன்றினை நகர்த்தி ரணிலுக்கு முகத்தில் அடித்துவிட்டார்.

மென்டிஸ்ஸை தொடர்ந்தும் கட்சிக்குள் வைத்திருந்தால் ஐ.தே.க. ஊழல் கட்சி என்ற பெயரை சிங்கள மக்கள் மத்தியில் பெற்றுவிடும் என்பது ரணிலுக்கு நன்றாகவே தெரியும். ஏனெனில் மென்டிஸ் விவகாரம்தான் ஐ.தே.க.வை பாதித்த முதல் ஊழல் விவகாரமல்ல என்பதும் ஏற்கனவே பல ஊழல் குற்றச்சாட்டு படிகளை ஐ.தே.க. முன்னே கொண்டுள்ளது என்பதும் ரணிலுக்கு தெரியாததல்ல.

எனவேதான் மென்டிஸ் விவகாரத்திலாவது கட்சியை கொஞ்சம் காப்பாற்றுவோம் என்ற முனைப்பில் இறங்கினார். மென்டிஸை காப்பாற்றும் நோக்கோடு 'மென்டிஸ் மீதான குற்றச்சாட்டுகள் ஐக்கிய முன்னணியினரின் பழிவாங்கல்கள்தான்' என்று கூறவும் ரணிலுக்கு மனமில்லை. ஆனால் ரணிலுக்கு எதிரானவர்கள் இச்சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முனைந்துவிட்டனர். எனவே மென்டிஸை 'பாதுகாக்கவேண்டும்' என்று ரணிலை நெருக்கத் தொடங்கிவிட்டனர். இந்த நெருக்குதல்கள் மூலமாக மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ரணிலிடமிருந்து எப்படியாவது தட்டிப் பறிக்க வேண்டுமென்பது இவர்களின் இலக்கு. இவர்களைச் சமாளிக்க வழிதெரியாமல் ரணில் திண்டாடும் இந்த வேளையில், கட்சியின் பிரமுகர்களான அனுரா பண்டார நாயக்காவும், ரொனிடிமெல்லும் பிறிதான ஒரு சண்டைக் களத்தில் குதித்துவிட்டனர். பண்டார நாயக்கா குடும்பத்தின் 'காணிக் கொள்ளை' தொடர்பாக ரொனி டிமெல் சூடாகக் கூறியது அனுராவை ஆத்திரமடைய வைத்துவிட்டது. பண்டார நாயக்காவின் குடும்பத்தின் காணிச் சுருட்டல்களை அனுரா கட்சிக்குள் இருக்கும் போதே பேச வேண்டி வந்தது, துரதிர்ஷ்டமான ஒரு நிலை என ரணில் முன்னிலையில், ரொனி தெரிவித்தமைதான் அனுராவை சீண்டிவிட்டது.

அனுராவும் ரொனி மீது பதிலறிக்கை ஒன்றினைத் தொடுத்தார். அதில் கட்சிக்கு கட்சி தாவும் 'பச்சோந்தி' என ரொனியை அவர் விமர்சித்திருந்தார். ஆனால் ரொனியும், அனுராவும் சுதந்திரக்கட்சி மூலமாகவே தமது அரசியல் வாழ்வினை ஆரம்பித்தவர்கள் என்பதால் ரொனியை சாடிய அதே வார்த்தை தனக்கும் பொருந்தும் என்பதை அனுரா சற்று எண்ணிப் பார்க்கவில்லை.

அனுராவின் பதிலறிக்கையைப். பார்த்துவிட்டு ரொனி சும்மா இருந்துவிடவில்லை. அவரும் இன்னொரு அறிக்கை மூலமாக ரணிலுக்கு 'அர்ச்சனை' செய்தார். ரொனியின் அறிக்கைகளில் ரணிலின் பங்கும் உள்ளது என்பது அனுராவின் வால்பிடிப்பவர்களின் கணிப்பாதலால் அவர்கள் கொம்புசீவிவிட முனைந்து வருவது, கொழும்பு அரசியலில் நல்ல காட்சிகள் இடம் பெறப்



போவதற்கு அச்சாரம் காட்டுகின்றன.

*1979*-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு தடவை ரணில் உரையாற்றும்போது அனுரா க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர் என்று நையாண்டி செய்தமை அனுராவிற்கு மறக்கமுடியாத கோபமாதலால், ரணிலை பழிவாங்க சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். இப்போது அது கனிந்து வருவதால் எப்படியும் பயன்படுத்த அவர் முனையலாம்.

ரொனி - அனுரா சண்டையின் உச்சக்கட்டம் எப்படி இருந்தது என்பதை பங்களாதேஷ் தேசிய நாளை முன்னிட்டு அந் நாட்டு தூதரகம் ஒழுங்கு செய்திருந்த ஒரு விழாவில் நடந்த சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இவ் விழாவிற்கு வழமைக்கு மாறாக அனுரா கைத்தடி ஒன்று சகிதம் வந்திருந்ததைக் கண்ட ஐக்கிய முன்னணி அமைச்சர்கள், அது பற்றி வினவவே 'நான் ரொனியை தேடிக் கொண்டிருக்கிறேன்' (அடிக்க?) என பதிலளித்தமை வேடிக்கையாகவும், விவகாரமாகவும் அமைந்துள்ளது.

ஐ.தே.க. வின் நிலை இப்படியெனில், இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் சந்திரிகா தரப்பிற்கு ஒருவித பதட்டத்தைக் கொடுத்து வருகிறது. இந்தப் பதட்டத்தின் காரணமாகத்தான் வெளியுறவு அமைச்சர் கதிர்காமரின் அவசர 'டில்லி ஓட்டம்' நடைபெற்றுள்ளது. புதிதாக பதவியேற்ற இந்திய அமைச்சர்களையெல்லாம் தேடிப்பிடித்து கதிர்காமர் புலிகள் பற்றிய தனது வழமையான பல்லவியை அங்கு ஒப்புவித்தபோதிலும் இந்தியப்பாதுகாப்பு அமைச்சரும் விடுதலைப் புலிகளின் அனுதாபியுமான ஜோர்ச் பெர்னாண்டஸ் அவர்களை கதிர்காமரால் சந்திக்க முடியாது போய்விட்டது. ஆனால் கதிர்காமருக்கான செய்தி ஒன்றினை பெர்னாண்டஸ் அவர்கள் தான் பதவியேற்ற பின்னர் செய்தியாளர்கள் கூட்டமொன்றில் இறுக்கமாகவே தெரிவித்துள்ளார்.

'சிறீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்களைத் தவிர்க்க இந்தியா முயற்சி எடுப்பது அவசியம்' என பெர்னாண்டஸ் தெரிவித்திருப்பது, கதிர்காமருக்கு நிச்சயம் ஒரு நல்ல செய்தி அல்ல எனவே கருத இடமுண்டு. இவ்வளவு நாளும் அக்கரையிலிருந்த நிலை இனியும் இராது என்பதை சிறீலங்கா தரப்பு நன்றாக உணர்ந்திருப்பதையே இந்தப் பதட்ட ஓட்டங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தப் பதட்ட ஓட்டங்கள் பலனளிக்குமா இல்லையா என்பதை கொஞ்சம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**- பிரேம்**


## வீடுகள் வாடகைக்கு

பாரிஸ் 8-ல் M°: Rome அல்லது Europe க்குமிகவும் அருகாமையில் நல்ல நிலையில் உள்ள (15 M²) இட வசதி கொண்ட Studio வீடு வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. வாடகை **2250 Frs C.C** மட்டும் அத்துடன் Ascenseurs + Gardien உண்டு.

Colombes **(92)** இல் S.N.C.F இற்கு மிகவும் அருகாமையில் 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு. வாடகை **3255 Frs C.C**

சகல தொடர்புகளுக்கும்: **சிவா**

Tel: 01 46 71 66 91 / Mobil: 06 09 91 12 66



## பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது

**CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS**

உச்சரிப்பு, இலக்கண, உரையாடலுக்கான

**புதிய பிரெஞ்சு வகுப்பு**

**காலம் : 04.04.98**

**பி.ப : 5.30**

சுரேஸ்

**புதிய பிரெஞ்சு அட்வான்ஸ் வகுப்புகள் 1.00 மணி 4.00 ஆகிய நேரங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.**

**புதிய ஆங்கில, கணனி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.**

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**புதிய தையல் வகுப்பு** (பெண்கள் மட்டும்)

**காலம் : 05.04.98 பி.ப 2.00**

சிறுவர்களுக்கான தமிழ், பரதநாட்டிய, ஆங்கில வகுப்புகள் புதிதாக Robespierre, Aubervilliers ஆகிய இடங்களில் ஆரம்பமாகவுள்ளன

நேரடி தொடர்புகட்கு

**165 rue de Charonne 75011 Paris.**

**(M° : Alexandre Dumas ou Charonne)**

## மாங்குளம்

# தந்திரோபாயமும் எதிர் தந்திரோபாயங்களும்

வன்னியில் கடந்த வருடம் நிலவிய என்றுமில்லாத வகையிலான கடுமையான மாரிகாலமே "ஜெயசிக்குறுய்" நடவடிக்கைகளின் தாமதத்திற்கான பிரதான காரணமென பொதுவாக ஊகிக்கப்பட்டது. கவச வாகனங்களும் போக்குவரத்து வாகனங்களும் சகதிகளுக்குள் சிக்கிக் கொண்டன. கனகராயன் ஆற்றிலிருந்து பெருக்கெடுத்தோடிய வெள்ளம் அரச படைகளை A9 நெடுஞ் சாலைக்குக் கிழக்குப்புறமாக அமைந்திருந்த நிலைகளில் இருந்து முன்னேறவிடாது தடுத்தது. மலேரியாவும், மஞ்சள் காய்ச்சலும் ஒரு பட்டாலியன் எண்ணிக்கையளவிலான துருப்புக்களை தாக்கியது. ("ரஷ்புட்" காலம் என இராணுவ வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படும் காலமே ஜேர்மனிய இராணுவத்தினர் மொஸ்கோ சென்றடைவதை பலவாரங்களாக தடுத்து வந்தது.) விடுதலைப் புலிகள், இரணைமடு அணையை உடைத்து ஜெயசிக்குறுய்யின் பாதையில் வெள்ளத்தை உருவாக்கி விடுவார்கள் என்ற ஊகமும் சில வட்டாரங்களில் இருந்தது. (இக்கருத்தைக் கொண்டிருப்பவர்களின் பிரதானமான குறைபாடானது இரணைமடுவில் இருந்து பெருக்கெடுத்தோடும் தண்ணீர் எந்தவிதமான சேதங்களையும் ஏற்படுத்தாமல் எதிர் திசையிலும் செல்லலாம் என்பதைக் கருத்தில் எடுக்காததே ஆகும்.)


இதனால், மாரிகாலம் முடிவடைந்தபின்னர் ஜெயசிக்குறுய்யின் அணிவகுப்பு தொடர்ச்சியாக இடம் பெறும் என பொதுவாக நம்பப்பட்டது. ஆனால், மழைகாலம் முடிந்து 2 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நடவடிக்கையின் ஈட்டி முனையாகக் கருதப்படும் மூன்று முழுமையான இராணுவப் பிரிவுகளை உள்ளடக்கிய

> **'தேர்வு செய்து தாமதப்படுத்தும்" நடவடிக்கையானது அரசு A9 நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்காக புறப்படுவதற்கு முன்னரேயே விடுதலைப் புலிகளின் தந்திரோபாய திட்டமிடும் பிரிவினால் வரையப்பட்ட விடயமாகவே தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் தந்திரோபாயத் திட்டமிடும் பிரிவானது அதன் உள்ளேயே இரகசியமானதாக காணப்படுகின்றது.**

அணிகள் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக எடுத்த முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. இராணுவத்தினராலும் பத்திரிகைகளாலும் வர்ணிக்கப்படும் விடுதலைப் புலிகளின் "தீவிர எதிர்ப்பு" இவ் இராணுவத்தின் கடுமையான முயற்சிகளை இடைநிறுத்திவிட்டது.

இதனால், வன்னியில் நிலவிய மாரிகாலம்தான் இராணுவ முன்னேற்றத்தை இடைநிறுத்தியதற்கான பிரதான காரணமல்ல என்பது தெளிவாகிவிட்டது. இராணுவத்தின் பிரச்சனைகளுக்கான காரணம் விடுதலைப் புலிகளின் 'தேர்வு செய்து தாமதப்படுத்தும்" போர் தந்திரோபாயமே ஆகும். புலிகளின் எதிர்ப்பு வேறுவழிகளற்று முன்னெடுக்கப்படும் நேரடியான எதிர்ப்பு நடவடிக்கை என்பதிலும் பார்க்க புலிகளின் மிகக் கணிப்பிடப்பட்ட போர் தந்திரோபாயம் என்பதே உண்மையாகும்.

இத் 'தேர்வு செய்து தாமதப்படுத்தும்" நடவடிக்கையானது



அரசு A9 நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்காக புறப்படுவதற்கு முன்னரேயே விடுதலைப் புலிகளின் தந்திரோபாய திட்டமிடும் பிரிவினால் வரையப்பட்ட விடயமாகவே தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் தந்திரோபாயத் திட்டமிடும் பிரிவானது அதன் உள்ளேயே இரகசியமானதாக காணப்படுகின்றது. இப்பிரிவைச் சேர்ந்த மனோ மாஸ்ரர் மட்டுமே வெளி உலகுடன் தொடர்புகொள்வதற்காக அனுமதிக்கப்பட்டவராவார். 'தேர்வு செய்து தாமதப்படுத்தும்" தந்திரோபாயத்தை தொடர்ந்து எதிரியின் மூன்று முழுமையான பிரிவுகளால் முனைப்புடன் முன்னெடுக்கப்படும் ஜெயசிக்குறுய் போர் நடவடிக்கையின் உண்மையான பலத்தை "கைப்பற்றுவதற்கான"" நடவடிக்கையாக புலிகள் கருதுகின்றார்கள்.

இத் தேர்வுசெய்து தாமதப்படுத்தும் தந்திரோபாயத்தின் பிரதான அம்சமானது நாம் முன்னர் சுட்டிக்காட்டியதுபோல் A9 நெடுஞ்சாலையில் இருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் பழைய கண்டி வீதியூடாக இராணுவத்தினரை சில தூரம் முன்தள்ளுவதே ஆகும். மாங்குளத்தில் புலிகளினால் காட்டப்படும் என்றுமில்லாத அளவிலான கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகள் இவ் நோக்கத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதாகத் தோன்றுகின்றது.

மாங்குளம் விடுதலைப் புலிகளுக்கு தற்போது தேவையற்றதாகும். அங்கு மக்கள் வாழவில்லை. நகரம் சிதறுண்டு போயுள்ளது. இராணுவத்தினரால் அதன் மேற்குப்புற உட்பகுதிகளுக்குள் அதிக தூரம் பரவ முடியாது அதனால், அப்பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகள் நிலைகளுக்கு எந்த அச்சுறுத்தல்களும் கிடையாது. இதனை விடுதலைப் புலிகள் அறிவார்கள். பின்னர் எதற்காக மாங்குளத்தினை புலிகள் கைகளில் வைத்துள்ளார்கள்?.

எவ்வளவு காலம் இராணுவம் தாமதப்படுத்தப்படுகின்றதோ அந்த விகிதத்தில் பழைய கண்டிவீதியூடாக முன்னேறுவதற்கு இராணுவம் கட்டாயப்படுத்தப்படும். மேலும், அதன் மேற்குப்புறமூடாக நகர்வதற்கான எந்தவித வழிகளும் அவர்களுக்குக் கிடையாது. ஏனெனில், இம்மேற்குப்புறப் பகுதிகளில் பொருத்தமற்ற பிரதேச அமைப்பு இராணுவத்தின் விநியோகத்திற்கு தடங்கல்களைக் கொண்டுவரும். மூன்றுமுறிப்பு, வன்னிவிளாங்குளம் சாலைகள் A9 நெடுஞ்சாலையில் இருந்து அதிக தூரத்தில் அமைந்துள்ளதுடன் கிளிநொச்சி நோக்கிய பாதையில் அமைந்திருக்கவில்லை. இதேவேளை A9ற்கு மேற்குப் புறமாக சில தூசிபடிந்த உள்ளூர் சாலைகளே மோட்டார் வாகனங்கள் கிளிநொச்சிக்கும் மாங்குளத்திற்கும் இடையே செல்வதற்கு வசதியாக உள்ளன.

இதனால், இராணுவத்தின் தற்போதைய கரிப்பட்ட முறிப்பு நிலைகளில் இருந்து வடக்குப் புறமாகக் கிளிநொச்சி நோக்கிச் செல்லும் பழைய கண்டி வீதியே விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும் அவர்களுக்குத் தரப்பட்ட தவிர்க்க முடியாத தீர்வாகும். மாங்குளத்தில் உள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளானது பழைய கண்டிவீதியூடாக இராணுவத்தை நகர்த்த கட்டாயப்படுத்துகின்றது.

பழைய கண்டிவீதியூடாக நகர்வது இரணைமடுப் பகுதிகளில் தம்மைச் சிக்கவைக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளதென்பதை இராணுவம் தற்போது தெளிவாக அறிந்துள்ளது. (பழைய கண்டிவீதியின் ஊடாக இரணைமடுக்குளம் நோக்கி ஓடும் சிற்றாறுகளும், கணக்கில் அடங்காத காட்டுப் பகுதிகளும் இங்கு உண்டு.) வன்னியின் மாரிகாலத்து கடுமைகளின் உண்மை

> **வன்னிப் போர் அரங்கில் தாக்குதலுக்கான முன் முயற்சிகள் இன்னமும் விடுதலைப் புலிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. எதிர்வரும் மாதங்களில் "ஜெயசிக்குறுய்" மீது விடுதலைப் புலிகள் நடத்தவுள்ள எதிர்த்தாக்குதல்கள் இராணுவ நகர்வைத் தாமதப்படுத்தும் கணிப்புடனும் களைப்படைந்த இராணுவம் இரணைமடுப் பகுதிக்குள் நுழைவதை எதிர்பார்த்துமே இடம்பெறும் என்பதை எதிர்வுகூறலாம்.**

யான விளைவுகளை, இப்பகுதியில் பெருக்கெடுத்தோடும் சிற்றாறுகள் ஒரு இரவிலேயே ஈவிரக்கமில்லாது பாய்ந்து ஓடி ஏராளமான பகுதிகளை வெள்ளத்தில் அமிழ்த்திவிடுவதில் காணலாம். இதன்காரணமாகத்தான் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டபோது A9 நெடுஞ்சாலை பழைய கண்டிவீதிக்கு மேற்குப்புறமாக உயர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டது.

கவச அணிகளே இரணைமடுப் பகுதியில் குறிப்பாக தாக்குதலுக்கு உள்ளாகக் கூடியவையாகும். (1988ம் ஆண்டு இங்கு புதையுண்டு போன இந்திய இராணுவத்தின் டாங்கி ஒன்றினை விடுதலைப் புலிகள் எடுத்துச்செல்ல முயற்சித்தனர்.)

வன்னிப் போர் அரங்கில் தாக்குதலுக்கான முன் முயற்சிகள் இன்னமும் விடுதலைப் புலிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. எதிர்வரும் மாதங்களில் "ஜெயசிக்குறுய்" மீது விடுதலைப் புலிகள் நடத்தவுள்ள எதிர்த்தாக்குதல்கள் இராணுவ நகர்வைத் தாமதப்படுத்தும் கணிப்புடனும் களைப்படைந்த அதேவேளை அதிதமான எச்சரிக்கை உணர்வுடனும் இராணுவம் இரணைமடுப் பகுதிக்குள் நுழைவதை எதிர்பார்த்துமே இடம்பெறும் என்பதை எதிர்வுகூறலாம்.

அடுத்த மாரிகாலப் பகுதியினுள் "ஜெயசிக்குறுய்" இராணுவத்தின் முன்னரங்க பிரதான பலத்தினை இங்கு சுற்றிவளைப்பதற்கும் அதேவேளை பின்னரங்குகளை துன்புறுத்துவதற்கும் புலிகள் முயல்வார்கள். "ஜெயசிக்குறுய்" திட்டமிடலாளர்கள் இதுபற்றி அறிந்திருப்பார்கள். இன்றைய சூழ்நிலையில் A9 நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்கி மன்னார் பூநகரி ஊடாக முன்னேறுவது அரசியல் ரீதியாக சாத்தியமற்றது. இது தோல்வியை ஒப்புக்கொள்வதற்கு சமனாகும்.

மாங்குளம் நகருக்கு அப்பால் ஆபத்தான அதேவேளை குறைவான மார்க்கங்களை ஆராய வேண்டிய நன்றியற்ற உழைப்பே இராணுவத்திற்கு மிஞ்சியுள்ளது.

26.03.98 மிட்வீக் மிரரின் இராணுவ ஆய்வாளர் தராகி எழுதிய ஆங்கில ஆய்வின் தழுவல்.


## வெரித்தாஸ் வானொலி இயக்குனர்

### வணபிதா. ஜெகத் கஸ்பார் அவர்களுடனான ஒன்றுகூடல்

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ச் சேவையின் இயக்குனர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் வணபிதா ஜெகத் கஸ்பார் ஏப்ரல் 12ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரை சுவிஸ்வாழ் தமிழீழ மக்களை சந்திப்பதற்காக விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். வெரித்தாஸ் வானொலி ஈழத்தமிழ் மக்களுக்கு ஓர் கலங்கரைவிளக்கமாக இருப்பதுடன், உண்மையில் பக்கசார்பற்ற ஓர் வானொலியாக தென்கிழக்கு ஆசியாவிலே பரந்துபட்டு வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தாய்மண்ணின் நிகழ்வுகளை வெளிக்கொணரும் ஒரு கருவியாகவும் செயல்பட்டு வருகின்றது. வெரித்தாஸ் வானொலியின் தயாரிப்பாளர்களில் ஜெகத் கஸ்பாரும், அன்ரோவும் முக்கியமானவர்கள். சிறீலங்கா இராணுவத்தால் வன்னி மீது தொடுக்கப்பட்டுள்ள நியாயமற்ற யுத்தத்தினால் வெளி உலகுடனான தொடர்புகளை இழந்து நிற்கும் தமிழ் உறவுகளோடு உறவாட வெரித்தாஸ் வானொலி முன்வந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது. வன்னிக்காடுகளில் ஒவ்வொரு போராளியும் முக்கியமாக காலையிலும், மாலையிலும் வெரித்தாஸ் சேவையைக்கேட்கத் தவறுவதில்லை. தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி உண்மையின் எண்ணங்கள், நேயரின் கடிதங்கள் போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகின்ற வெரித்தாஸ் வானொலி ஒவ்வொரு தமிழ் மக்களையும் அன்பு நெஞ்சம் என்று அழைப்பது உண்மையிலேயே நெஞ்சை நெகிழவைக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்க ஒரு வானொலியின் இயக்குனரான வணபிதா ஜெகத் கஸ்பாரின் சுவிஸ் விஜயம் தமிழீழ தேசபக்த மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். எனவே இவ் ஒன்றுகூடலில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஒன்றுகூடல் கால அட்டவணை

| இடம் | நடைபெறும் இடம் | காலம் | தொடர்பு |
|---|---|---|---|
| Lausanne | Foyer Union Ste, Pre du Marche 15, 1004 Lausanne | 12.04.98 பி.ப 4 மணி | 021 / 646 79 97 |
| Chur | im Evangelischen Kirchemeindehous Brandis, Brandisstrasse | 14.04.98 மாலை 8.00 மணி | 081 / 284 0014 |
| Thurgau | Hotel Bahnhof, Bahnhof Str. 45, 8580 Amriswil | 15.04.98 மாலை 5.00 மணி | 079 / 436 09 16 |
| Bern | Evang-ref. Kirchgemeindehouse Schosshalde, friedli Str. 22 | 16.04.98 மாலை 7.30 மணி | 079/ 407 78 75 |

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சுவிஸ் பணியகம்

## தெலுங்கு தேசக் கட்சியின் உறுப்பினர் சபாநாயகரானார்! பாரதிய ஜனதா அரசின் பலம் அதிகரிக்கின்றது!

பாரதிய ஜனதாக் கூட்டணி ஆதரவளித்ததால் தெலுங்கு தேசக் கட்சி உறுப்பினரான கன்ட் மோகன சந்திர பால யோகி சபாநாயகரானார். கடந்த



செவ்வாய் மக்களவையில் நடாத் தப்பட்ட புதிய சபாநாயகருக் கான தேர்வின்போது குரல் வாக்கெடுப்பின் மூலம் பால யோகி தெரிவானார். இவரது பெயரினை பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் முன்மொழிய உள்துறை அமைச்சர் அத்வானி வழிமொழிந்தார். இவரை எதிர்த்து காங்கிரஸ் - ஐக்கிய முன்னணியின் கூட்டு வேட்பாளரான பி.ஏ. சர்மா போட்டியிட்டார். இவரது பெயரை எதிர்க்கட்சித் தலைவரான சரத்பவார் முன் மொழிந்தார்.


குரல் வாக்கெடுப்பிலேயே ஆளும்கட்சி வேட்பாளரின் தெரிவு நிரூபிக்கப்பட்டதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே பால யோகியின் தெரிவை மக்களவை ஏற்றுக் கொண்டது. ஆனால் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜக் கட்சி இத்தெரிவு முறையை கடுமையாக விமர்சித்து சபையில் 'இது பாரதீய ஜனதா கட்சியின் ஒரு துரோகத் தனம்' என கூச்சலிட்டனர்.

பின்னர் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக சபையிலிருந்து மாயாவதி தலைமையில் அவரது கட்சியின் நான்கு உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட தெலுங்கு தேசக் கட்சியின் உறுப்பினர் பாலயோகி மிகக் குறைந்த வயதில் சபாநாயகர் பதவியை வகிப்பர் என்ற பெருமையை பெறுகின்றார். அவருக்கு வயது 47 ஆகும்.


அத்துடன் இப் பதவியை ஏற்கும் முதல் தலித் என்ற சிறப்பையும் இவர் பெறுகின்றார். ஆந்திரப் பிரதேசம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த பாலயோகி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் ஆந்திர பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டமும், சட்டக் கல்வியும் பெற்று வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய பாலயோகி, முதல்நிலை நீதிபதியாகத் தேர்வு பெற்று பயிற்சியும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஆந்திர மாநிலத்தை ஆளும் தெலுங்கு தேசக்கட்சியின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும் இருந்தவர்.




## இந்தியாவின் புதிய பாராளுமன்றத்தினர் முன் ஜனாதிபதி உரை நிகழ்த்தினார்

இந்திய மக்களவை — மாநிலங்களவையின் கூட்டுக்கூட்டம் பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராய



ணன் தனது உரையைப் படித்தார். அவர் கூறியதாவது:—

பாராளுமன்றத்தில் மெஜாரிட்டி இருந்தால் மட்டும் நல்ல நிர்வாகத்தை வழங்க முடியாது. முடிந்த வரை கருத்தொற்றுமை அடிப்படையில் ஆட்சி நடத்துவோம் இதற்காக எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை ஆலோசனை நடத்துவது அவசியமாகும். புதிய இந்தியாவை உருவாக்க கருத்தொற்றுமை, கூட்டுறவு அடிப்படையில் செயல்படாக வேண்டும்.

நாட்டின் மத சார்பற்ற தன்மையை அரசு பாதுகாக்கும். வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு உதவுவதுதான் இந்த அரசின் குறிக்கோளாகும். மூன்றாவது நாடுகளின் தலையீடு இல்லாமல் அண்டை நாடுகளுடன் நல்லுறவை வளர்க்க மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மத்திய—மாநில அரசுகள் இடையேயான உறவு தொடர்பாக சக்காரியா கமிஷனின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும். பஞ்சாயத்துகளுக்கு கூட அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து வழிமுறைகள் பரிசிலிப்போம். மாநிலங்களுக்கு நியமிக்கப்படும் கவர்னர்கள், பல சிக்கல்களில் மையக்குருவாக இருக்கிறார்கள். இனி மேல் கவர்னர் மாளிகைகள் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றும் மையங்களாக செயல்படாது.

பிரதமர் மந்திரிகள் உள்பட அரசியல் உயர் பதவி வகிக்கும் அனைவரின் மீதான ஊழல்



புகார்களை விசாரிக்க லோக்பால் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்காக 'மசோதா ஒன்று கொண்டு வரப்படும். அரசு இரகசியங்கள் சட்ட மறுபரிசிலனை செய்யப்படும். தேர்தல் நடைமுறையில் உள்ள குறைபாடுகள்தான், ஊழல் அரசியலில் குற்றமிழைப்போர் மலியக் காரணம் ஆதலால் தில்லுமுல்லு இல்லாத தேர்தல் நடக்க தேர்தல் சீர்திருத்த மசோதா கொண்டு வரப்படும்.

புதிதாய் அரசு அமைக்க உள்ளோர் தயாரிக்கும் அறிக்கையையே ஜனாதிபதி படிப்பதென்பது இந்திய அரசியல் சட்ட மரபாகும்.

## மேற்கு வங்கம் ஓரிசா மாநிலங்களைத் தாக்கிய பயங்கர சூறாவளி!

மேற்கு வங்கம் ஓரிசா மாநிலங்களில் சூறாவளியுடன் கூடிய கனமழை செவ்வாய்க்கிழமை தொடங்கியது. அப்போது 500 கி.மீ வேகத்தில் சூறாவளி வீசிய போது பேருந்து ஒன்று 10—15 அடி உயரத்திற்கு தூக்கி வீசப்பட்டதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு பள்ளிக் கூடம் இடிந்து விழுந்ததில் 57 குழந்தைகள், மாணவர்கள் கொல்லப்பட்டனர். 20 கிராமங்கள் வரையில் தரைமட்டமாயின. அவை குண்டு வீசித் தாக்கப்பட்டவை போல்காணப்படுவதாக மேலும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கிராமங்களில் இருந்து எத்தனைபேர் பிழைத்துள்ளனர் என்பது தெரியவில்லை.

இரு மாநிலங்களிலும் 200 பேர் சூறாவளியால் கொல்லப்பட்டதாகவும், 1200 பேர் படுகாயம் அடைந்திருக்கலாமென்றும் இன்னொரு தகவல் கூறுகின்றது. வானம் திடீரென்று சிவப்பானது. அருகில் உள்ள சுவர்ணரேகா ஆற்றிலிருந்து காற்று வீசத்தொடங்கியது.

திடீரென சூறாவளி தோன்றி எல்லாவற்றையும் அழித்துவிட்டது என நேரில் கண்ட சிலர் சூறாவளி பற்றி இப்படி விபரிக்கின்றனர்.

## ஐக்கிய முன்னணியில் இருந்து தெலுங்கு தேசக்கட்சி விலகல்

### தி.மு.க. தலைவர் கருணாநிதி கவலை!

ஐக்கிய முன்னணியிலிருந்து நாயுடு (தெலுங்கு தேசக்கட்சித் தலைவர்) விலகியது வேதனைக்குரியது. அவரும் சேர்ந்துதான் ஐ.முன்னணி உருவானது. ஐ.மு. ஆட்சியின்போது பிரச்சினைகள் ஏற்பட்ட போதெல்லாம் அதைத் தீர்க்கின்ற முன்னோடியாக நாயுடு இருந்தார். அவர் விலகியது தனிப்பட்ட முறையில் எனக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது. நாயுடு முடிவு தொடர்பான ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை. எனக்கும் நாயுடுவுக்கும் இடையே உள்ள நட்பை உங்களுடைய பலவிதமான கேள்விகள் திசை திருப்பிவிடக்கூடும் எனக் கவலையுடன் கருணாநிதி பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நிருபர்களுடன் பேசிய கருணாநிதி, ஐக்கிய முன்னணியிலிருந்து தி.மு.க. விலகுவதற்கான சூழ்நிலை ஏதும் ஏற்படவில்லை என்றும், பிரதமர் வாஜ்பாயை மரியாதை நிமித்தமாக சந்திக்க டில்லி செல்ல உள்ளதாகவும் அவ்வேளையில் சந்திரபாபு நாயுடுவை ஐ.முன்னணியில் மீண்டும் இணைக்கும் முயற்சியில் ஈடுபடமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## தஞ்சாவூரில் கொத்தடிமைகள்

தமிழகத்தில் உச்ச நீதிமன்ற ஆணையின்படி கொத்தடிமைத் தொழிலாளர்கள் பற்றிய ஆய்வு நடத்தப்படுகின்றது. இதன்படி பலநோக்கு சமூக சேவை மையம் எனும் அரசு சாராத தொண்டு நிறுவனம் தஞ்சாவூரில் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி, பலர் கொத்தடிமைகளாய் நடத்தப்படுவது கண்டறியப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சியின் துணையுடன் இக் கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 166 பேர் வரையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சியரால் விடுவிப்பு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் இவர்களது மறுவாழ்வுக்காக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இப்படி விடுவிக்கப்பட்ட செங்கல் அறுக்கும் தொழிலாளி ஒருவர், தனது முதலாளியிடம் பெற்ற ரூபா 5000 கடனுக்காக பல நாட்கள் கூலி இல்லாமல் வேலை செய்ததாக தெரிவித்தார். இப்போது இவர் விடுவிப்பு சான்றிதழ் பெற்றுள்ளதால் கடன் தொகையை திருப்பிச் செலுத்தத் தேவையில்லை.


## நீங்களும் தொழிலதிபர் ஆகலாமே?

இவ்வாண்டின் நடுப்பகுதியில் எமது நிறுவனம் தமது சேவையினை இந்திய வர்த்தகச் சந்தையினை நோக்கி நகர்த்தவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

1958-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது நிறுவனம், தற்போது சர்வதேச ரீதியில் 70 நாடுகளிலும் பிரதேசங்களிலும் தனது சேவையினை விஸ்தரித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வியாபார புரள்வாக ஈட்டியுள்ளது.

இப்போதுநாம் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வியாபார இயக்குநர்களைத் தேடுகிறோம். உங்களுக்கு எமது முயற்சியில் ஆர்வமிருப்பின் அல்லது குறைந்த மூலதனத்துடன் புதிய தொழில் முயற்சி ஒன்றை நீங்கள் தொடங்க திட்டமிட்டாலோ உதவக் காத்திருக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **T.K.C. International**

**24 Allée du Clos Fleury, Résidence les Séquoias, 45000 Orleans, France.**
**Tel: (33) 02-38629083 / Fax: (33) 02-38770485**


## இந்திய கடற்படையின் கிழக்கு பிராந்திய தளபதி தமிழகத்தில்

இரண்டு நாள் பயணமாக இந்திய கடற்படையின் கிழக்கு பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் வினோத் பஸ்ரீசா சென்னை சென்றுள்ளார். அங்கு அவர் தமிழகக் கடற்படைப் பொறுப்பு அதிகாரி ஏ.கே. மதனுடன் சந்தித்து பல்வேறு செயல்பாடுகள் குறித்து விவாதித்தாரென செய்திகள் கூறுகின்றன. சென்னை கடற்படைத் தளமான ஐ.என்.எஸ் அடையாறில் நடந்த கடற்படை வீரர்களின் அணிவகுப்பை பார்வையிட்ட பின்னர் அவர் ஆற்றிய உரையில் எவ்வித சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் கடற்படை தயார் நிலையில் இருக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

# ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான யாரையும் பாரதீய ஜனதா அரசு பாதுகாக்காது
## பாராளுமன்றத்தில் நிதி மந்திரி அறிவிப்பு!

இந்திய அரசின் இடைக்கால வரவு செலவு அறிக்கை மீதான விவாதத்தின்போது நிதி மந்திரி ஜஸ்வந்சின்கா இப்படித் தெரிவித்தார். 'ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான யாரையும் அவர்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் நாங்கள் பாதுகாக்கமாட்டோம். சட்டம் அதன் கடமையை செய்யும். அதிலிருந்து பின்வாங்காது. முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மீதான வழக்கு விசாரணையில் உள்ளது. அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று யாரும் கிடையாது என்பதையே இது காட்டுகின்றது' என்று தெரிவித்தார்.

அ.தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது, இந்தியன் வங்கியில் நடந்த ஊழல் பற்றிய விசாரணை நடத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தபோது, நிதி மந்திரி மேற்கண்டவாறான பதிலைத் தெரிவித்தார்.

பாரதீய ஜனதா அரசுக்கு அ.தி.மு.க. ஆதரவு தரவேண்டுமானால், சுப்பிரமணிய சுவாமிக்கு நிதிமந்திரி பதவி தர வேண்டும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்ததாகவும், அதை பாரதீய ஜனதா நிராகரித்ததாகவும் வெளிவந்த செய்தி எல்லோரும் அறிந்ததே. இப்போது சுவாமி இருக்க வேண்டிய இடத்தில் நிதிமந்திரியாக இருக்கும் ஜஸ்வந்சின்கா சபையில் வெளியிட்டிருக்கும் இக்கருத்து மறைமுகமாக ஜெயலலிதாவுக்கு எதிராகக் கூறப்பட்டது எனக் கருதப்படுகின்றது. ஜெயலலிதா மீது பல வழக்குகள் நடந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் ப.ஜ.க கூட்டணி அரசு வெற்றி
## ஆதரவாக 274 வாக்குகள் - எதிராக 261 வாக்குகள்

(புதுடெல்லி மார்ச் 28)

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசு பாராளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் சிறிய பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றியடைந்து தொடர்ந்து ஆட்சி செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது.

262 உறுப்பினர்களுடன் 21 கூட்டணிக் கட்சிகளுடனும் ஆட்சி அமைத்த பிரதமர் அடுத்தல் பிகாரி வாஜ்பாய் அரசு, பாராளுமன்றத்தில் தனது பலத்தை நிரூபிக்கும் தீர்மானத்தை நேற்று சமர்ப்பித்தது. 10 மணி நேரத்துக்கு அதிகமாக இத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. காங்கிரஸ் கட்சியும், ஐக்கிய முன்னணியும் பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு எதிராக கூட்டு அமைத்திருந்தன. ஐக்கிய முன்னணியில் இருந்து பிரிந்துசென்ற தெலுங்கு தேசம் கட்சியின் உறுப்பினர்கள் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக வாக்களித்ததால் அதன் பலம் 275 ஆகவும் உயர்ந்தது. ஆயினும் பா.ஜ.கூட்டணியிலுள்ள 1 உறுப்பினர் வாக்களிக்காததால் 274 ஆகவே, பெற்ற வாக்குகள் இருந்தன. அநேகமாக பா.ஜ கட்சிக்கு வாக்களிக்காத உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமியாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. எதிர்க்கட்சிகளுக்கு 261 வாக்குகள் கிடைத்தன.

# 'நான் இந்தியாவுக்கு துரோகம் செய்யவில்லை'
## - பாராளுமன்றத்தில் வாஜ்பாய்

சுதந்திரப் போராட்ட காலத்தின்போது பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாய் ஆங்கிலேயருக்கு ஆதரவாக செயல்பட்டதாக அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. 1942-ம் ஆண்டு நடந்த வெள்ளையனே வெளியேறு, போராட்டத்தின்போது பதேஸ்வர் என்ற இடத்தில் வாஜ்பாயும் போராட்டத்தில் குதித்தார். ஆனால் ஆங்கிலேய பொலிஸ் அவரைக் கைதுசெய்ததும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுதலையாகி விட்டார் என்ற குற்றச்சாட்டு அடிக்கடி எழுப்பப்பட்டு வருவது வழக்கமாகிவிட்டது. இந்த நிலையில் மக்களவையில் நேற்று பாாரதீய ஜனதா அரசு மீதான நம்பிக்கை தீர்மானம் மீது விவாதம் நடந்தபோது, இந்த பிரச்சினை எழுப்பப்பட்டது. பீகார் மாநில முன்னாள் முதல்வரும், ராஷ்டிரிய ஜனதாதள தலைவருமான லல்லு பிரசாத் யாதவ் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பினார்.

லல்லுவின் இந்த குற்றச்சாட்டை வாஜ்பாய் கடுமையாக மறுத்துப் பேசினார். 1942ம் ஆண்டு போராட்டத்தின்போது உந்த ஒரு நபரும் அரசுக்கு ஆதரவாக அப்ரூவர் ஆகவில்லை. அப்படி அப்ரூவர் ஆனதற்காக எந்த ஆதாரமும் இல்லை. 1942-ம் ஆண்டு போராட்டத்தின்போது எந்த ஒரு வழக்கிலும் நான் அப்ரூவர் ஆகவில்லை. யாரிடமும் மன்னிப்புக் கேட்கவில்லை. பிரிட்டிஸ் அரசுக்கு உதவி செய்யவும் இல்லை.

பதேஸ்வர் சம்பவம் பற்றிய பிரச்சினையை மீண்டும் மீண்டும் எழுப்புகிறார்கள். ஒவ்வொரு தேர்தலின்போதும் இந்த பிரச்சினை எழுப்பப்படுகிறது. பதேஸ்வர் சம்பவம் பற்றி நீதிபதி வான்சோ விசாரணை நடத்தியிருக்கிறார். என் மீதுள்ள குற்றச்சாட்டு உண்மையானது என்றால் அவரது விசாரணையில் அது தெரிய வந்திருக்கும். இந்தக் குற்றச்சாட்டை நான் எப்போதும் மறுத்து வருகிறேன். இது தொடர்பாக ஆதாரம் இருந்தால் லல்லுபிரசாத் அதை நேரில் சமர்ப்பிக்கலாம். அதற்கு பதில் தர நான் தயாராக இருக்கிறேன். என்று வாஜ்பாய் தெரிவித்தார்.

# ராஜீவ் கொலை வழக்கு: 26 பேரின் தூக்குத் தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் தடை உத்தரவு

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை விசாரித்த சிறப்புத் தனி நீதிமன்றம், குற்றம்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்திருந்தது தெரிந்ததே. இந்திய வரலாற்றிலே ஒட்டுமொத்தமாக 26 பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது இந்த வழக்கில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்புத் தனி நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப்பட்டிருந்தது. தூக்குத் தண்டனை பெற்ற 26 பேரின் சார்பில் வக்கீல் துரைசாமி அப்பீல் செய்திருந்தார்.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் 26 பேரின் தூக்குத் தண்டனைக்கும் தடைவிதித்து உத்தரவிட்டது.

# 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் 'கும்பமேளா' ஒரு கோடி பக்தர்கள் கூடுகிறார்கள்

உத்தரப்பிரதேசத்தில் உள்ள அரித்துவார் நகரில் கங்கைக் கரையில் 'கும்பமேளா' நடைபெறுகின்றது. கும்பகோணம் மாமாங்கம் போல், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவது இக் 'கும்பமேளா'. முற்றும் துறந்த நிர்வாணச் சாமியார்கள் கூட்டம் கூட்டமாக வருவது இந்த விழாவின் தனிச்சிறப்பாகும். வழக்கமாக 'கும்பமேளா' கூட்டத்தில் சிக்கி பலர் இறப்பது வழமை. சென்ற (1986) 'கும்பமேளா'வின் போது ஒரு பாலம் இடிந்து விழுந்து நூற்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் இறந்தார்கள்.

இந்த ஆண்டு ஒரு கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால் கங்கைக் கரையில் 22 கி.மீற்றர் தொலைவுக்கு படித்துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 32 பாலங்கள் கங்கை ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ளன.

# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ ஐ.ஆர்.எஸ். அகில இந்திய வாசகர்கள் கருத்துக் கணிப்பின்படி (IRS `98 Survey Finding) தினத்தந்தி 82, 83 இலட்சம் வாசகர்களைக் கொண்டு இந்திய நாளிதழ்களிலேயே முதல் இடம் பெற்று இமாலய சாதனை படைத்துள்ளது.

*– தினத்தந்தி பத்திரிகை நிறுவனத்தின் விளம்பரம்.*

❀ ❀ ❀

☺ உதயசூரியன் ஆட்சிதான் நடக்கின்றது. என்றாலும் தமிழகத்தில் வெளிச்சமில்லை. ஊரெல்லாம் இருண்டுதான் கிடக்கின்றது. காரணம் தமிழக அரசு அறிவித்துள்ள கடுமையான மின்வெட்டு.

*– நக்கீரன் இதழில் ஒரு கட்டுரை.*

❀ ❀ ❀

☺ ரஜனி என்ற மந்திரச் சொல்லுக்கு ஓட்டுக்கள் என்கிற ஜீவாமிர்தம் கிடைக்கும் என்ற அரசியல் தலைவர்களின் பிரமை உடைபட்ட தருணத்திலிருந்து 'மீடியா' என்கிற மிகப்பெரிய விசையினால் ஊதி பிரமாண்டமாக்கப்பட்ட பலூன் ஒன்று, சாமானியரால் அது வெறும் பலூன்தான் என்று நிரூபிக்கப்பட்டுவிட்ட அதிர்ச்சியை ரஜனி தாங்குவாரா என்று எனக்குத் தெரியாது. ஆனால், இந்த அதிர்ச்சி வைத்தியத்தினால் நமது நடிகர்களும் அரசியல்வாதிகளும் விழித்துக்கொள்வார்களானால் தமிழ்நாட்டிற்கு நல்லது.

*– 'இந்தியா டுடே' யின் அசோசியேட் எடிட்டர் வாஸந்தி*

❀ ❀ ❀

☺ தமிழ் உட்பட இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 19 தேசிய மொழிகளையும் இந்திய அரசின் ஆட்சி மொழிகளாக எப்படி ஆக்குவது, எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை ஆராய குழு அமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை, நான் போராடி தேசிய செயல்திட்டத்தில் சேர்க்கவைத்தேன். தமிழை தேசிய ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற நமது நீண்டகால இலட்சியத்தை அடைவதில் முதல் படியில் வெற்றிபெற்றுவிட்டேன்.

*– தனது கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் செல்வி ஜெயலலிதா*

❀ ❀ ❀

☺ சென்னை 'சத்தியம்' தியேட்டரில் வெடிகுண்டு என்று வந்த தொலைபேசித் தகவலைத் தொடர்ந்துதான் அண்ணாசாலை காவல்நிலையத்திலிருந்து ராமசாமி என்ற தலைமைக் காவலரும், சங்கரன் என்ற கான்ஸ்டபிளும் சைக்கிளில் அண்ணாசாலை வழியாகப் போயுள்ளனர். அப்போது இந்தப் பொலிசார் கண்ணில் பிளாட்பாரத்தில் இருந்த இந்த ரெக்சின் பாக் தென்பட..... அதை ஏதோ புதையல் கிடைத்த மாதிரி சைக்கிளில் வைத்து தமது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்தனர். பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பார்த்த போது அது டைம் பாம் என்று தெரிந்த பின்னர் தான் அலறியடித்துக்கொண்டு அந்த பாக்கை ஸ்ரேசனுக்கு எதிரே இருந்த புல்தரையில் கொண்டுபோய் வைத்துவிட்டு வெடிகுண்டு நிபுணர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

*– ஜூனியர் விகடனில்*

❀ ❀ ❀

☺ பாரதீய ஜனதா கட்சியை மதவாதக் கட்சி என்று விமர்சித்த ஐக்கிய முன்னணியில் இருந்த சில் கட்சிகள், பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஆதரவு அளிப்பதால் அக்கட்சி மதவாதக்கட்சி அல்ல என்ற முடிவை அவை எடுத்துவிட்டனவா என்று கேட்கிறீர்கள். நல்ல கேள்வி, கேட்கப்பட்ட இடம்தான் தவறு.

*– பத்திரிகையாளர்களின் கேள்வி ஒன்றுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பதில்.*

❀ ❀ ❀

☺ இப்போது உங்களிடம் ஒன்று சொல்கிறேன், நாங்கள் தீவிரவாதம் பண்ணுறதா ராமகோபாலன் அறிக்கை விடுகின்றாரே, இந்து முன்னணியினர் எங்கெங்கு ஆயுதம் வைத்துள்ளார்கள், தீவிரவாதப் பயிற்சி பெறுகிறார்கள் என்ற லிஸ்டை நான் வெளியிடட்டுமா?

*– கோவை குண்டு வெடிப்பு தொடர்பாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள 'அல் உம்மா' இயக்கத் தலைவர் பாஷா பத்திரிகையாளரிடம்.*

❀ ❀ ❀

☺ ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட மாளிகையில் பூட்டப்பட்ட அறையில் ஜஸ்வந்சிங்குக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. பூட்டிய அறையில் எதைப்பற்றியமல்லாம் பேசினார்கள் என்பது தெரியவில்லை. சிட்டோர்கர் தொகுதி மக்களின் மனதை கவரமுடியாத ஜஸ்வந்சிங், (இத்தொகுதியில் இவர் போட்டியிட்டுத் தோற்றவர்) ஜெயலலிதாவின் இதயத்தை கவர்ந்துவிட்டார். பூட்டிய அறைக்குள் என்ன நடந்ததோ?

*– மார்க்சிய கம்யூனிஸ்ட் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி பாராளுமன்ற விவாதத்தின்போது.*

❀ ❀ ❀

☺ பள்ளிப்பாளையம் தி.மு.க. ஒன்றியச் செயலாளராக இருப்பவர் வெப்படை செல்வராஜ். சமீபத்தில் குமாரபாளையம் காவல் நிலையத்துக்குச் சென்ற இவர் ஏட்டு (கான்ஸ்டபிள்) சிங்கிடம் தனக்கு மாமுல் வேண்டுமென்று கேட்டாராம். நான் எப்படியுங்க மாமுல் தரமுடியும் என ஏட்டு திருப்பிக்கேட்க, 'கள்ளச் சாராயம்-கஞ்சா-மற்றும் பிராந்திக் கடையில் நீங்க மாமுல் வாங்கிறீங்கல்ல அதில எனக்கும் சேர்த்து வாங்கிக் குடுங்க என்று சொன்னாராம். செல்வராஜ் செய்வதறியாமல் திகைக்கிறார் ஏட்டுசிங்.

*- 'நெற்றிக்கண்'ணிலிருந்து.*

# உலகச் செய்திகள்

## அமெரிக்கா: மாணவர்கள் நடத்திய வெறியாட்டம் 4 மாணவிகள் 1 ஆசிரியை சுட்டுக்கொலை

அமெரிக்காவின் அர்கன்சாஸ் மாநிலத்திலுள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நடத்திய துப்பாக்கி வெறியாட்டத்தில் 4 மாணவிகளும் 1 ஆசிரியையும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 9 மாணவிகளும் 1 ஆசிரியையும் படுகாயமடைந்துள்ளனர்.

கிராமப் பகுதி ஒன்றில் அமைந்திருக்கும் நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த மூன்று மாணவர்களே இந்த வெறியாட்டத்தை நடத்தியிருக்கின்றார்கள். பாடசாலைக் கட்டடத்துக்குள் மறைந்திருந்த ஒரு மாணவன் பாடசாலையில் தீப்பிடித்து விட்டதாக அபாய மணி எழுப்ப, அங்கிருந்த எல்லோரும் அவசர அவசரமாக வெளியேறியபோது அங்கிருந்து 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள மரங்களுக்குப் பின்னால் மறைந்திருந்த 11, 13 வயது நிரம்பிய இரண்டு மாணவர்கள் தங்கள் வசமிருந்த பிஸ்டலாலும், ரைபிளாலும் கண்மூடித்தனமாக சுட்டதிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.



கொல்லப்பட்ட நான்கு மாணவிகளும் 11இற்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கைதுசெய்யப்பட்டிருக்கும் இந்த மாணவர்கள் இவ்வாறு நடந்துகொண்டதற்கான காரணம் எதுவும் தெரியவில்லையாயினும், காதல் தோல்வி காரணமாயிருக்கலாம் என்று இவர்களின் நண்பர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மூன்று மாணவர்களும் பாடசாலையில் ஒழுங்கீனமாக நடந்துகொள்பவர்கள் என்று ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படுகொலைகள் நடந்த அர்கக்ன்சாஸ் மாநிலம் அமெரிக்க அதிபர் பில்கிளின்டனின் சொந்த மாநிலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ்: தேசிய முன்னணிக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

(பாரிஸ் மார்ச் 29)

பிரான்சின் அதிதீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணிக்கு எதிராக நேற்று (சனி) பிற்பகல் பாரிசிலும் மற்றும் பிரான்ஸ் முழுவதிலுமுள்ள பிரதான நகரங்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.




பிரான்சிலுள்ள 45 அமைப்புக்கள் இணைந்து. நடத்திய இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பாரிசில் மட்டும் 80 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். லியோன், மார்சய், போர்தோ, ஸ்ராஸ்பூர்க், ரூபான் ஆகிய நகரங்களில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

'தேசிய முன்னணியின் வளர்ச்சி பிரான்சுக்கு பிடித்துள்ள நோய். இனவாத அபாயத்தை நோக்கி பிரான்ஸ் பயணிக்கிறது. குடியரசு அமைப்பை தொடவேண்டாம். முதலான பல்வேறு கோசங்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் எழுப்பப்பட்டன.

பிரான்சில் கடந்த வாரம் நடந்து முடிந்த மாகாணசபை, பிரதேச சபை தேர்தல்களில் வலதுசாரிக் கட்சியான UDF ன் 5 பிரதேசத் தலைவர்கள், தேர்தல் வெற்றிக்காக அதிதீவிர வலது சாரிக்கட்சியான தேசிய முன்னணியுடன் சேர்ந்து கொண்டு பிரான்ஸ் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் UDF கட்சிக்குள்ளும் பிளவை உண்டாக்கியது.

விடுதலை சமத்துவம், சகோதரத்துவம் என்கின்ற கொள்கைத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியரசு அமைப்பை தேசிய முன்னணியின் இனவாதக் கொள்கைகள் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. தேசிய முன்னணித் தலைவர்கள் மனிதனின் மரபியல் உயிரணுக்களுக்குள் எப்படிச் சமத்துவம் இல்லையோ, அவ்வாறே இனங்களுக்கிடையிலும் சமத்துவம் கிடையாது என்று சொல்லி வருகின்றனர். இவ்வாறு சொல்லியதற்காகவே பல தடவைகள் பிரான்சின் பல்வேறு நீதிமன்றங்கள் தேசிய முன்னணித் தலைவர் லூபென்னுக்கும் அவரது கட்சியின் பிரதேசத் தலைவர்கள் சிலருக்கும் தண்டனை வழங்கியிருக்கின்றன.

தேர்தல் வெற்றிக்காக தேசிய முன்னணியுடன் வலதுசாரிகள் கூட்டு வைத்துக்கொண்டதை பெரும்பாலான பிரெஞ்சு மக்கள் விரும்பவில்லை.

## ரஷ்ய அமைச்சரவை கலைப்பு

(மாஸ்கோ - மார்ச் 25)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் ரஷ்ய அமைச்சரவையை திடீரெனக் கலைத்துள்ளார். இந்தக் கலைப்பினால் அவருக்கு மிகவும் நெருக்கமான பிரதமர் விக்சர் ஸ்டப்னோவிச் ஷெர்னோமிர்டின் கூட பதவி விலக்கப்பட்டுள்ளார்.



சுவாசப்பை சீர்கேட்டு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுத் திரும்பிய எல்சின் மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கை, ரஷ்யாவிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. தனக்குப் பின் தன்னுடைய வாரிசாக பிரதமர் ஷெர்னோமிர்டினைக் கொண்டு வருவார் என எதிர்பார்க்கப்பட்டவேளையில், அவரையும் அவரது அமைச்சரவையையும் எல்சின் தூக்கி எறிந்தது அவரது ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

1989இலிருந்து வளர்ச்சியடைந்து வந்த எல்சினின் செல்வாக்கு தற்போது எதிர்மாறாக வீழ்ச்சியடைந்து செல்கிறது. அவரது எதிரிகளான கம்யூனிஸ்டுகள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வருகின்றார்கள்.

எல்சின் ரஷ்யாவின் உலகப் புகழை மாசடையச் செய்து விட்டார் என்ற குற்றச்சாட்டை அவரது எதிரிகள் அவருக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

தன்னுடைய அரசாங்க மட்டத்தில் உள்ள ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள் தனது செல்வாக்கு குறைந்து போவதற்கு காரணம் என நம்பும் எல்சின், தனது கட்சிக்கு புத்துயிரூட்டவே இந்த ஆட்சிக் கலைப்பை செய்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## மலேசியா: இந்தோனேசிய அகதிகள்-பொலிஸ் மோதல் 24 பேர் பலி - பலர் படுகாயம்

(கோலாலம்பூர் - மார்ச் 27)

மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு அண்மையில் அமைந்திருந்த அகதிகள் தடுப்பு முகாம் ஒன்றில் தங்கியிருந்த இந்தோனேசிய அகதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 24 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர்.



அந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தோனேசிய அகதிகளை, அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பும் முயற்சியில் பொலிசார் கடுமையான முறையில் நடந்துகொண்டதால் இந்தோனேசிய அகதிகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டதாக சொல்லப்படுகின்றது.

பொலிசாரின் தகவலின்படி இந்தோனேசியர்கள் பக்கத்தில் 8 பேரும் பொலிஸ் தரப்பில் ஒருவருமாக மொத்தம் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 27 பொலிசார் காயமடைந்துள்ளனர். ஆனால் சுதந்திரமான தகவல்கள் 24 அகதிகள் கொல்லப்பட்டதாகவும், நூற்றுக்கு அதிகமானோர் காயங்களுக்கு உள்ளானதாகவும் கூறுகின்றன.

இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பத்தாயிரத்துக்கும் அதிகமான இந்தோனேசியர்கள் மலேசியாவுக்கு சட்டபூர்வமற்ற முறையில் நுழைந்திருக்கின்றார்கள். இவர்களைத் தேடிக் கண்டுபிடித்து சிறப்பு முகாம்களில் அடைத்துவைத்து திருப்பி அனுப்புவதில் மலேசிய அரசு குறியாக இருக்கிறது. இந்தப் பணிக்காக 3500 சிறப்புப் பொலிசார் கடமைக்கு அமைர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த வார இறுதிவரை 1495 இந்தோனேசிய அகதிகள் கட்டாயமாக அவர்களது சொந்தநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அல்ஜீரியாவில் தொடரும் வன்முறை 27 குழந்தைகள் உட்பட 72 பேர் பலி

(அல்ஜியர்ஸ் மார்ச் 28)

அல்ஜீரியாவில் தொடரும் வன்முறைக்கு 72 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த வியாழனும் வெள்ளியும் தனித்தனியாக 3 வெவ்வேறு இடங்களில் மோதல் இடம் பெற்றுள்ளது. அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜீயர்சிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் நடந்த இந்த மோதலில் 27 குழந்தைகள் உட்பட 57 பொதுமக்களும், 9 இஸ்லாமியத் தீவிரவாதிகளும் 1 அல்ஜீரிய இராணுவச் சிப்பாயும் உயிரிழந்ததாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொது மக்களை இஸ்லாமிய தீவிரவாதிகளே சுட்டுக் கொன்றதாக அல்ஜீரிய பாதுகாப்புத் துறையினர் தெரிவித்த போதிலும், தமக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் அரசபடையினரே இத்தகைய படுகொலைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று, இஸ்லாமிய தீவிரவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# துருக்கி: இராணுவம் அரசு உடன்பாடு

*(இஸ்தம்புல் - மார்ச் 29)*

இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக போராடுவது தொடர்பாக துருக்கி அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முறுகல்நிலை, தணிய ஆரம்பித்துள்ளது.

துருக்கிப் பிரதமர் மேசத் ஜில்மாஸ் ஆயுதப் படைகளின் தளபதிகளுடனும், ஜனாதிபதி சுலைமான் டேமிரலுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்தே இந்த முறுகல் நிலை தணிய ஆரம்பித்துள்ளது. கடந்த வருடம் பதவி ஏற்ற ஜில்மாஸின் சிறுபான்மைக் கூட்டணி அரசு இஸ்லாமிய தீவிரவாதத்தையும் அடிப்படைவாதத்தையும் கட்டுப்படுத்துவதில் அசுமந்தப்போக்கைக் கடைப்பிடித்து வருவதாக இராணுவம் குற்றம் சாட்டியதையடுத்து இந்த முறுகல் நிலை தோன்றியது.

இராணுவத்தினர் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக போராட எமக்குத் தெரியும் என்று பிரதமர் இல்மாஸ் இராணுவத்தினருக்குப் பதிலளிக்க, தாங்கள் போராடப் போவதாக இராணுவத் தளபதிகள் அறிவித்திருந்தனர். இது துருக்கியில் ஒரு இராணுவப் புரட்சியை உண்டாக்கிவிடும் என்ற அச்சத்தை தோற்றுவித்திருந்தது.

இந்த நிலையில் இராணுவத் தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பிரதமர், அரசும் இராணுவமும் இணைந்து இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும், தீவிர வாதத்திற்கும் எதிராகப் போராட முன்வரவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# அமெரிக்காவில் 20 வீதமான சிறுவர்கள் பட்டினியால் வாட்டம்

*(வாஷிங்டன் மார்ச் 28)*

உலகின் பணக்கார நாடான அமெரிக்காவில் 20%மான சிறுவர்கள் 1996-ம் ஆண்டு பட்டினியால் வாடியதாக அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பெரும்பாலும் கறுப்பின குழந்தைகளே பட்டினியால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள இந்த ஆய்வு - 1976ல் இருந்த நிலையை விட இது 6 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் கூறியுள்ளது.

வேலையின்மையும், அதைத் தொடர்ந்து வரும் வறுமையுமே இந்தச் சிறுவர்கள் பட்டினியால் பாதிக்கப்படுவதற்கான காரணம் எனத் தெரிவித்துள்ள ஆய்வாளர்கள்; இந்தப் பட்டினிப்பாதிப்பு சிறுவர்களை குற்றச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றதென்றும் கூறியுள்ளது.

# கொசோவாவில் மீண்டும் மோதல்கள்

*(பெல்கிரேட் மார்ச் 25)*

யூகோஸ்லாவியாவின் சர்ச்சைக்குரிய மாநிலமான கொசோவா'வில் செர்பியப் பொலிசாருக்கும் அல்பேனியர்களுக்குமிடையில் மீண்டும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

செர்பியர்கள் மீது மேலாதிக்கத் தடைகள் கொண்டுவருவதா இல்லையா என்பது பற்றி ஆராய்வதற்காக சர்வதேச மட்டத்தில் கூட்டம் ஒன்று இடம் பெறவிருக்கும் இந்த வேளையில் இந்தப் புதிய மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

'துப்ரவா' கிராம மக்களை செர்பியப் பொலிசார் அங்கிருந்து வெளியேற்ற முற்பட்டதையடுத்து இந்த மோதல்கள் ஆரம்பித்தன. இந்த மோதலில் 4 கொசோவா போராளிகளைச் சுட்டுக் கொன்றதாக செர்பிய பொலிசார் தெரிவித்துள்ள அதே நேரத்தில், துப்ரவா கிராம மக்களை தாக்க முற்பட்ட செர்பியப் பொலிசாரை தாம் அடித்து விரட்டிவிட்டதாக அல்பேனியர்களின் கொசோவா தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ் ஐ.நா. தனது பணிகளை நிறுத்தியது

ஆப்கானிஸ்தானின் தென் மேற்குப் பகுதியில் தாம் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்திவிட்டதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா ஊழியர்கள் மீது ஆப்கானிஸ்தானின் தலிபான் அமைப்பினர் நடத்திய தாக்குதல்களே தமது இந்த முடிவுக்குக் காரணம் என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

'சரா ரசல்' என்ற அந்த அதிகாரி பாகிஸ்தானில் வைத்து செய்தியாளர்களுக்கு தகவல் தருகையில் 'ஆப்கானிஸ்தானின் தென்மேற்கு மாநிலமான கந்தர் மாநிலத்தில் ஐ.நா மேற்கொண்டு வரும் மனிதாபிமானச் செயற்பாடுகளில் தலிபான்கள் தொடர்ந்து தலையிட்டு வருகின்றனர். இந்த மாநிலத்திலுள்ள தலிபான் இயக்கத்தின் பொறுப்பாளர் ஐ.நா. அலுவலகத்திற்குச் சென்று ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியான ஏரஸ்மன் ஈபொம் என்பவரை கன்னத்தில் அறைந்துள்ளார். அதைவிட கந்தர் மாநிலத்திலுள்ள ஐ.நாவின் சர்வதேச ஊழியர்கள் 14 பேரை அங்கிருந்து வெளியேறும் தலபான்கள் கேட்டுள்ளனர். ஐ.நாவுக்கு பணிபுரியும் 120உள்ளூர் ஊழியர்களையும் பணிக்குச் செல்லாது வீடுகளில் இருக்குமாறு தலிபான் அமைப்பு உத்தரவிட்டுள்ளது. இதனாலேயே எமது பணிகளை நாம் நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# அயர்லாந்தில் பொலிஸ் நிலையம் மீது மோட்டார் தாக்குதல்

*(டப்ளின் மார்ச் 25)*

வட அயர்லாந்தில் அதி உயர் பாதுகாப்பான பகுதி ஒன்றில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் மீது மோட்டார் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தற்போது அயர்லாந்து பிரச்சினை தொடர்பாக நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்காக IRA கெரில்லாக்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள் என ஐரிஷ் பொலிசார் தெரிவித்திருக்கின்றனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் நிலையத்தில் பிரித்தானிய இராணுவப் பிரிவு ஒன்றும் நிலை கொண்டிருந்ததாக சொல்லப்படுகின்றது. இத்தாக்குதலால் பொலிஸ் நிலையக் கட்டடம் சேதத்துக்குள்ளாகியதுடன், சில பொலிசாரும் காயமடைந்துள்ளனர். வட அயர்லாந்துப் பொலிசார் இதில் ஏற்பட்ட சேத விபரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

# அமெரிக்கா மீது லிபியா விசாரணை

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. யின் முன்னாள் தலைவர் உட்பட 8 அமெரிக்கர்களுக்கு எதிரான விசாரணையை நடத்துவதற்கு லிபியா திட்டமிட்டுள்ளது.

1986-ம் ஆண்டு லிபியாவின் பெங்காசி, திரிப்போலி ஆகிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்தி பலர் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தார்கள் என்று இவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

லிபியாவின் குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கும் இந்த விசாரணை குற்றவாளிகள் சமூகமளிக்காத நிலையிலேயே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவந்துவிட்டது
பாலம்
பெப்ரவரி 1998

# வாரக் குறிப்பு

**22.03.1998 ஞாயிற்றுக்கிழமை**

- ஈராக் மீதான வர்த்தக மற்றும் பொருளாதாரத் தடை விரைவில் நீக்கப்படுமென ஐ.நா பொதுச் செயலர் கோபி அனான் அறிவிப்பு
- தாய்லாந்தில் 7 கட்சிகளின் கூட்டு முன்னணி அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி.
- அங்கோலாவில் மிக் 23 ரக ஜெட் விமானம் விபத்தில் சிக்கியது-விமானி பலி.
- சிங்கப்பூரில் சட்ட விரோதமாகக் குடியேறிய 117 வெளிநாட்டவர்களுக்கு 4 முதல் 6 பிரம்படிகளும் 5வார சிறைத்தண்டனையும் விதித்து சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பு.

**23.03.1998 திங்கட்கிழமை**

- தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலியப் படைகளை திருப்பி அழைக்கும் சாத்தியம் குறித்து ஐ.நா செயலாளர் கோபி அனான், சிரிய வெளிநாட்டு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். லெபனானின் கூட்டாளியான சிரியா இந்த முயற்சிக்கு உதவும் என அனான் நம்பிக்கை.
- துருக்கியின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கடும் பனி காரணமாக 7 பேர் மரணம்.
- கொலம்பியாவில் 'பாக்' போராளிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் பல மணிநேர மோதல். 9 பேர் பலி என அறிவிப்பு.
- முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான மோல்டாவாவில் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுக்கள் முன்னணியில்.

**24.03.1998 செவ்வாய்க்கிழமை**

- சாட்டில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுப்படைகளை வெளியேற்ற வேண்டும் என்றுகோரி, சாட் மீட்பு முன்னணி என்ற அமைப்பு, பிரெஞ்சு உல்லாசப் பிரயாணி ஒருவரை கடத்திச் சென்று பணயம் வைத்துள்ளது.
- தனது இராணுவ பலத்தை கட்டி எழுப்பும் கிரேக்க சைப்பிரசின் முயற்சிகளை முறியடிக்க, தாம் படைப் பலத்தை பிரயோகிக்கப்போவதாக துருக்கி எச்சரிக்கை.
- டைட்டானிக் திரைப்படத்துக்கு 11 ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. சிறந்த நடிகர் நடிகை, சிறந்த அமைப்பு, சிறந்த ஒலி ஒளிப்பாதிப்பு, காட்சிப்பாதிப்பு, எடிட்டிங் சித்திரத்தயாரிப்பு, மூலக் காட்சி, பாடல், படம் ஆகியவற்றுக்கான சிறந்த விருதை அந்தப்படம் பெற்றுள்ளது. 1959-ல் வெளியான 'பென்கர்' என்றபடமே முன்பு 11 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றிருந்தது.

**25.03.1998 புதன்கிழமை**

- ஐ.நாவின் பொருளாதாரத்தடையினால் மருந்துப் பொருட்கள் கிடைக்காமல் உயிரிழந்த 32 குழந்தைகளின் மரண ஊர்வலத்தில் அமெரிக்காவுக்கு எதிராக கோசம் எழுப்பப்பட்டது.
- 'அந்தெ ரெக்ஸ்' வாயுவை ஈராக் அரசாங்கம் பிரிட்டனுக்குள் கடத்தி வரத் திட்டமிட்டுள்ளது என்ற பிரித்தானிய அரசின் குற்றச்சாட்டை ஈராக் மறுப்பு
- 52 வயதான ரொடால் கொங் அமெரிக்க மதகுரு ஒருவர் சிறுவர்களுடன் பாலியல் குற்றம் புரிந்ததாக நீதி மன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவருக்கு 2 முதல் 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**26.03.1998 வியாழக்கிழமை**


- வடகென்யாவில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 மாணவிகள் கொல்லப்பட்டுள்ளனர்.
- முன்னாள் சோவியத்யூனியன் உடைந்து சிதறியபின் அதிலிருந்து பிரிந்து சென்ற தஜிகிஸ்தான், அவ்வாறு பிரிந்து சென்ற ஏனைய நாடுகள் உருவாக்கிய மத்திய ஆசிய யூனியன் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளது.
- வட-தென் கொரிய செஞ்சிலுவைச் சங்கங்களுக்கு இடையில் நடந்த பேச்சுவார்த்தை, உணவு உதவி தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக முறிவடைந்துவிட்டதாக அறிவிப்பு.
- மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு இஸ்ரேல் முன்நின்று உழைக்கவேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் கோபி அனான் வேண்டுகோள்.

**27.03.1998 வெள்ளிக்கிழமை**

- ஈராக் அதிபர் சதாம் ஹுசேனுக்கு சொந்தமான மாளிகைகளில் ஆயுதப் பரிசோதனை மேற்கொள்ளும் ஐ.நா. வின் திட்டப்படி பக்தாத்திலுள்ள ரத்வானியா மாளிகையில் முற்றுமுழுதான பரிசோதனைகள் செய்து முடிக்கப்பட்டதாக ஐ.நா. அதிகாரிகள் அறிவிப்பு
- இத்தாலியின் மத்திய பகுதியில் பூகம்பம். சேதவிபரம் உடனடியாகத் தெரியவில்லை. ரோம் நகரிலும் பூகம்பத்தின் தாக்கம் உணரப்பட்டது.
- 1937 ம் ஆண்டு இடம்பெற்ற விமான விபத்தொன்றில் கொல்லப்பட்ட ஒருவரால் எழுதப்பட்டு, அந்த விபத்தில் எரிந்து போகாமல் தப்பிய கடித உறை ஒன்று 7475 பவுண்ஸ்சுகளுக்கு இன்று ஏலத்தில் விற்கப்பட்டது. 23 வயதான ரெபேர்ட் மொசார் என்ற விமானப் பணியாளரின் முகவரியே அந்தக் கடித உறையில் இருந்தது.

**28.03.1998 சனிக்கிழமை**

- பிரான்சில் Roissy விமானநிலையத்திலிருந்து Air France விமானத்தில் மாலி நாட்டுப் பிரசைகள் 5 பேரை அவர்களது தாய்நாட்டுக்கு நாடு கடத்த மேற்கொண்ட முயற்சி அந்த விமானத்தில் இருந்த பயணிகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.
- பெருவில் இடம்பெற்ற விமான விபத்தில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
- ஆப்கானிஸ்தானின் தலிபான் இயக்க தலைவர், எதிர்த்தரப்பு கைதிகளை கொலை செய்ய வேண்டாம் என்று தமது உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக காபூல் வானொலி அறிவிப்பு. இந்த உத்தரவை மீறுபவர்கள் இஸ்லாமிய நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.


கண் முன்னே ஓடுவது என்ன!
Tamil Sports Festival
1998
CHIEF GUEST
May Bank Holiday
Sunday
24 - 05 - 98
Entrance
அனுமதி £2 மட்டுமே
(குழந்தைகள் அனுமதி இலவசம்)
Car Park
கனத்தரிப்பு £3




# ஈழமுரசு

Eelamurasu Weekly

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"


## சட்டத்தின் ஆட்சியும் ஆட்சியின் சட்டமும்

உலகில் மனித உரிமைகளை மதிக்கின்ற அனைத்து நாடுகளிலும் சட்டத்தின் ஆட்சியே நடக்கின்றது. சட்டத்தின் ஆட்சி என்று சொல்கின்றபோது அந்த நாடுகளில் நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டமே ஆட்சியில் இருப்பவர்களுக்கான அதிகாரத்தை வழங்குகின்றது.

சட்டத்தை இயற்றும் அதிகாரம் ஆட்சியாளர்களுக்கு இருந்த போதிலும் அதே சட்டம் தன்னை இயற்றிய ஆட்சியாளர்களை விட உயர்ந்தது என்ற நிலையை அடையும்போது அனைவரும் சமம் என்ற நிலை ஏற்படுகின்றது.

சிறீலங்கா போன்று பேரினவாத ஆட்சி நடக்கும் நாடுகளில் இந்த நிலை தலைகீழாக மாறிவிடுகின்றது. அங்கு சட்டத்தின் ஆட்சி என்பதை விட ஆட்சிக்கான சட்டமே நடைமுறையில் இருக்கிறது.

இங்கு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது கிடையாது. இங்கே தனி நபர்களுக்கும் இனங்களுக்கும் இடையில் பாரபட்சமும் ஏற்றத் தாழ்வும் காட்டும் சட்டங்களே இருக்கின்றன.

உதாரணமாக சிறீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள அடிப்படை மனித உரிமைகள் சரத்து சிறீலங்காவிலுள்ள சகல மக்களும் சமமானவர்கள் என்றும், எவரும் இனம் மதரீதியான புறக்கணிப்புக்கு உள்ளாகமாட்டார்கள் என்றும், எவரும் தாங்கள் விரும்பிய இடத்தில் சென்று குடியேறவும், விரும்பிய தொழிலைச் செய்யவும் உரிமையுண்டு என்று தெரிவிக்கின்றது.

ஆனால் சிறீலங்காவில் உள்ள அரசாங்கம் தமிழர்களையும், இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் ஒரு இனத்தவர்கள், மதத்தவர்கள் என்ற அடிப்படையில் பாரபட்சமான முறையில் நடத்தி வருகின்றது. தமிழீழ மக்கள் மீது அது அவ்வாறு செயல்களை மேற்கொள்ளுவது ஒருபுறமிருக்க, சிறீலங்காவில் பிறந்து வளர்ந்த தமிழ் முஸ்லீம் மக்களை கூட விரும்பிய இடத்தில் குடியேற விடாமல் தடுப்பதும், கைதுசெய்வதும் பாரபட்சமான முறையில் நடத்துவதும் சிறீலங்கா அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான செயலாகும்.

சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கு அதைப் பற்றிய அக்கறை எல்லாம் கிடையாது. அவர்களைப் பொறுத்தவரை அரசியல் அமைப்புச் சட்டம் என்பது தங்களுடைய தவறுகளை நியாயப்படுத்துவதற்கு தங்களுடைய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு சட்டப் பாதுகாப்புத் தேடுவதற்கு உதவுகின்ற ஒன்றாகும். இங்கு சட்டத்தின் ஆட்சி நடக்கின்றது என்பதை விட ஆட்சிக்கான சட்டமே நடைமுறையில் இருக்கிறது எனலாம்.

## இவ்வார தலைப்புகள்

### ஹிந்து

(24.03.98)

### சிறீலங்காவின் 'டிப்ளோமா'

சிறீலங்காவின் எதிர்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதம மந்திரியுமாகிய ரணில் விக்கிரமசிங்கா, இந்தியா பற்றியோ, வாஜ்பாய் தலைமையிலான புதிய அமைச்சரவைபற்றிா தமது கட்சி எந்தவித தப்பபிப்பிராயங்களைம் கொண்டிருக்கவில்லை என இன்று கூறினார். பத்திரிகையாளர் மகாநாட்டில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது அவர் தெரிவித்த புத்துணர்ச்சியூட்டும் இவ் அபிப்பிராயமானது வழமையற்ற முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

புதிய பா.ஜ.க அரசானது விடுதலைப் புலிகளுக்கு சார்பாக சாயலாம் என்ற கருத்து சிறீலங்காவின் சிங்கள, தமிழ் இனங்களிடையே பிரிந்துபோய்க்கிடக்கும் வேறுபட்ட அபிப்பிராயங்களை தெளிவுபடுத்தல் என்ற விடயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தொடர்பாக பா.ஜ.க வின் பல கூட்டணிக் கட்சிகள் மென்மையான போக்கைக் கொண்டுள்ளார்கள் என ஆழமாகப் பதிந்துள்ள சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய சந்தேகமேயாகும்.

தான் ஏற்கெனவே புதிய இந்தியத் தலைவர்களை வாழ்த்திவிட்டதாக திரு விக்கிரமசிங்கா தெரிவித்துவிட்டார்.

பா.ஜ.க தலைமையிலான புதிய கூட்டணியினை உணர்ந்து கொண்டு திரு வாஜ்பாய் பதவி ஏற்பதற்கு முன்னமேயே அவரை தான் வாழ்த்திவிட்டதாக திரு விக்கிரமசிங்கா குறிப்பிட்டார். புதிய இந்திய அரசாங்கத்துடன் எந்தவித தாமதமுமின்றி புதிதான பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்த சிறீலங்கா அரசின் இராஜதந்திர எச்சரிக்கை உணர்வை பாராட்டிய திரு விக்கிரமசிங்கா, சனியன்று புதுடெல்லியில் திரு வாஜ்பாஜை சந்தித்த முதலாவது சர்வதேச பிரமுகர் என்ற இடத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பெற்றது மிக நல்லது எனக் குறிப்பிட்டார்.

சிறீலங்கா தமிழர்களின் விடயமானது சர்வதேசமயப்படுத்தப்பட்டு வருவதை உணர்ந்த நிலையில் தனது கட்சி தமிழ் மக்களின் நிலமை தொடர்பாக ஆராய ஒரு குழுவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

### சண்டே ரைம்ஸ்

(29.03.98)

### காட்சியும் நிஜமும்

வன்னிப் போர்முனையில் இம்மாத ஆரம்பத்தில் நிலவிய கடுமையான யுத்தம் தற்காலிக ஓய்வை அடைந்திருந்த போதிலும், தொலைக்காட்சித் திரைகளில் அது தீவிரம் குறையவில்லை.

கடந்தவாரம் சிறீலங்கர்கள் கடுமையான சமர் ஒன்றை திரைகளில் கண்டார்கள். கடும் துப்பாக்கி மழைமத்தியில் துருப்புக்கள் சுட்டபடி முன்னேறின. சேதாரங்கள் அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டன.

ஆர்வம் கொண்ட சிறீலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை அங்கே போர்களத்தில் நிகழ்பவற்றை நேரடியாக கண்ணுற்றார். ஆனால், இக் கடும் சமர், எங்கு இடம்பெற்றது என்பதை தொலைக்காட்சி வர்ணிப்பாளர் குறிப்பிட மறந்தது வித்தியாசத்தை தோற்றுவித்தது.

இது எதிரிகள் (புலி கெரில்லாக்கள்) மோசமான அடியினை வாங்கும்போது இடம்பெற்றதாக தெரியவில்லை. கடந்த வருடம் அரசினால் கைப்பற்றப்பட்ட கனகராயன்குளத்தில் இடம்பெற்ற பயிற்சியே இது. படை வீரர்கள் தமது போர்முனை ஆற்றல்களையும், தீர்க்கத்தையும் வெளிக்காட்டினர். இவ்வாறுதான் எதிர்வரும் கிழமைகளிலோ, மாதங்களிலோ அவர்கள் சண்டையிடப் போகின்றார்கள்.



நன்றி: 'தினக்குரல்'

## எதிரொலிகள்

### தமிழ் மண் நெஞ்சு நிறுத்தும்

26.03.98 அன்று பாரிசில் ஈழமுரசு வாசகர்கள், எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் நடக்க இருப்பதை அறிந்தேன். நமது ஈழமுரசு குடும்பத்தினர், எழுத்தாளர், வாசகர்கள் சந்திக்கும் இந்த இனிய நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்பில்லாவிடினும், கழகத்தோடு பகிர்ந்து கொள்கிற செயலை மகிழ்வோடு ஏற்கிறேன்.

இலக்கு நோக்கிய நகர்வில் வெற்றிபெற்று, சாதனை புரிந்து, ஈழமண் காக்க - வித்தான - அன்பு நெஞ்சங்களை தொடருகிற புலி வீரர்களை - நெஞ்சு நிறைந்த பெருமிதத்தோடு நினைந்து தொடருகிறேன். சின்னப்புள்ளிக்குள் இயங்கி, பூமிப் பந்தையே உற்று நோக்கவைக்கும் வீரிய வித்துக்களை, கரும்புலிகளாகிச் சாகசம் படைத்து வரலாறு படைக்கின்ற நாயகர்களை, தமிழ்மண் நெஞ்சு நிறுத்தி வாழ்த்தும்.

இதழாளர், எழுத்தாளர், வாசகர் இந்த முக்கோணப் பிணைப்பு வரலாறுகளுக்கு வழித்துணையாவது. வயிறு புடைக்கத் தின்று, விலாநோகச் சிரித்து, வந்தததை வெட்டி, ஒட்டி 'படைப்பாக்கி' பணம் தேடும் நிலையிலாத இதழ்களே காலம்கடந்து பேசப்படும். இந்தவகையில் 'ஈழமுரசு' மேலோங்கி நிற்கிறது. 163 இதழ்கள் - 5200 க்கு மேற்பட்ட பக்கங்கள்... படங்கள், செய்திகள், நிகழ்வுகள், குறிப்புகள், தகவல்கள், ஊக்குவிப்புக்கள். கஜன் தொடங்கி வைத்த இந்த அதிர்வு இன்று பேரதிர்வாய் - பலரையும் உள்ளிழுத்து, பலரோடு இணைந்து பலருக்கும் பாதையாகி, ஒரு பெரிய குடும்பத்தை ஆக்கியுள்ளது. இதன் அடிநாதம், ஈழமண், சுதந்திரக் காற்று.

'புழுக்களாக' நடத்தியவர்கள் - இன்று புழுவாகி நெளிகிறார்கள். அரசு, அதிகாரம், பணம் அத்தனையும் உண்மைத் தன்மைக்குமுன் பொடிப்பொடியாகி இருந்த இடம் தெரியாது மறைந்து போகின்றன.

இன்று எழுத்தாளர்கள் / வாசகர்களோடு இதழாளர் குடும்பம் கைகோர்த்து, நட்புறவோடு, உள்ளங்களைப் பகிர்ந்து கொள்ளும் இனிய காட்சி என்முன் நிழலாடுகிறது. இன்று ஓர் பொன்நாள். போர்முனை ஆய்வுகாட்டும் பண்ணையார், காங்கைவன்னியன், வரலாறு படைக்கும் நக்கீரன், சினிமா வியர்கள் ஜமுனாராஜேந்திரன், அரசியல் தொடர் தரும் கதிர், கள நிகழ்வுகாட்டும் காண்டீபன், சிறுகதைப் படைப்பாளிகள், குறிப்பு எழுத்தாக அச்சகர்கள், விற்பனையாளர்கள், வாங்கிப்படித்து மகிழ்ந்து வாழ்த்த வாசகர்கள் நம் தமிழ் இதழ் என்று நாடிவந்து, சுட்டிக், குட்டி வளர்த்தும் விமர்சகர்கள், இதழ் தொடர்பாளர்கள் - திரண்டுநின்று இதழ்பற்றி உரையாடுகின்ற காட்சி, கண்முன்தோன்றி மகிழ்வேற்படுத்துகிறது.

எல்லாக் கண்களிலும் ஓர் எதிர்பார்ப்பு!! என்று வரும்? அந்தத் திருநாள். தாயக மண்ணில், கால்பதித்து சுதந்திரமாக, தமிழ்க்கீதம் இசைக்கும் அந்த நாள் என்று வரும்என்ற எதிர்பார்ப்பு. அன்றன்று வரும் - ஏன் இன்றுவரும் - செய்திகளும், வீரச் செயல்களும் நெஞ்சு நிமிர்த்தித் தமிழர் என்று சொல்லவைக்கும். 'சங்கு சுடச்சுட வெண்மையுறும் - தமிழனைச் சுடச்சுட நமது புலி இராணுவ வலிமை மிகும். இது மண்மீட்கும்' ஈழமுரசின் இனியகாட்சி எதிர்பார்ப்புக் கண்களுக்கு தெம்புதரும், சுகம் தரும்.

ஆர்ப்பரிக்கும் கடலலையே தமிழர் கூட்டம்... வேண்டாம் ஐந்து பத்தே போதும் அரண்டோடி ஒழிந்திடுவர் பகைவர் கூட்டம். ஏனெனின் இது நெருப்பைச் சுமந்த தம்பிகளின் அன்பிணைப்பு. இலக்கைத் தெளிவாக்கி வழிநடத்துகிற மாவீரனின் பயிற்சிக்குடும்பம்.

நாலும் நடக்கும் நாட்டிலே, இருந்தாலும் ஆருக்குச் சொல்லியழ, செதுக்கிச் செதுக்கி வடிவமைத்த சிற்பம் - இன்று பலரையும் தன் வசப்படுத்தியுள்ளது. ஈழமுரசின் இப் பெருங்கூட்டம் சாதிக்கும்.

வந்துள்ள ஒவ்வொருவரோடு 'வணக்கம்' கூறி கைகுலுக்கி அன்போடு பகிர்ந்து, ஆக்கபூர்வமாகச் சிந்தித்து - இது வளர, வாழ, உயர, இணைக்க, பரப்ப, காட்ட, சாதிக்க, மிளிர, என்னசெய்வோம் என முறைப்படுத்துவோம்.

ஏனெனின் இது மண் விடுதலைக்கான மற்றொருபாதை.

அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்

— பொள்ளாச்சி நசன்.

### வளர்ச்சிகள்

ஈழமுரசில் பல சிறப்புகள் வளர்வதையும், எழுத்துப் பிழைகள் முந்தினமாதிரியல்லாது குறைந்து வருவதையும் அண்மைக்காலமாக அவதானிக்கிறேன். உதாரணமாக அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விடயங்களாகிய 'மேதைகள்' 'கலைந்த சொற்கள்' மிகவும் பயனுடைய அம்சங்களாகும். 'கலைந்த சொற்கள்' புதிரானது, அறிவை விருத்தி செய்வதற்கும் மொழியியலில் நம்மை வளர்த்துக் கொள்வதற்கும் இன்றியமையாத ஆக்கமும் ஒரு பொழுதுபோக்குமாகும். 'மேதைகள்' பகுதியானது பொது அறிவிலும், பாடவியலிலும் நம்மை வளர்த்துக்கொள்ள அவசியமாகும். ஒவ்வொரு மேதையினதும் வரலாறு ஆனது வெவ்வேறு திசைகளில் செல்லும், அதாவது மொழி, பண்பாடு, நாடு, காலம், ஆக்கம் என்பன மாறுபட்டுச் செல்லும். இவ்வரலாறுகளை ஒருவன் நேரடியாகப்பெறுவது கடினம். ஏனென்றால் மொழிப்பிரச்சினை தான் காரணம். இப்பிரச்சினையை ஈழமுரசு ஈடு செய்வதையிட்டு மகிழ்கிறேன். இப்பணி தொடர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

முழக்கம் 163 இல் ஆர்க்கிமிடிசைப் பற்றிய வரலாற்றுத் தொகுப்பை நான் வாசித்தேன். இதில் சில குறைகள் இருப்பதை நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். ஆர்க்கிமிடிசின் தத்துவமானது தனிய திரவநிலையில் உள்ள பதார்த்தத்தில் அமிழும் சடத்துவத்துக்கு மட்டுமன்றி பாகுநிலை, வாயு நிலை ஆகிய நிலையில் உள்ள பதார்த்தங்களின் அமிழும் சடத்துவத்திற்கும் பொருந்தும். திரவநிலை, பாகுநிலை, வாயு நிலை இம்மூன்று நிலைகளையும் ஒன்றாகக் குறிக்கும் பதம் 'பாயி' என்பதாகும். ஆர்க்கிமிடிசின் விதியானது இவ்வாறு அமையும்.

'பாயி ஒன்றினுள் ஒரு சடத்துவமானது பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அமிழும்போது உண்டாகும் சடத்துவத்தின் தோற்ற நிறைக்குறைவானது நீரினால் உண்டாக்கப்படும் மேலுதைப்புக்கு சமமாகும். இம் மேலுதைப்பானது சடத்துவத்தால் இடம் பெயர்க்கப்படுகிற பாயியின் நிறைக்குச் சமனாகும். இவ்வாறு விதி அமையாதபோது கருத்தற்ற விதியாகிவிடும்.

இவ்விதியின்படியே சிறிய கல் நீரில் அமிழ்வதற்கும் பாரிய கப்பல் நீரில் மிதப்பதற்குமான விளக்கத்தை ஆர்க்கிமிடிஸ் அளித்தார். இது கட்டுரையில் குறிப்பிடப்படவில்லை. இனி வரும் பதிப்புகளில் இவ்வாறானவற்றை சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

'மேதைகள்' பகுதியானது ஒருவருக்கென்று வரையறுக்கப்பட்ட வெளியீடா அல்லது வாசகர்களும் இப்பகுதியில் தம் ஆக்கங்களை வெளியிடும் பொருட்டு அனுப்பி வைக்கலாமா என்பதை அறியத்தரவும்.

— நவீனன் (ஜேர்மனி)

மேதைகள், விஞ்ஞானிகள், சாதனையாளர் பகுதிக்கு வாசகர்களும் எழுதலாம். இது உங்கள் பகுதி.

- ஆர்

# 'மட்டக்களப்பு வைத்தியம்'

- அ. பாலமனோகரன்

## சிறுகதை

சாந்தன் அந்தச் சிறிய ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது இரவு 7.40. அவனது இடத்திற்குச் செல்லும் கடைசி பஸ் போய்விட்டிருந்தது. ஐந்து கிலோ மீற்றர்கள் நடக்கவேண்டும். கையிலிருந்த பிளாஸ்ரிக் பை கனத்தது. அதை விட அதிகமாகக் கனத்தது அவனுடைய நெஞ்சு.

மார்ச் மாத நடுப்பகுதி. ஆனால் வின்ரர் டென்மார்க்கைவிட்டுப் போவதில்லை என்பதுபோல் இப்போதும் குளிராகவே இருந்தது. அரிசி, பருப்பு, மீன்ரின் என நிரம்பியிருந்த பை, கையை வெட்டாதபடி கையுறைகளை அணிந்துகொண்டு சாந்தன் நடக்க ஆரம்பித்தான்.

அன்று ஸ்ரோரில் வேலை அதிகம்தான். இரண்டு கொன்ரெயினர்களுக்கு அரிசி மூட்டை ஏற்றவேண்டியிருந்தது. ஸ்ரோருக்கு வேலைசெய்ய அன்று தமிழர் எவரும் அகதி முகாமிலிருந்து வரவில்லை.

டென்மார்க் அரசு முன்போல் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளாமல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆறு, ஏழு பேரென கொழும்பிற்கு அனுப்பிக் கொண்டிருந்தது. வசதி உள்ளவர்கள் தலைமறைவாகி வேறு நாடுகளுக்கு மாறிக்கொண்டிருந்தனர். வசதியில்லாதவர்கள் கொலைக்களத்திற்கு அனுப்படுவதுபோல் கொழும்புக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தனர்.

'எனக்கும் அந்த நிலை ஏற்பட்டிருந்தால்?' சாந்தன் நினைக்கவே பயந்தான். கொழும்பில் இராணுவத்திடமோ பொலீசிடமோ சிக்கி சிறைப்படுவது ஒரு புறமிருக்க, வெளிநாடு வருவதற்கென அவருடைய பெற்றோர் பட்ட கடனை எப்படித் தீர்ப்பது? தங்கைகள் இருவரையும் கரைசேர்ப்பது எவ்வாறு? அதிர்ஷ்டவசமாக அவனுடைய அடைக்கல விண்ணப்பம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் டென்மார்க் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இன்னமும் பதினாறு மாதங்கள் அவன் டெனிஸ் அகதிகள் நலம்புரிச் சங்கத்தின் பராமரிப்பில் இருக்கவேண்டும். கிழமை நாட்களில் டெனிஸ் மொழிப் பாடசாலைக்குச் செல்லவேண்டும். இல்லையேல் செலவிற்குத் தரும் பணத்தை நிறுத்திவிடுவார்கள். அகதி முகாமில் இருக்கும் போது கிழமை நாட்களிலும் கூட சிங் முதலாளியின் ஸ்ரோரில் கறுப்பில் வேலைசெய்ய முடிந்தது. கடினமானவேலை, சம்பளம் குறைவு என்ன செய்கிறது, பட்ட கடனை ஒருவாறு தீர்த்தாக வேண்டுமே?.


கடன்!.... கடன்!..... பொறுப்புக்கள்!.... பொறுப்புக்கள்!... எப்போதுதான் இந்தப் பொறுப்புக்கள் தீர்ந்து நான் நிம்மதியாக இருக்கப் போகின்றேன் எனச் சாந்தன் ஏங்கினான்.

கனகரும் இன்று வேலைக்கு வந்திருந்தால் இப்படித் தனிய எனக்குள் புலம்பிக்கொண்டு நடக்கத்தேவையில்லை. ஏதாவது பேசிக்கொண்டே தூரம் தெரியாமல் நடந்திருக்கலாம் என்று நினைத்த சாந்தனுக்கு, காலையில் ஸ்ரோரில் சிங் முதலாளி, கனகர் ஏன் வேலைக்கு வரவில்லை என்று கேட்டது ஞாபகம் வந்தது.

தங்களுடன் விடுதியில் குடியிருக்கும் சோமாலியன் அடித்துக் கனகருக்குத் தலையில் காயம் என்று சொல்லத்தான் சாந்தன் எண்ணினான். ஆனால் அந்த அளவுக்கு அவனுக்கு ஆங்கிலோ டெனிஸ் மொழியோ தெரியாது. எனவே, கனகர் சிக்! என்று மட்டும் சொல்லி நிறுத்திக்கொண்டான். சிங் முதலாளி மிகவும் அனுதாபத்துடன் ஏதோவெல்லாம் கேட்டான். சாந்தனுக்கு முழுவதும் புரியவில்லை. மற்றவர் பேசுவது புரியாவிட்டால் சிக்கலும் குழப்பமும்தான்! நேற்றுக் காலையில் கனகருக்குத் தலையில் அடி விழுந்ததற்கும் ஒரு வகையில் மொழிப் பிரச்சினைதான் காரணமாக இருந்தது.

விடுதிப் பொதுச் சமயலறையில் சோமாலியன் தனது மொழியிலும், சின்னராசா ஆங்கிலத்திலும் ஆளையாள் காரசாரமாகத் திட்டிக்கொண்டிருந்த சமயத்தில் அவர்களுக்கிடையில் கனகர் பூந்து சமரசம் செய்ய முயன்றபோதுதான் சின்னராசாவின் மனைவி 'பிளடி நீக்கிரோ' என்றாள். அதைக் கேட்டதுமே சிங்கம் போலச் சிலிர்த்துக்கொண்டு கெம்பிவிட்டான் சோமாலியன். ஆத்திரம் கொப்பளிக்க அங்கும், இங்கும் பார்த்தவன் கையில் கிடைத்த பொரிக்கும் சட்டியை எடுத்துக்கொண்டான். என்ன துணிவிருந்தால் என்ரை மனிசிக்கு அடிக்க வெளிக்கிடுவாய்! கறுவல் நாயே! எனக் கூவிக்கொண்டே சின்னராசா சோமாலியை நோக்கிப் பாய்ந்தபோதுதான் கனகர் அவர்களுக்கிடையில் புகுந்தார். சின்னராசாவின் பாய்ச்சலை எதிர்நோக்கி சோமாலியன் சட்டியை வீசியபோது, அது கனகரின் வெண்மண்டையில் விழுந்தது. சறுகார் அடித்தான். ஆனால் விளிம்பு பட்டிருக்க வேண்டும். நொடிக்குள் இரத்தம் கொப்பளித்து கனகரின் முகத்தில் வழிந்தது. அதைக் கண்டதுமே யாவரும் சற்றுத் தணிந்துபோய்விட்டிருந்தனர். அதுவும் தானுண்டு, தன்பாடுண்டு என்று எப்போதுமே ஒதுங்கியிருக்கும் கனகருக்கு அடிபட்டது சின்னராசா சோமாலியன் இருவருக்குமே இலேசான குற்ற உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சோமாலியப் பெண் ஓடிவந்து தன்னுடைய முண்டாசுத்துணியால் கனகருடைய காயத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டு 'லேய, லேய' என (டாக்டர்) விடுதியின் வாசல்பக்கத்தைக் காட்டிக்கொண்டிருந்தாள்.

சமையல் அறையில் அமளி துமளி ஏற்பட்ட வேளையில் சாந்தன் தனது



அறையில்தான் இருந்தான். உரத்த குரலில் வாக்குவாதம் கேட்கவே ஓடிவந்தான். அப்போதுதான் ரமணியக்கா 'பிளடி நீக்கிரோ' எனத் திட்டியிருந்தாள். இரண்டேயிரண்டு வார்த்தைகள்தான், ஆனால் அவளுடைய குரலில் இருந்த காரமும் முகத்தில் கொப்பளித்த குரோதமும் அந்த மொழி தெரியாத ஒருவனுக்குக் கூட கோபத்தை ஏற்படுத்தியிருக்கும் எனப் பின்னர் சாந்தன் யோசித்ததுண்டு. கனகரின் தலையில் இருந்து இரத்தம் வழிவதைக் கண்ட ரமணியக்கா, 'முதலிலே பொலிசுக்குப் போன் பண்ணுங்கோ! பொலிசுக்குப் போன் பண்ணுங்கோ' எனக் கீச்சுக் குரலில் கத்திக்கொண்டிருந்தாள்.

நல்ல காலமாக அந்தக் கிராமத்து வைத்தியரின் சிகிச்சை நிலையம் அகதிகள் தங்குமிட விடுதிக்கு முன்பாகத்தான் இருந்தது. எப்படிக் காயம் வந்தது என வைத்தியர் கேட்டதற்கு குளியலறையில் சறுக்கி விழுந்து குழாய்முனை இடித்துவிட்டது என்றுதான் கனகர் சொல்லியிருந்தார். 'உண்மையைச் சொன்னால் பொலிஸ் விசாரணை', வழக்குக் கணக்கென்றெல்லாம் வந்துவிடும். கரைச்சல்!' என்று காயத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு திரும்பி வரும்போது கனகர் சொல்லியிருந்தார்.

சாந்தன் இந்த விடுதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன் வந்தபோதுதான் கனகரை முதன் முதலில் சந்தித்தான். அவரும், சின்னராசா தம்பதிகள் மட்டுமே அப்போது அந்த விடுதியில் தங்கியிருந்த அகதிகள். விடுதி பழைய கட்டடம்தான், இருந்தாலும் ஏழெட்டு அறைகள், இரண்டு குளியலறைகள், ரீவியுடன் கூடிய பொதுக்கூடம், ஒரு பொதுச் சமயலறை என வசதியானதாகவே இருந்தது. கனகரும் சின்னராசா தம்பதிகளும் மட்டுமே நாலைந்து மாதங்களாக அந்த விடுதியில் இருந்தனர். அப்போது பிரச்சினைகள் எதுவும் ஏற்படவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு இந்த சோமாலியப் பெண் வந்தாள். ரமணி அக்காவிற்கு அவளைப் பார்த்ததுமே பிடிக்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

இரண்டு கிழமைகளின் பின்னர் ஒரு சோமாலியன் வந்து அவளுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தபோது ரமணியக்காவிற்கு அவளை அத்தறுதியாகப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தது. அதன் பின்னர்தான் விடுதியில் பிரச்சினைகள் கிளம்ப ஆரம்பித்தன.

'ரமணியக்காவிற்கு இந்தச் சோமாலியப் பெண்மேல் ஏன் இத்தனை வெறுப்பு? சாந்தன் நடந்துகொண்டே யோசித்தான். அவள் எப்போதுமே யாருடனும் சிரித்துச் சிரித்துப் பேசுவதாலா? வாரம் ஒருதடவை மட்டும் விடுதியை மேற்பார்வை செய்ய வரும் நீல்சன்கூட, மொழி தெரியாவிட்டாலும் அவளுடன் ஒரு பத்துநிமிடம் என்றாலும் நின்று பேசிவிட்டுத்தான் போவான். அந்த நேரம் அவர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரிப்பதுமுண்டு. அப்போதெல்லாம் ரமணியக்காவின் முகம் கரிச்சட்டிபோலக் கறுத்துவிடும் ஏன் இந்த வெப்பிகாரம்?'

பிளாஸ்ரிக் பையின் கைப்பிடி, பாரமிகுதியால் சட்டென அறுந்தது. அது தரையில் விழுந்துவிடாமல் தந்திரமாகப் பிடித்துக்கொண்டான் சாந்தன். பை சரிந்ததில் அதன் மேற்பகுதியில் இருந்த பொருட்கள் சில நிலத்தில் விழுந்துவிட்டன. ரமணியக்கா பாகிஸ்தான் கடையில் வாங்கிவரச்சொன்ன பொருட்கள்தான் அப் பையில் அதிகமாக இருந்தன. பேசும்படம், பொம்மை இவை இரண்டிற்கும்தான் முக்கியமாகச் சொல்லிவிடுவா, அத்துடன் முருங்கைக்காய், பயத்தங்காய் போன்ற ஊர் மரக்கறிகள். விலையைப் பற்றிப் பரவாயில்லை.

அவர்களுக்கென்ன! கிடைக்கும் பணத்தில் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி மிச்சம்பிடித்து கடன் தீர்க்கவேண்டிய பிரச்சினையில்லை. 'குடுத்துவைச்ச சனம்' என வாய்க்குள் சொல்லிக்கொண்டே சாந்தன் விழுந்த பொருட்களை பையினுள் வைத்து அடுக்கி பையைப் பக்குவமாக தோளில் வைத்துக்கொண்டு நடையைத் தொடர்ந்தான். பையின் அடிப்பாகத்தில் இருந்த அரிசி பருப்பு என்பவை ஸ்ரோரில் கிளிந்துபோன சாக்குகளில் இருந்து சிந்தியவை. அவற்றை எடுத்துச் செல்ல சிங் அனுமதித்தான். பையின் அடிப்பாகத்தில் இவை இருந்ததனால் பை தோளில் சௌகரியமாகப் பதிந்துகொண்டது. ஒரு கையால் பையை இலேசாகப் பிடித்தபடியே நடப்பது சிரமமாக இருக்கவில்லை.

ஊரிலும் இப்படித்தான். பாரம் அதிகம் என்றால் தூக்கித் தோளில் வைத்துக்கொள்வோம். அல்லது தலையில் வைத்துக்கொண்டு செல்வோம். இங்கு அப்படிச் செய்தால் நாலுபேர் பார்த்துச் சிரிக்கக்கூடும் என்பதற்காக பை கையை இழுத்து விரல்களை 'வெட்டவெட்ட' சுமந்துகொண்டு வருவோம்.

சோமாலியப்பெண் அப்படியல்ல. முதல் முதலில் அவள் விடுதிக்கு வந்தபோது தன்னுடைய பெரிய பெட்டியை தலையிலே வைத்துச் சுமந்துகொண்டு இரண்டு கைகளையும் வீசிக்கொண்டுதான் வந்தாள். அவர்களுடைய நாட்டில் அப்படித்தான். சாந்தன் ரீவியில் பார்த்திருக்கின்றான். அவள் யாரும் பார்த்துக் கேலிபண்ணக்கூடுமென எண்ணி தன்னை வருத்திக்கொள்ளவில்லை! அவள் அப்படித் தலையில் பெட்டியைச் சுமந்துவரும்போது அதைக் கண்ட ரமணியக்காவிற்குச் சிரிப்பு வந்துவிட்டது.

ரமணியக்காவும், கணவனும் கனடாவிற்குப் போகப் புறப்பட்டு சமய சந்தர்ப்பக் கோளாறினால் டென்மார்க்கில் இறங்க நேர்ந்திருந்தது. எத்தனையோபேர் இரண்டு மூன்று வருடங்களாகக் காத்திருக்க இவர்களுடைய அகதி விண்ணப்பம் மட்டும் இவர்கள் வந்திறங்கி இரண்டு மாதங்களிலேயே ஏற்கப்பட்டு இவர்களுக்கு டென்மார்க்கில் அகதி அந்தஸ்த்தும் கிடைத்துவிட்டிருந்தது. இப்போது நான்கு மாதங்களாக இந்த விடுதியில்தான் இருக்கின்றனர். ஏதோ கடமைக்காக மட்டும் இருவரும் டெனிஸ்மொழி வகுப்பிற்குப் போய்வந்துகொண்டிருந்தார்களேயொழிய அவர்களுடைய கவனம், சிந்தனை, நம்பிக்கை யாவுமே எப்படியாவது கனடா போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பதில்தான் இருந்தது. ரமணியக்காவின் சகோதரங்கள் நால்வருமே கனடாவில் இருந்ததனால் கனடாதான் தன்னுடைய பிறந்த ஊர் என்ற மனநிலையுடன் ரமணியக்கா வாழ்வதில் ஆச்சரியமில்லை எனச் சாந்தன் எண்ணினான்.

கிழமையில் ஐந்தாறு தடவையாவது ரமணியக்காவிற்குக் கனடாவிலிருந்து போன்கோல் வரும். முதன் முதலில் இந்த ரெலிபோன் விசயமாகத்தான் ரமணியக்காவிற்கும் சோமாலியப் பெண்ணிற்கும் பிரச்சினை ஆரம்பித்திருந்தது. இரவு ஏழு மணிக்கு தன் அண்ணனுடைய கோலை எதிர்பார்த்து ரமணியக்கா ஆறு ஐம்பதிற்கே போனடியில் காத்திருக்க சோமாலியாக்காறி வந்து காட்டைப் போட்டுவிட்டு போனை எடுத்து எட்டுப் பத்து நிமிடமாகப் பேசியிருக்கிறாள். ரமணியக்கா தனது கைக்கடிகாரத்தைக் காட்டி 'செவனக்குளொக், கனடாக் கோல்' என்று மூன்று தடவைகள் சொல்லியும். அவள் அதைப் பொருட்படுத்தாது போனை எடுத்ததில் ரமணியக்காவிற்கு மகா கோபம். தான் கூறியது சோமாலியாக்காரிக்கு புரிந்ததோ இல்லையோ எனச் சிந்தித்துப் பார்க்கக்கூட அந்தக் கோபம் ரமணியக்காவை விடவில்லை. இந்தச் சம்பவத்தின் பின்னர் சோமாலியப் பெண்ணைக் கண்டாலே ரமணியக்கா விறைத்துக்கொண்டு வேறு பக்கம் திரும்பிக்கொள்வா. இரவில், பொதுக்கூடத்தில் ரீவி பார்த்துக்கொண்டிருக்கையில் அவள் வந்துவிட்டால்போதும் 'இனி ரீவி பார்த்தமாதிரித்தான்! எழும்புங்கோ. ரூமுக்குப் போவம்!' எனச் சின்னராசா அண்ணரையும் கூட்டிக்கொண்டு தங்களுடைய அறைக்குப் போய்விடுவா. ரமணியக்காவின் சொல்லை சின்னராசா அண்ணர் மீறி நடந்ததை சாந்தன் ஒருநாளும் கண்டதேயில்லை.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

# டைட்டானிக்: காதல் சோகமும் சாவின் சந்நிதானமும்

Titanic, a: மனித ஆற்றலுடைய, மிகப்பெரிதான வலிமையுடைய, மாபேராற்றல் வாய்ந்த, மிகப்பெரிய, பேரளவான.

தமிழ் ஆங்கில அகராதி
சென்னைப் பல்கலைக் கழகம்
1965 - சென்னை

Titanic n: பிரித்தானிய பயணிகள் கப்பல். மூழ்கவே மூழ்காதது. பனிப்பாறையில் மோதுண்டு நியூபவுன்லாந்து அருகில் மூழ்கிய கப்பல். 14-15 ஏப்ரல் 1912-ம் ஆண்டு அதனது முதல் பயணத்திலேயே மூழ்கியது. 1513 உயிரிழப்புகள் நேர்ந்தது. 1985 ஆம் ஆண்டு 'ரோபோ' நீர் மூழ்கிகளால் கடலுக்கடியில் 4 கி.மீ / 2.5 மைல் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. குளிர் சூழலால் பாதுகாக்கப்பட்டபடியிருந்தது. 1987 ஆம் ஆண்டு அழிவு மீட்பு துவங்கப்பெற்றது.


Hutchinson Concise Encyclopedia
Dictionary Oxford 1994

**இந்த பூமியில்
இவர்களுக்கிடையில்
எதுவுமே வரமுடியாது.**

Titanic பட விளம்பர வாசகம் /
Empire சினிமா இதழ் மார்ச் 1996

## சினிமா

எண்பத்தியாறு ஆண்டுகளின் பின் ஹாலிவுட் டைட்டானிக் கப்பல் உலகெங்கும் பிரம்மாண்டமான சினிமாக் கப்பலாக நம்முன் ஓடிக்கொண்டிருக்கிறது. சினிமா வரலாற்றில் மிக அதிகமாகச் செலவு செய்து எடுக்கப்பட்ட படமும் இதுதான்; 250 மில்லியன் டொலர்கள். தற்போது பில்லியன் டொலர்களுக்கு மேலாகவும் வசூலை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கும் படமும் இதுதான். டைட்டானிக் கப்பல் போலவே டைட்டானிக் திரைப்படமும் சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது. டைட்டா



னிக் திரையிடப்பட்டு இரண்டு மாதங்களான பின்பும், கொட்டகை நிறைந்த காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. பிரபலமான தமிழ்ப்பட இரசிகர்கள் போலவே பார்வையாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு கைதட்டுகிறார்கள். பாத்திரங்களோடு ஒன்றிப்போய் பரவசம் கொள்கிறார்கள். தேம்பியழவும் செய்கிறார்கள்.

இந்தக் கைதட்டுதலும் பரவசமும் தேம்பியழுதலும் ஒரே கால அவகாசத்தில் குறிப்பிட்ட இரண்டு காட்சிகளுக்கான எதிர்வினையாகவே வந்தது. இலண்டன் நகரத்தின் இரண்டு தியேட்டர்களில், இரண்டு முற்றிலும் வேறான இடங்களில் வெளிப்பட்ட பார்வையாளர்களின் உணர்ச்சிகள் மட்டும் ஒரே தளத்தில் இயங்கின. அமெரிக்க திரைப்பட இயக்குநர் மார்ட்டின் ஸ்கோர்ஸிஸ் சொல்கிறபடி தேவாலயத்திற்கும் திரைப்படக் கொட்டகைக்கும் அதிக வித்தியாசமில்லைத்தான். வெகு மக்களின் கூட்டுப் பிரக்ஞை காலகாலமாக அவாவிக்கொண்டிருக்கும் கூட்டு ஆன்மீக ஒருமையை திரைப்படங்கள் உருவாக்கத்தான் செய்கின்றன. இப்படம் வெற்றிப் படம். இப்படம் என்னையும் நெகிழ்ந்து போகச் செய்தது. அமைதி காக்கக் கோரியது. சில வேளை கண்ணில் நீர் தளும்பவும் கூடச் செய்கிறது.

'Independence Day', 'Mission Impossible', 'Jurasic park' போன்று மிகுந்த பொருட்செலவுடன் பிரமாண்டமாக எடுக்கப்பட்ட படம்தான் இதுவும். அந்தப்படங்கள் பிரமாண்டங்களை திரையில் காண்பித்து ஜனங்களை அசத்தி வாய்பிளக்கச் செய்யும் நோக்கத்துக்காகவே பிரமாண்டமாக எடுக்கப்பட்டவை. ஆனால் டைட்டானிக்கின் பின்னுள்ள பிரமாண்டம் அதன் கதைப்போக்கில் இயல்பாக நேர்கின்ற பிரமாண்டம். கதையே இங்கு பிரமாண்டத்தைச் சுற்றியதுதான். வரலாற்று ரீதியான பிரமாண்டம். நிஜ பிரமாண்டம்.

பிரமாண்டமான கடல். 2300 பேரை ஏற்றிச் செல்லும் இதுவரையிலான உலகின் மிகப் பிரம்மாண்டமான கப்பல். அதிர்ச்சி தரும் வகையில் இரண்டாக உடைந்து மூழ்கும் பிரமாண்டமான கப்பல். ஒரே விபத்தில் 1800 பேர் மரணமெய்திய மாபெரும் விபத்து. மாபெரும் சோகம். இப்படத்தில் இடம்பெறும் பிரமாண்டம் இட்டுக்கட்டிய பிரமாண்டம் என்பது இல்லை. வியாபார சாதுரியத்துக்கான பிரமாண்டம் இல்லை.

இந்தவகையில் இப்படம் பிற ஹாலிவுட் பிரமாண்டமான படங்களிலிருந்து வேறுபடுகிறது. இதில் இடம்பெறும் பிரமாண்டமான காட்சிகள் அனைத்துமே கதையின் பின்னணியில் கரைந்து போய்விடுகிறது. அதையே நம்மை தனது பிடிக்குள் வைத்திருக்கிறது.

கதை சொல்லப்பட்ட விதத்தில் இரண்டு விசயங்கள் நம்மை படத்தில் ஆர்வமாக ஈடுபடவைக்கிறது.

1) படத்தின் நாயகன் De-



Caprio ஏற்கனவே ரோமியோ ஜூலியட் படத்தில் நடித்த இளம் காதல் நாயகன். இளம் பெண்களின் கனவுநாயகன். கேட் வின்ஸ்லட் எனும் பிரிட்டிஷ் கதாநாயகியுடனே இவரது காதல், இன்னொரு தாஜ்மஹால், இன்னொரு ரோமியோ ஜூலியட் ஆகிறது. ஏழை பணக்காரன் காதல். பணக்காரப் பெண் - ஏழை நாடோடிப் பையன். அமரக் காதல் எதிர்ப்பு - சோகமான காதலுக்குரிய அத்தனை தன்மைகளும் கொண்ட நிரந்தரக் காதல் பார்முலா படத்தில் இருக்கிறது.

2) கதை விபத்தில் தப்பிய 104 வயது மூதாட்டியின் பின்நோக்கிய நினைவுகளில் பார்வையாளனை எதிர்பார்க்க வைக்கும் உத்தியுடன் சொல்லப்பட்டு ஆர்வத்தை படம் முழுக்க வைத்துக் கொள்கிறது.

3.15 மணிநேரப்படம். 1 மணி நேரம் காதல். மிகுதி 2.15 மணி நேரம் கப்பல் உடைந்த பின் நடக்கும் பரபரப்பான சோக நாடகம்.

இவ்வகையில் படம் முழுக்கவும் நம்மை அதன் கதையமைப்புக்குள் காட்சிகளுக்குள் எடுத்துக்கொள்கிறது.

இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் நகரினின்று புறப்படும் டைட்டான்க் எனும் கப்பல் லிவர்பூல் நகரத்தில் கட்டப்பட்டது. 2300 பயணிகள் ஏறும் கப்பல். ஐரோப்பாவை சுற்றிப் பார்த்து விட்டு அமெரிக்கா திரும்பும் பணக்காரன் வில்லன். அவனை மணமுடிக்க நிச்சயிக்கப்பட்ட நாயகி. அப்பன் பட்ட கடனுக்காக அம்மாவால் நிர்ப்பந்திக்கப்பட்ட கல்யாணம் இது. கதாநாயகன் ஓவியன். நாடோடி ஓவியன். பாரிஸ் வீதிகளில் விபச்சாரிகளை வரையும் ஓவியன். அங்காங்கே சின்னச் சின்ன வேலைகள் செய்து கலைப் பயணம் மேற்கொள்ளும் நாடோடி. இளம் வயது நாயகன், நாயகி. இருவருக்கும் பாப்லோ பிக்காஸோ தெரியும். ஸிக்மன்ட் பிராய்ட் பற்றி பேசத்தெரியும். கலையுணர்வும் காதலும் அன்பும் நிறைந்தவர்கள் இருவரும். வர்க்க பேதம் கடந்தவர்கள். இவர்களது காதல், வில்லனுக்கும் அம்மாவுக்கும் பிடிப்பதில்லை. கதாநாயகனை சூழ்ச்சி செய்து திருட்டுக் குற்றம் சுமத்துகிறார்கள். கப்பல் உடைகிறது. கலவியில் ஈடுபடும் காதலர்கள் கப்பலின் தளங்களில் தப்பி ஓடுகிறார்கள். ஜனங்கள் சாகிறார்கள். தண்ணீர் கப்பலுக்குள் பீச்சி அடிக்கிறது. ஜனங்கள் தப்புகிறார்கள். கப்பல் மூழ்கிறது. கடைசியில் நாயகன் கடலில் விழுந்து இறந்துபோக, தப்பும் கதாநாயகி சோகத்தை மனதில் சுமந்து மூதாட்டியாக அமெரிக்காவில் வாழ்கிறாள்.

அவள் சொல்லும் நினைவுக் கதைதான் டைட்டானிக் படமாகிறது.

படத்தில் மூன்று விசயங்கள் மிக ஊன்றி கவனிக்கத்தக்கன.

1) படத்தின் கதையமைப்பில் அந்தக்கால அறிவுச் சூழலும், வர்க்கக் கண்ணோட்டமும் பிரக்ஞைபூர்வமான சித்தரிப்புக்குள்ளாகிறது.

2) பாத்திரப் படைப்புக்கள், வாழ்வின் சில உன்னத மனித மதிப்பீடுகளைச் சுற்றி அமைகிறது. கடமையுணர்வு, தியாகம், துரோகம், பீதி, அன்பு, தாய்மை, தலைவனின் தெய்வீக உணர்வு போன்றவற்றைச் சுற்றி தர்க்கபூர்வமான பாத்திர அமைப்புக்கள் படத்தில் இடம்பெறுகிறார்கள்.

3) சில திரை நிறைந்த நெகிழ்ச்சியான காட்சி அமைப்புக்கள் நம்மைப் பரவசத்தில் ஆழ்த்தும் தன்மை படைத்ததாக இருக்கிறது.

கப்பலில் வகுப்பு (Class) பிரிவினைகள் இருக்கிறது. முதல் வகுப்பு, மூன்றாம் வகுப்பு (Third Class) என்கிறமாதிரி இன்றளவும் நம் ஊர் ரயில்வே, சினிமா நிறுவன அமைப்புக்களில் இந்த வர்க்க ஒதுக்கல் இருக்கிறது. டைட்டானிக் கப்பலில் கட்டண முறையில் இந்நிலை இருக்கிறது. முதல் வகுப்பைச் சேர்ந்தவள் கதாநாயகி. மூன்றாம் வகுப்பைச் சேர்ந்தவன் கதாநாயகன். மூன்றாம் வகுப்புக்காரன் கீழ் தளத்திலிருந்து முதல் வகுப்புக்காரர்கள் இருக்கும் மேல் தளத்திற்கு வரக்கூடாது. இதை முறியடித்து அமரக் காதலாகிறது இவர்களது காதல்.

கப்பல் உடைந்த பின்னால், முதலில் உயிர்வாழ தப்பிப்போகத் தகுதி படைத்தவர் முதல் வகுப்பினர்தான். மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் பூட்டி வைக்கப்பட்டு துப்பாக்கிக் கட்டையில் அடிக்கப்படுகிறார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளுடன் ஏழைத் தாயொருத்தி தண்ணீரில் மூழ்கி மரணமெய்துகிறாள்.

மூன்றாம் வகுப்புப் பயணிகளின் நடனத்திலும் இடையிலும் மதுவகைகளிலும் 'நிஜமான விருந்தை' தனது காதலனுடன் அனுபவம் கொள்கிறார் நாயகி. எஞ்சின் அறையில் கடினமாக உழைக்கும் தொழிலாளர்களுக்கிடையில் புகுந்து ஓடி, கீழறையில் நிற்கும் வாகனத்தில் கலவியில் ஈடுபடுகிறார்கள் நாயகனும் நாயகியும்.

இவ்வகையில் அன்று, வரலாற்று ரீதியில் நிலவிய கொடூரமான வர்க்கப் பிரச்சினையை, கொலைகாரத்தனமான வர்க்க வேறுபாட்டை கதைமுழுக்க தனது காட்சிக்குள் கொண்டிருக்கிறது படம். ஆனால் இந்தப் பிரிவினை நவீன ரோமியோ ஜூலியட் கட்டுக்கதையின் பின்னணியில்தான் காட்சிகளாக வைக்கப்படுகிறது. நிஜமும் நிழலும் பிசைந்ததொரு காட்சியமைப்பு இது. இதுதான் ஹாலிவுட் சினிமாவின் நிஜ X கனவு பார்முலா.

கப்பலோடு சாவைத் தழுவும் கடமையாளர்களாக கப்பலின் கப்டன், கப்பலை வடிவமைத்த பொறியியலாளர்,

கடமையின் பொருட்டு பயணிகளைச் சுடநேர்ந்தபின் குற்றவுணர்வில் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு மடியும் சிப்பந்தி,

இறுதிவரை வயலின் வாசித்தபடி கப்பலோடு மூழ்கும் இசைக் கலைஞர்கள் மூவர்,

இறுதிநேர பாவமன்னிப்புத் தந்தபடியிருக்கும் பாதிரியின் வழிபாடு,

கடைசி நேரம்வரை கப்பல் மூழ்காது என கம்பீரமாக நம்பி, தண்ணீர் தன்னை நோக்கிச் சீறி வருகையில் சாவின் பீதி காண்பிக்கும் சீமான்.

கட்டிப்பிடித்தபடி தண்ணீரில் மூழ்கும் முதியவர் மூதாட்டி. தனியே நின்று பரிதவிக்கும் பெற்றோரைப் பறிகொடுத்த குழந்தை.

என சாவின் சந்நிதானத்தில் உன்னதர்களாகும் மனிதர்கள் குறித்த சித்திரங்கள் நிறைய இருக்கின்றன.

உன்னதர்கள் மட்டுமல்ல சிறுமதி படைத்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பெண்களும் குழந்தைகளும்



தான் தப்புவதற்கு முதலுரிமை என்பதையும் மீறி, அவசரமாகப் படகில் ஏறி உட்கார்ந்து உயிர் தப்ப நினைக்கும் கப்பல் முதலாளி.

> டைட்டானிப் படத்திற்காக 14 ஒஸ்கார் விருதுகள் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் 11 விருதுகளை இப்படம் தட்டிக்கொண்டுவிட்டது.
>
> முக்கியமானவை வருமாறு:
>
> மிகச்சிறந்த படம்
> 'இயக்குநர்'
> 'உடையமைப்பு'
> 'காட்சி ரூப அமைப்பு'
> 'இசை'
> 'நாடகபாணி இசை'
> 'படத்தொகுப்பு'
> 'ஒலியமைப்பு'
> 'தொழில்நுட்டம்'
>
> இயக்குநர்
> ஜேம்ஸ் கமரோன்.


காசு கொடுத்து தப்ப நினைக்கும் வில்லன் பிற்பாடு அனாதரவான குழந்தையைப் பாதுகாக்கும் சாக்கில் வேசமாடித் தப்பும் பணக்கார வில்லன்.

என சாவின் பயத்தில் சிறு மனிதராகும் மேல் வர்க்கத்தவர் பற்றிய சித்தரிப்புக்களும் படத்தில் இருக்கின்றன.

சில காட்சிகள், குறிப்பாக


[தொடர்ச்சி 18ம் பக்கம்]

யமுனா ராஜேந்திரன்




இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் மகேஸ்வரன் முகுந்தன் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



செல்வன்
தர்மராசா பிரதீபன்


வயது: 08

இடம்:
45739 Oererkanschwick
Germany.

### என் அம்மா

அதிகாலை என்னை எழுப்புவார் அம்மா.
அன்புடன் உணவு ஊட்டுவார் அம்மா.
எனக்கு உடுப்பு உடுத்தி பாடசா
லைக்கு அனுப்புவார் அம்மா.
நான் பாடசாலை விட்டு வரும் வழியைப்
பார்த்திருப்பார் அம்மா.
நான் பாடசாலை விட்டுவந்ததும் என்னை தடவி
தூக்கி கொஞ்சுவார் அம்மா.
பாசமுடன் நான் விரும்பும் உணவை தருவார்
அம்மா.
மாலையில் என்னை விளையாட அனுப்புவார்
என் அம்மா.
விளையாட்டு முடிந்து நான் வந்ததும்
என்னைக் குளிப்பாட்டி விடுவார் அம்மா.
எனக்கு பாடம் சொல்லித்தருவார் அம்மா.

## கோள்கள்



1. கோள்கள் ஒன்பது.
2. அவைகள்: புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்டியூன், புளுட்டோ
3. புதன் விட்டம் 4880 கிலோ மீற்றர்கள்.
4. மிகக்குறைந்த கால அளவில் சூரியனைச் சுற்றிவரும் கோள், புதன்.
5. சுக்கிரக் கோளின் வெப்பநிலை 462°c.
6. சுக்கிரக்கோளின் விட்டம் 12104 கிலோ மீற்றர்கள்.
7. பூமியைப் போல் சுற்றுப்புற சூழ்நிலை உள்ள கிரகம் செவ்வாய்.
8. செவ்வாயின் எடை பூமியின் எடையில் பத்தில் ஒரு பங்கு.
9. சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய கிரகம் வியாழன்.
10. வியாழன் கிரகத்தின் மேற்பரப்பு சராசரி வெப்பநிலை 140°c.
11. இரண்டாவது பெரிய கிரகம் சனி.
12. சனிக்கு துணைக்கோள்கள் 21.
13. யுரேனெஸ் தனது அச்சில் ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு ஆகும் கால அளவு 11 மணிகள்.
14. யுரேனசின் நிறை பூமியைப்போல் 14.5 மடங்கு பெரியது.
15. நெப்ட்டியூனின் நிறை பூமியைவிட 17.2 மடங்கு.
16. மிகப் பெரிய முட்டை வடிவக் கிரகமான புளுட்டோவின் மேல்பக்கவெப்பநிலை 260°F.

ஜெயரட்ணம்—ஜெகசோதி
நோர்வே

## கவிதை முற்றம்

### பைலட்டாக ஆகிடப் போறேன்....



வானமெங்கும் பறவைகளைப்
பார்க்கிற போது
நானும் அங்கு சென்றுவர
ஆசை வருகுது!

மேகமெங்கும் ஏறி ஏறிச்
சென்றிட வேண்டும்!
காகமென அங்கும் இங்கும்
பறந்திட வேண்டும்!

ஆகாயத்து நட்சத்திரம்
அனைத்தின் மீதிலும்
அலையைப் போல புரண்டு
புரண்டு
பறந்திட வேண்டும்!

ஏரோப்பிளேன் பைலட்டாக
ஆகிடப் போறேன்!
எந்தன் மனது சொன்னபடி
பறந்திடப் போறேன்!

யார் வந்தாலும் அவரை எல்லாம்
ஏற்றிச் செல்லுவேன்!
யார் வரினும் சொல்லுங்கள் நான்
கூட்டிச் செல்கிறேன்!

- செ. யோ -

## குட்டிக்கதை படிப்போம்

### ஒரு கணக்கு

கணக்கு வகுப்பு நடந்துகொண்டிருந்தது. பள்ளி ஆய்வர் உள்ளே வந்தார். 'வகுப்பில் கணக்கில் கெட்டிக்கார மாணவி யார்' என்று கேட்டார். ஆசிரியர் ஒரு மாணவியைக் காட்டினார். அவள் எழுந்து நின்றாள்.

'உன்னை ஒரு கடினமான கேள்வி கேட்கப் போகிறேன். இதுவரை உன் பெற்றோர்கள் உனக்காக எவ்வளவு தொகை செலவழித்திருப்பார்கள்' என்று கேட்டார் ஆய்வர்.

மாணவி பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்து நின்றாள்.

'நீங்கள் இந்தக் கணக்கு பற்றி நினைத்துப் பார்த்திருக்கவே மாட்டீர்கள்; இது மிகவும் முக்கியமான கணக்கு. நாம் எல்லோரும் சேர்ந்து கணக்கிட்டுப் பார்க்கலாம். உணவு, உடை, சலவை, எழுதுபொருள் முதலியவற்றுக்குச் சராசரி ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாமா?

'அது மிகவும் குறைவு என்று நினைக்கின்றேன்' என்றாள் மாணவி.

'இருக்கட்டும், அப்படிப் பார்த்தால் மாதம் நூற்று ஐம்பது ரூபாய் ஆகிறது. ஆண்டுக்கு எத்தனை மாதங்கள்?'

'பன்னிரண்டு'

'சரி, உன் வயது என்ன?'

'பதினாறு'

'கணக்கிடு, இதுவரை உனக்கு மட்டும் எவ்வளவு செலவாகியுள்ளது?'

மாணவி கணக்கிடத் தொடங்கினாள்.

'இருபத்தெட்டாயிரத்து எண்ணூறு ரூபாய் ஆகிறது' என்று ஆச்சரியத்துடன் சொன்னாள். ஐயோ, இவ்வளவு தொகையா என்று எண்ணியபோது அவளுக்கு ஒருவித அச்சம் தோன்றியது.

'இது மட்டும் போதாது. இதனுடன் மருத்துவச் செலவு, பயணச் செலவு முதலியவற்றையும் சேர்க்க வேண்டும். நீ பிறந்தது முதல் உன்னை வளர்க்க உன் தாய் பட்ட துன்பங்கள், பொருள் தேடுவதற்காகக் களைப்பைப் பொருட்படுத்தாமல் உழைக்கும் தந்தையின் துன்பங்கள் இவற்றையும் சேர்க்க வேண்டும். அன்பு, களைப்பு, துன்பங்கள் இவற்றை ரூபாய் மதிப்பில் சொல்ல முடியுமா?' என்று கேட்டார் ஆய்வர்.

'முடியவே முடியாது' என்றாள் மாணவி.

'கணக்கிட முடியாது என்றால் உன் வாழ்க்கையில் அவற்றை எப்படித் திருப்பிச் செலுத்துவாய்?'

சிறுமி ஒரு கணம் யோசித்தாள்.

'அவர்களை உள்ளன்போடு நேசித்தும் அவர்களுக்காகப் பிற்காலத்தில் உழைத்தும் ஈடு செய்யலாம்'


'நீ சொல்வது சரிதான். நல்ல பண்புகளுடன் அன்புகாட்டி அவர்களுக்கு உதவ வேண்டும்' என்றார் ஆய்வர்.

எல்லா மாணவிகளும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர்.

பிரெஞ்சு எழுத்தாளர்
எம். குய்யோ.

## சித்திர முற்றம்

### வர்ணம் தீட்டி மகிழுங்கள்



## அறிந்து கொள்ளுங்கள்

### 'எலோங்' மான்கள்



'எலோங்' என்று அழைக்கப்படும் மான்வகைகளை உங்களுக்குத் தெரியுமா? வட ஐரோப்பா, ஆசியா அலாஸ்கா, கனடா பகுதிகளில் வாழும் இந்த மான்கள், உலகில் உள்ள மான்வகைகளிலேயே பெரியவை. சுமார் 800 கிலோ நிறையுடைய இந்த மான்கள் பலமான கொம்புகளைக் கொண்டவை. அவற்றின் நிறை மாத்திரம் 20 கிலோவரை வரும். தங்கள் காதல் உறவுக்காலங்களில் மாத்திரம் ஒன்றுகூடும் இந்த மான்கள் மற்றைய வேளைகளில் தனியாகவே வாழும் பழக்கம் கொண்டவை. ஒரு முறைக்கு ஒரு குட்டியையே ஈனுகின்ற இந்த மான்கள் கருத்தரித்து 8 மாதத்தில் குட்டிகளை ஈனும். கிழங்குகள், வேர்கள், நீர்வாழ் தாவரங்களை இவை விரும்பி உண்ணும்.



# புலம்பெயர் பெண்களும் பெண்விடுதலை நிலைப்பாடும்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் 08.03.98 அன்று நடாத்தப்பட்ட எழுச்சிமாலை நிகழ்ச்சியில் ஈழமுரசுப் பெண்கள் பகுதியினர் அங்கு வருகைதந்த பெண்களிடம் பெண் விடுதலை ஏன் அவசியம் என்பது பற்றிய அவர்களது அபிப்பிராயங்களினது தொடர்ச்சி......

**கேள்வி:** *பெண்கள் விடுதலை பற்றியும் அதற்காகப் போராடும் பெண்ணுரிமை அமைப்புகள் பற்றியும் உங்களது அபிப்பிராயம் என்ன?*

**பதில்:** பிரெஞ்சுப் பெண்மணியான இவர் (சற்று உணர்ச்சி வசப்பட்டவராக) நிச்சயமாக பெண்களாகிய எமக்கு பூரண சம உரிமை வேண்டும். இன்று நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் தமிழ்மொழி புரியாமையால் என்னால் பூரணமாக சில கருத்துக்களை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் தந்தவர்களின் பாவனைகள் மற்றும் இங்கு காணப்படும் உங்களைப் போன்ற தமிழ்ப் பெண்களின் செயற்பாட்டையும் பார்க்கும்போது போலித்தனமில்லாத ஒரு தீவிரமான போராட்டத்தை நடத்துபவர்களின் உண்மையான உணர்ச்சிகளை என்னால் இனம்காண முடிந்தது. யார் மூலமாக என்றால்தான் என்ன, எங்கும் பெண்கள் சமமாக வாழவேண் டும் என்பதே என்னுடைய ஆசை. உங்கள் போராட்டம் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக்கள். (தொடரும்)

# தமிழ்நாட்டிலிருந்து பாராளுமன்றம் சென்ற ஒரேயொரு பெண் எம்.பி. டாக்டர் சரோஜா



அண்மையில் தமிழ்நாட்டில் நடந்து முடிந்த தேர்தலில் பாராளுமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட ஒரேயொரு பெண் எம்.பி. என்ற பெருமை டாக்டர் சரோஜாவிற்குக் கிடைத்துள்ளது. சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு தன் எதிர்த்தரப்பு வேட்பாளரை 54,377 வாக்குகளால் தோற்கடித்ததன் மூலமே இன்று இந்த நிலையை அடைந்துள்ள சரோஜா, உண்மையில் தன் சொந்தக் குடும்பத்தில் எந்தவித அரசியல் பின்னணியும் இல்லாதவர். சேலம் பகுதியில் உள்ள சிறியதொரு கிராமம் ஊஞ்சனூர். அங்குள்ள ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் ஆறாவது மகளாகப் பிறந்த சரோஜா ஆரம்பத்தில் இருந்தே கல்வியில் சிறந்து விளங்கியதால் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றார். அதன்பின் மகப்பேறு பிரிவில் மேற்படிப்புப் படித்து தான் கற்ற கல்லூரியிலேயே உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இந்த வேளையில் தமிழக அரசாலேயே இரண்டு வருடம் மருத்துவப் பணிக்காக சவுதி அரேபியா அனுப்பிவைக்கப்பட்டார். அங்கிருந்து திரும்பியவுடனேயே சிறுவயது முதல் தன் அடிமனதில் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற ஆசைக்கு அத்திவாரம்போடும் முகமாக, அ.தி.மு.க. கட்சியில் இணைந்தார். இதன்மூலம் 1991 இல் இடம்பெற்ற தேர்தலில் வென்று 5 ஆண்டுகள் எம்.எல்.ஏ.வாக மக்களிடம் சேவையாற்றினார். அதன் பின் 96-ம் ஆண்டுத் தேர்தலில் மற்றைய எம்.எல்.ஏ.க்களைப் போலவே இவருக்கும் தேர்தலில் போட்டியிட அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் அண்மையில் தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடக்கையில் அ.தி.மு.க. கட்சித் தலைவரின் நேரடி அனுமதி மூலம் மீண்டும் தேர்தல் களத்தில் துணிச்சலாக இறங்கினார். தான் பிறந்த மண்ணுக்கே சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையை மக்கள் முன் வைத்தார். இதை மக்கள் ஏற்றுக் கொண்டதால் இன்று அமோக வெற்றியை அடைந்துள்ளார் சரோஜா. இவரை வெற்றியடைய வைத்த அந்த மக்களுக்கு நிறைவான ஒரு அரசியல் சேவையையாற்றுவதன் மூலமே தொடர்ந்தும் அவர்கள் மத்தியில் நிலைத்து நிற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# — தொழில் அதிபர் சரா கலோவே —
# ஆபிரிக்க பெண்ணின் மறுபக்கம்

பின் முதுகில் தூங்கும் பிள்ளை - தலையில் விறகுக்கட்டு, கர்ப்பிணி- இதுதான் ஆபிரிக்க பெண்ணுக்கு உலகம் தரும் 'மரபு ரீதியான' தோற்றம். இந்த மோசமான எச்சசொச்சங்களில் இருந்து ஆபிரிக்கப் பெண் மெதுவாக விடுபடத் தொடங்கியுள்ளார்கள் என்பதற்கு அங்கு இடம்பெறும் விரைவான மாற்றங்கள் எடுத்துக் காட்டாகின்றது.



கானாவின் பெண் நிர்வாகிகள் சங்கத் தலைவி லுசியா குவாசி தம் சமூக அந்தஸ்து உயர்ந்துவிட்டதாக பெருமையுடன் அறிவிக்கின்றார். 'எமது ஆபிரிக்கப் பெண்கள் கணினிகளை இயக்குகின்றனர்; தேசிய பொருளாதாரத்தை அதிகரிக்கும் வளத்தைப் பெருக்குகின்றனர்; தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்' என்கின்றார்.

சரா கலோவே என்னும் கானா பெண்மணி இன்று ஆபிரிக்க பெண்களின் உயர்வுக்கு உதாரணமாக திகழ்கின்றார். 1994-ம் ஆண்டு சரா கலோவே கானாவின் சுகாதார பொருட்களை உற்பத்திசெய்யும் நிறுவனம் ஒன்றை தைரியமாக வாங்கினார். அதனது பெயரை தன் விருப்பத்திற்கு மாற்றி புதிய வணிக தந்திரோபாயத்தை அதனுள் புகுத்தினார். காலம் காலமாக நோயினால் தாக்கப்படும் கானா பெண்களுக்கு சுகாதாரம், சுத்தம் பற்றி போதித்தார். அதனூடாக தன் உற்பத்தியை சந்தைப்படுத்தினார். பாடசாலைகள், கிராமசங்கங்கள் எங்கும் சராவின் சுத்தம் பற்றிய போதனைகள் பெண்களை சென்றடைகின்றன.

சராவின் நிர்வாக ஆற்றலை கானாவின் பெண் நிர்வாகிகள் அமைப்பு 'ஆபிரிக்க பெண்ணின் மறுபக்கம்' என உரிமை கொண்டாடுகின்றன.

'முன்னர் நாம் எமது உரிமைகளை கேட்கவில்லை; அதனால் அரசியல் மயப்படாது இருந்தோம்' என்கிறார் கானாவின் முதல்பெண்மணி நானா சொணாடு. இன்று அவர் கானாவின் பலம்மிக்க பெண்கள் அமைப்புக்களை அரசியல் களத்திற்கு அழைத்து வந்துள்ளார். மேற்கு ஆபிரிக்காவில் இடம் பெறும் இம்மாற்றங்கள் முழு ஆபிரிக்காவிலும் பிரதிபலிக்கட்டும்!

## விதவையாய் சுமங்கலிகள்

பெண்ணே<br>
பாவமடி உன் நிலைமை<br>
படிப்புடன்<br>
நகை ரொக்கம்<br>
தனிவீடு தந்தும்!<br>
உழைத்தே தினம் வாடி<br>
பணிவிடைகள் செய்தும்!<br>
தாலிக்குள்<br>
விதவையாய்<br>
சுமங்கலிகள் இருப்பதுதான்!

சி. இராசலிங்கம்<br>
சுவிஸ்

# கர்ப்ப காலங்களில் கவனிக்க வேண்டியவை

எந்த உயிரினங்களிடையேயும் தொடர்ச்சியான சந்ததிப் பரவலை உருவாக்க அடிப்படையாக இருப்பதே தாய்மையாகும். இத் தாய்மைப்பேறு என்பது இன்பம், துன்பம், ஏக்கம், கற்பனை என எல்லா உணர்ச்சிகளையும் கலந்து வைத்திருக்கும் ஓர் அனுபவம். ஆனால் இதை வாழ்க்கையின் இயல்பான ஓர் நிகழ்வாகக் கருதாமல் சிலர் ஒரு நோயைப்போல் எண்ணிக் கலங்குவதும் உண்டு. உண்மையில் முதல் தோன்றும் கர்ப்ப காலம் சற்று எல்லோரையும் பயங்கொள்ள வைப்பதாகவே அமைகிறது. காரணம் அதுதான் முதல் அனுபவம் என்பதாகும். இதனால் இத்தகைய பயங்களைத் தவிர்க்க இக் கர்ப்ப காலங்களைப் பற்றி சற்றுத் தெளிவாக அறிந்து வைத்திருத்தல் மிக அவசியம்.

சாதாரணமாக ஒரு பெண் கர்ப்பமுற்றால் முதல் பன்னிரண்டு வாரங்களுக்கு உட்பட்ட காலத்தை முதற் கட்டமெனவும், பதின்மூன்றில் இருந்து முப்பத்தேழாவது மட்டுமான வாரப்பகுதியை இரண்டாம் மூன்றாம் கட்டம் எனவும் பிரிக்கப் படுகின்றது. கப்பபமுற்ற தாய் முதலிலேயே தன் மனதில்கொள்ள வேண்டியது இது ஒரு உயிரைக்குடிக்கப் போகும் நோய் அல்ல, மாறாக ஒரு புது உயிரை உலகிற்குக் கொண்டு வரப் போகும் பரவச அனுபவமே என்பதாகும். அத்துடன் குழப்பமில்லா மனச் சிந்தனைகளை தங்கள் வசம் கொள்ளவேண்டும்.

கர்ப்பகாலத்தின் முதல் பன்னிரண்டு கிழமைகளுக்குள்ளும் மாதம் ஒரு முறை அல்லது தேவைப்படின் அதற்கும் கூடியளவு வைத்தியரிடம் சென்று நிறைவான பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும். சிலவேளை முன்னைய பிரசவங்களில் ஏதும் பிரச்சினை இருந்தாலும் அதனையும் தவறாது குறிப்பிடல் வேண்டும். இத்தோடு உணவு விடயத்திலும் அதிக அக்கறை கொள்ளவேண்டும். மற்றும் இவ் ஆரம்ப நிலையிலேயே குழந்தைக்குப் பாலூட்டுவது மற்றும் குறிப்பாக, மார்பகங்களைச் சரிவர ஆராய்ந்து முலைக்காம்புகளை நல்ல விதத்தில் பேணிப்பாதுகாக்க வேண்டும். சிலருக்கு முலைக்காம்பு உள்சுருங்கியிருந்தால் அதை எவ்வாறு நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதை வைத்தியரிடம் ஆலோசனை செய்யலாம்.

முதல் கட்டத்தின் பின்பும் தொடர்ந்தும் வைத்தியர் உங்களை பரிசோதிப்பார். அக்கால கட்டத்தில் 'அல்ட்ரா சோனாகிராம்' அல்லது 'அல்ட்ரா சவுண்ட்' என்னும் பரிசோதனையை நிகழ்த்தி வயிற்றுள் உள்ள உங்கள் குழந்தையின் நிலைப்பாடு மற்றும் ஆணா, பெண்ணா என்பது பற்றியும் தெரியப்படுத்துவார். இதன் போது உங்களின் இரத்தம் மற்றும் சிறுநீரகத்தையும் சோதனை செய்வதன் மூலம் ஏதேனும் தொற்று நோய்கள் மற்றும் இரத்தத்தில் சீனியின் அளவு எப்படி இருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம். பொதுவாக கர்ப்ப காலத்தின்போது தாயின் உடல்நிறை கூடும். இது நிறைவான ஊட்டச் சத்தாலோ அல்லது கர்ப்பப் பையில் அதிகளவு நீர் தேங்கி நிற்பதாலோ என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். முறையான வைத்திய ஆலோசனையைப் பெறுவதால் கூடியளவிற்கு குறைப்பிரசவம் தவிர்க்கப்படும். சிலவேளை உடல் ரீதியாக சாதாரண பிரசவத்திற்கு முடியாதெனில் சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்படலாம். அதற்கும் எம் மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

பிரசவமானதும் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதால் தாய்க்கும் சேய்க்கும் ஏராளமான நன்மை கிடைக்கும். அத்தோடு பிரசவத்தின் போது பிறப்புறுப்பில் உருவாகும் சில காயங்கள் தையல்களை சரியான முறையில் மருந்திட்டு வைத்தியரின் அணுகல், உடனேயே சரி செய்தல் மிகமிக அவசியம். இதைவிட அடுத்த கர்ப்பம் உருவாவதற்கு கடைசி 3 வருட இடைவெளியாவது அவசியம். அதற்கான குடும்பக்கட்டுப்பாட்டு முறையினையும் மிக அவதானமாக வைத்தியரின் ஆலோசனையுடனேயே நடைமுறைப்படுத்த வேண்டும்.




ஞாயிற்றுக்கிழமை அதிகாலைவேளை அந்த அந்தோனியார் கோவிலில் இருந்து எழுந்து வந்த மணியோசைக்கு, கோயில் கோபுரத்தில் உறங்கிக்கொண்டிருந்த புறாக்கள் திடுக்கிட்டு விழித்து நாலா பக்கமும் சிதறிப்பறந்தன. நீலக்கடலின் வெண் அலைகள் கரையில் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அப்போதுதான் எழுந்த யோசப்பு, சுருட்டு ஒன்றை பற்றவைத்துக்கொண்டு, ஒற்றைப் போர்வையுடன் வீட்டின் முன்வாசலில் குந்தியிருந்து, கடலின் நீர் ஓட்டத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். மல்லிகைப் பந்தலில் இருந்து வெளிவந்த நறுமணமும், ஈரலிப்புக் கலந்த குளிர் காற்றும் அவன் மேனியை சுகமாக தழுவிச் சென்றுகொண்டிருந்தன. ஆனால் அவன் எந்தவித சலனமுமின்றி சுருட்டுப் புகையை ஒரே சீரான வேகத்தில் இழுத்து வெளியிட்டுக்கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் 'அந்தோனியார் கோயில் பெருநாள் வருகுது!... செலவுகளுக்கு என்ன செய்யலாம்...???' என்ற கேள்வி மட்டுமே விடை தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது. அவனது சிந்தனைகளுக்கிடையே வந்து குறுக்கிட்ட அவனது மனைவி மரியா 'இந்தக் குளிருக்க என்னப்பா செய்யிறியள்...? எழும்பி பாக்கிற வேலையை பாருங்கோவன்...' என்று தனது கையில் இருந்த தேநீர்ப் பாத்திரத்தை மணலின் மீது வைத்தாள். யோசப்பின் முகத்திலுள்ள கவலையின் ரேகைகளை புரிந்துகொண்ட அவள், 'அந்த அந்தோனியார் கைவிடமாட்டார். காத்தும் குறைஞ்சு போச்சு...! இனி நல்ல தொழிலுகள் நடக்கும்...!' என்று நம்பிக்கையுடன் கூறியபடி அவனின் தலைமயிரில் ஆங்காங்கே இருந்த வெள்ளை மணலை தட்டிவிட்டாள்.

'இண்டைக்கு இரவு கடலுக்கு போகவேணும், உவன் அன்ரனி எங்க போட்டான்?... அவனை ஊர் சுத்த போகவேண்டாம் எண்டு சொல்லு. வலை பொத்த வேணும்... கனக்க வேலை கிடக்கு' என்று யோசப்பு மனைவிக்குச் சொல்லிக்கொண்டிருக்க, அவர்களின் கடைக்குட்டி அருள், சாரத்தால் போர்த்துக்கொண்டு தாயின் மடியில் வந்து புகுந்தான். முதல்நாள் பின்னேரம் கடலிலே குளித்த அடையாளமாக அவன் கை, கால், முதுகு எங்குமே உப்புப் படலம் படிந்திருந்தது.

இதைக் கவனித்துக்கொண்டு அருகில் வந்த தமக்கை மேரி, அருளின் காதைப்பிடித்து முறுக்கியபடி 'ஆளைப் பார்...பகல் முழுக்க நீர்க்காகம் மாதிரி கடற்குளிப்பு...! தலையெல்லாம் செம்பாடு பத்திக் கிடக்கு... போய்க்குளி...' என்று திட்டினாள். 'எடியே அவன்ரை பிஞ்சுக் காதை முறுக்காத' என்று தாய் இடையில் குறுக்கிட, நீதான் அவனுக்கு செல்லம் குடுக்கிறது' என்று மேரியும் தாய்மீது பாய, அருள் எழுந்து குறும்புடன் தமக்கையைப் பார்த்து கண் சிமிட்டியபடி 'அக்கா என்னை கண்டபடி பேசாதை... உனக்கு நான்தான் உழைச்சு சீதனம் தருவன்..! கடலுக்குள்ள நீந்திப் பழகினால்தான் பிறகு உழைக்கப் போகலாம்...' என்றான்.

அருளின் சுட்டித்தனமான கதையை இரசித்து மூவரும் சிரித்துக்கொண்டிருக்க 'உனக்கு வாய் இல்லாமல் போனால்...நாயும் உன்னைத் தேடாது..' என்று தம்பியாரைப் பேசியபடி அன்ரனியும் அங்கு வந்து சேர்ந்தான்.

தனது பிள்ளைகளின் மகிழ்ச்சியை மனதினுள் நினைத்து பெருமூச்சு விட்ட யோசப், 'வறுமை இல்லாவிட்டால் எங்கள் வாழ்க்கை இன்னும் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்' என சில நிமிடங்களை அந்த கற்பனையில் கழித்த பின் இண்டைக்கு கோயில் பூசைக்கு போகவேணும்... எல்லாரும் எழும்பி வெளிக்கிடுங்கோ...' என்று ஆணையிட்டபடி எழுந்து கடற்கரைப் பக்கமாகச் சென்றான்.

அந்த சிறிய வீட்டு முற்றத்தின் இருமருங்கிலும் சூரியகாந்தி, செவ்வந்தி, மணிவாழை, குறோட்டன் போன்றன பச்சைப்பசேல் என்று எந்தநேரமும் காட்சியளித்துக்கொண்டிருக்கும். அவற்றை வளர்த்த உரிமை அவளுக்குத்தான் சேரும். இன்று அந்த பூந்தோட்டத்தைச் சுற்றி காகங்கள் குழுமியிருந்தன. ஏனென்றால் கடலுக்கு எவரும் போகாதபடியால் காக்கைகளும் சாப்பாட்டிற்கு திண்டாடி, கடைசியில் இவர்கள் வீட்டு முற்றத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன.

அருள் தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த கோதுமை மாப் பிட்டைக் காகங்களுக்கும் கொஞ்சம் எறிந்து கொண்டிருந்தான். காகங்கள் பெருகுவதைக் கண்ட அன்ரனி 'டேய்' என்று தம்பியாரை நோக்கி அதட்டலுடன் குரல் எழுப்ப 'அண்ணா இதுகளும் பாவம்தான்...! எங்களுக்கு உழைச்சுத்தர அப்பாவும், சமைச்சுத்தர அம்மாவும், அக்காவும் இருக்கினம்...! இதுகளுக்கு ஆர் இருக்கிறது.' என்று அன்ரனியின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தபடி அருள் கேட்டான். இந்த நியாயமான கேள்வியால் சிறிது நேரம் வாயடைத்துப்போன அன்ரனி பின் சிறு புன்னகையுடன் 'கடவுள் எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் சாப்பாட்டுக்கு வழிபண்ணுவார்...இப்ப நீ சாப்பிட்டிட்டு கோயிலுக்கு வெளிக்கிடு' என்று சமாதானப்படுத்தினான்.

கோயிலை நெருங்கும்வரை, அன்ரனியின் மனதில் அருளின் கேள்வியே எதிரொலித்துக்கொண்டிருந்தது. அருள் முன்னையவிட, இப்பொழுதெல்லாம் அடிக்கடி கேள்விகளை எழுப்புகின்றான். அவனது நியாயமான சிந்தனைகளை நல்லவழியில் திருப்பவேண்டும் என்று யோசித்த அன்ரனிக்கு, அருளைப்பற்றிய ஏக்கமும், அச்சமும் ஒரேநேரத்தில் தோன்றி மறைந்துகொண்டிருந்தது.

தனது மனச் சஞ்சலத்தை ஓரளவு கட்டுப்படுத்தியபடி கோவிலுக்குள் பார்வையைச் செலுத்தினான். ஊர் மொத்தமும் அங்கே கூடியிருந்தது. எல்லோரது முகங்களிலும் ஆண்டவன் மீதான நம்பிக்கை சுடர்விட்டுக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. மனித குலத்தின் அன்புச் சுமைதாங்கிய சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரின் திருஉருவம் நெஞ்சை நெகிழ வைத்துக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் தூயவெள்ளை ஆடையில் பாதிரியார் உள்ளே நுழைய, அங்கே ஆண்டவனை நேரில் கண்டதுபோன்ற புத்துணர்ச்சியும், ஆனந்தமும் உண்டாகியது. பூசைகள் தொடங்க, அன்ரனி மன இறுக்கம் குறைந்தவனாக கண்களை மூடி பிரார்த்தனையில் ஈடுபட்டான்.

மூடிய அன்ரனியின் கண்களுக்கு ஏதோ பழைய நினைவுகளும், கனவுகளும் தோன்றி சிறிதுநேரம் அலைக்கழித்தன. பின்பு கோவிலின் அமைதியான மணி ஓசைக்கு அவனது மனம் ஒருவாறு ஒருநிலைப்பட்டு 'ஆண்டவா எங்கள் குடும்பத்தின் வறுமை என்றைக்கு தீரும்?... கடலையே நம்பியிருக்கும் எங்களின் பிழைப்பு ஒரு நல்ல நிலைக்கு வராதா?' என்று கெஞ்சியது. அவனின் மனவெளியில் உழைத்து ஓடாகத் தேய்ந்து போன தகப்பனின் உருவமும், வறுமையின் கோலத்தைக் காட்டும் தாயின் முகமும், இளமைக் கனவுகளை சுமந்திருக்கும் தமக்கையின் கண்களும், அப்பாவித்தனமான தம்பியின் சிரிப்பும் நாட்டியமாடின. இவர்களது கனவெல்லாம் எப்போது நனவாகுமோ? என்று கண்கள் பனிக்க மீண்டும் ஆண்டவனை கெஞ்சத் தொடங்கினான்.

பூசைக்கு நடுவே பாதிரியார் எல்லோரையும் ஆசீர்வதித்தார். அன்ரனியும் ஆசியைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் பிரார்த்தனையில் ஈடுபட்டான். 'எங்கள் குடும்பம் ஓரளவு நல்ல நிலைக்கு வந்ததும், நாட்டுக்காக நான் எனது பணியை செய்ய நீதான் அருளவேண்டும். நான் ஓடித்திரிந்து விளையாடிய இந்த மண்ணில் எங்கள் மக்கள் என்றுமே சுதந்திரமாக வாழ, என் பங்கும் இருக்கவேண்டும். நாளுக்கு நாள் அநியாயமாக இன வெறியர்களால் அழிந்து கொண்டே போகும்...அப்பாவிகளின் மரணங்களுக்கு முடிவு தோன்றாதா? சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் மக்களின் சோகம் தீராதா?' என்று உளமுருக வேண்டினான்.

அவனது ஏக்கம் கலந்த விழிகளில், அவனையறியாமல் சிறிது நீர்ப்படலம் உண்டாகியது. அதை மறைக்க கண்களை இன்னும் இறுக மூடி, மீண்டும் பிரார்த்தனையில் ஈடுபட்டான். நீண்டநேரத்தின் பின் 'பரலோகத்தில இருக்கும் எங்கள் பிதாவே' என்ற பாதிரியாரின் அன்புக்குரல் கேட்டு, தன்னிலை வந்தவன் பூசை முடிய கோவிலை விட்டு வெளியேறினான்.

வீட்டு வாசற்படலையடியில் தாயும், மாமியாரும் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். அன்ரனியைக் கண்டதும், கதையை நிறுத்தி இருவரும் பிரிந்து போனார்கள். மாமியார் மறைய, அன்ரனி தாயின் முகத்தை 'என்ன' என்பதுபோல் நோக்கினான்.

'எல்லாப் பெடியளும், வெளிநாட்டுக்கு வெளிக்கிடுதுகளாம்...! அதுதான் மச்சாள் சொன்னவ, தாங்கள் அரைவாசிக்காசு தாறமாம்..! மிச்சத்தைப் போட்டு உன்னை வெளியாலை அனுப்பட்டாம்..' என்று தாய் முடிப்பதிற்கிடையில், அன்ரனி கோபமாக 'இப்பிடி ஏதும் விசர்க்கதை இனிக்கதைச்சால் நான் இனி வீட்டுக்கே வரமாட்டன்...' என்று கோபமாக உறுமியவாறு தகப்பன் வலைபொத்தும் மாமரத்துக்கு கீழுள்ள கொட்டிலை நோக்கிச் சென்றான்.

அவனது கைகள் வலையில் இருந்தாலும், கோபத்தால் ஏற்பட்ட உணர்ச்சிக்கொந்தளிப்பால், சிறிது நடுங்கவே செய்தன. இருந்த வலைகளுக்குள் கிழிசல்கள் குறைவான வலைகளாக தேர்ந்தெடுத்து முதலில் பொத்தத்தொடங்கினான். நேவிக்காரனுக்கு பயந்து, கடலைவிட்டு விரைவாக வருவதற்கு ஏற்றதாகத்தான் வலைகள் படகு, மோட்டார் இயந்திரம் போன்றன எல்லோரும் வைத்திருந்தார்கள்.

நேரம் உச்சிப் பகல் வேளையை நெருங்க அன்ரனி வலைகளிலுள்ள கிழிசல்களை பொத்தி முடித்து சிறிது களைப்புடன் கொட்டில் மணலிலேயே படுத்துறங்க முற்பட்டான். அப்பொழுது 'அம்மா...அம்மா' என்ற அருளின் குரல் வெளியே அச்சத்துடன் கேட்டது.

(தொடரும்)

'விடியலைத் தேடி' என்னும் இத்தொடர் கதை குடத்தனையூர் உதயனின் முதற் படைப்பாகும். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வரிசையில் இதனை இங்கு பிரசுரிக்கின்றோம். உதயனின் எழுத்துப் பணி மேலும் தொடர்ந்து, அவர் சமூக அக்கறையுள்ள சிறந்த எழுத்தாளராக வளர வாழ்த்துகிறோம்.

- ஆர்

## சினிமா

# டைட்டானிக்:

*[15ம் பக்கத் தொடர்ச்சி]*

இரண்டு காட்சிகள் அவற்றின் வேகத்துக்காகவும், காமெரா அசுலிப்புக்காகவும் போற்றத்தக்கன.

மூன்றாம் வகுப்பில் அயர்லாந்து நாட்டுக் கூலிக்காரர்கள். அவர்களின் கும்மாளம், நடனம், குழந்தைகள், குடிவெறி, எக்களிப்பு, சுற்றிச் சுழலும் கால்கள், கள்வெறிக் களியாட்டம். தட தடாவென தாளமிடும் நடன லயக் கால்கள். அணைத்தபடி முத்தமிடும் ஆண் பெண்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டுக் களியாட்டத்தின் உவகையை வெளியிடும் காட்சி - அந் நடனக் காட்சி.

கப்பலின் முகப்பு. அகண்ட கடல். பரந்த நீல ஆகாயம். இரும்புக் கம்பிகள். முகப்பில் கால் பதித்தபடி இளம்பெண். அவளது இடையில் பிடித்தபடி நாயகன். பிரித்து வைத்த கைகள். பறவையின் இறகுகள் மாதிரி காற்றில் மிதக்கும் கைகள். வேகமான அரைவட்டச் சூழலில் நகரும் காமெரா. அதே வேகத்தில் சுழலும் வானம். கடல் சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரின் பிம்பம் போன்றதாகிறது. அக் காதலர்களின் நின்ற நிலையிலான அமைப்பு. சிலிர்ப்பூட்டும் சந்தோஷத்தையும் அதே வேளை ஆழ்ந்த துயரத்தையும் எழுப்பும் காட்சியோட்டம் அது.

இப்படம் பற்றி எதிர்மறையாக, கடுமையாக விமர்சித்து வந்த விமர்சனங்கள் மிகமிகச் சொற்பமே. அந்த விமர்சனங்கள் இருவகையில் முன் வைக்கப்படுகின்றன.

1) வரலாற்று ரீதியாக பின் தள்ளப்பட்ட சம்பவங்கள்.

2) சில கற்பனைகள் வரலாறாக மக்களால் நம்பப்பட்டு விடும் ஆபத்து.

முதல் விமர்சனம்: கொல்லப்பட்ட 1800 பேர்களின் ஆவணங்களை தேடிப் போனால், இதை விடவும் சோக மயமான வர்க்க ஒதுக்கல் குறித்த அனுபவங்கள் கிடைக்கக்கூடும். மேலும் சாவின் துயரம்தான் முக்கியமேயொழிய ரோமியோ ஜுலியட் காதல் அல்ல. இந்த மாபெரும் சோகம் கூட காதலுக்கு இடைப்பிரச்சினையாக, இடையூறாகவே நிகழ்வதாகப் படத்தில் உள்ளது. இந்தப் பார்முலாக் காதல் படத்தின் மையமான வரலாற்றையும், நடந்த சம்பவங்கள் பற்றிய ஆய்வையும் கேள்விக்கு உள்ளாக்கி விடக் கூடியவை. மேலும் படத்தின் நாயகன் நாயகி பாத்திரங்கள் கப்பல் பயணத்தில் வரலாற்று ரீதியில் பதியப்பட்டவர்கள் (Registered) அல்ல, கற்பனை மனிதர்கள்.

இரண்டாம் விமர்சனம்: கப்பல் பனிப்பாறையில் மோதி உடைந்தது என்பதுதான் வரலாறு. ஆனால் காதலர்களின் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த காவல் சிப்பந்தி கவனிக்காதால் அந்த விபத்து நேர்கிறது என்கிற மாதிரியான காட்சி படத்தில் இருக்கிறது. உடைந்ததற்கான நிஜக் காரணம், இதுவரை ஆய்வுக்குரிய காரணம். இங்கு கற்பனைப் பாத்திரங்களின் கற்பனைக் காரணத்திலே பிரதி செய்யப்படுகிறது.

இது ஆபத்தான அணுகுமுறை என்கிறது அவ் விமர்சனம். இத்தகைய விமர்சனத்தை 'சுப்பர்' விமர்சகரும் மார்க்சியருமான பிலிப் பிரெஞ் மேற்கொள்கிறார்.

டைட்டானிக் விபத்து பற்றி நிறைய ஆய்வுகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. 28000 பவுண்ஸ் கட்டணத்தில் டைட்டானிக் கப்பலைச் சென்று பார்க்க பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல் கம்பெனியொன்று ஏற்பாடு செய்து வருகிறது. இப்படம் பற்றி நிறைய கதைப் படங்களும் ஏற்கனவே வந்திருக்கின்றன.

இந்தப்படம் என்னளவில் டைட்டானிக் சம்பந்தமான வரலாற்றை தேடிச்சென்று படிக்கத் தூண்டியது. வரலாற்றுப் படம் உருவாக்கும் போக்கில், கட்டப்படும் கதையமைப்பு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி சிந்திக்கத் தூண்டியது. கதைக்கும் கற்பனைக்கும் ஆன சுதந்திரம் எது வரையிலானது என யோசிக்கத் தூண்டியது.

இதுவெல்லாம் இருந்தாலும் கூட, கலைஞனது சுதந்திரத்தையும், மாறும் சோகத்தை பல்வேறு விதங்களில் பல்வேறு நிலவும் தந்திரோபாயங்கள் - தொழில் முறைக்கு உட்பட்டு அவன் வெளியிடக்கூடிய வாய்ப்பையும் விமர்சனத்துடன் அங்கீகரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் வாழ்வு, வரலாறு அதன்பாலான அவனது நோக்கு எல்லாவற்றையுமே அவனவன், அவனுக்கு நேர்ந்த சூழல்களில் இருந்தே வெளியிடுகிறான்.

அவ்வகையில் இந்த டைட்டானிக் படம் ஒரு அழகான அனுபவத்தைத் தருவதோடு, காதல் சாவு பற்றிய நிரந்தர படைப்பு உள்ளகத்தையும் இது கொண்டிருக்கிறது. காதல் சாவு போன்றவற்றோடு மனிதன் இயற்கை கண்டு பயந்து போயிருக்கவும் செய்கிறான்.

இப்படம் காதல் - சாவு - பயம் போன்ற நிரந்தர விஷயங்களை 'இயக்குநர் புரிந்துகொண்டபடி அழகாக வெளியிட்டிருக்கிறது. அதற்காக இப்படத்தைப் பார்க்கலாம். பார்த்தபின் வரலாறு படிக்கலாம், படித்தபின் நமது டைட்டானிக் சித்திரத்தை நாம் உருவாக்கலாம்' இதன் மூலம் கடலின் ஆழத்தையும் மனித மனதின் சூட்சுமத்தையும் அறியலாம். நம் வாழ்வை மாற்றிக்கொள்ளலாம்.

அதற்காகவேனும் டிட்டானிக் படத்தை நாம் பார்த்துத்தான் ஆகவேண்டும்.

★

## பிழை திருத்தம்

### கியூபக் கவிஞர்

கடந்த இதழில் வெளியான திரு. ஜமுனா ராஜேந்திரனின் கியூபக் கவிஞர் நோர்பர்டோ கொடினோ பற்றிய ஆக்கத்தில் இரண்டாவது பத்தியில் வரும் ...ஒரு நெருக்கடி நிறைந்த தேச விடுதலைப் போராட்ட சமூகமான கியூபாவின் மோசடிக் கட்டுமான அனுபவங்கள்..

என்ற வசன அமைப்பில் கியூபாவின் சோஷலிச கட்டுமான அனுபவங்கள் என்றே வந்திருக்க வேண்டும். இத் தவறுக்கு மிகவும் வருத்தம் தெரிவிப்பதுடன் அதனை சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி.

- ஆர்

## சாளரம்

# 150 ஆண்டுகளின் முன்னால் தமிழில் மருத்துவ விஞ்ஞானத்தை வளர்க்க எண்ணிய

# —டொக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன்—

டொக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன், தமிழர் நெஞ்சங்களிலே என்றும் வாழ வேண்டியவர். அவரது அரும் பணியையும் இலட்சிய வாழ்க்கையையும் ஒப்பற்ற அறிவியற் சேவையையும் எம்முட் பலர் இன்றும் அறிந்திலர்.

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து, வைத்தியம் கற்பித்து, தமிழில் கலைச் சொற்களை ஆக்கி, தமிழில் வைத்திய விஞ்ஞான நூல்களை எழுதியும் மொழி பெயர்த்தும் வெளியிட்ட அன்னாரின் முன்னோடிச்சேவை காலத்தால் சாகாத அருஞ்சேவை.

'என் கடன் மேனாட்டு வைத்தியக் கல்வி நிலைபெறச் செய்வதே' என்று வாழ்ந்தவர் சாமுவேல் பிஸ்க்கிறீன்.

1847-1857 இற்கு இடைப்பட்ட பத்து ஆண்டுகளும், பின் 1862-1873 இற்கு இடைப்பட்ட பதினொரு ஆண்டுகளுமாக மொத்தம் 21 ஆண்டுகள் அவர் யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே சேவை புரிந்தார்.

1874 முதல் 1884 வரை தமது தாயகமான வூஸ்ரரில் சென்று வாழ்ந்த போதுங்கூட, தமது நேரத்தை தமிழில் வைத்திய நூல்களை வெளியிடுவதற்கே செலவழித்தார். தமது நூல்களில் அச்சேறாதவற்றை அச்சேற்றவும் திருத்திப் பதிப்பிக்க வேண்டியவற்றைத் திருத்தியும் தமிழ்ப்பணி செய்தார்.

அமெரிக்காவிலுள்ள மசாசூசெட் மாநிலத்திலே, வூஸ்டர் நகரின் 'கிறீன் ஹில்' என்னுமிடத்திலே, 1822-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் நாள் வில்லியம் கிறீன், ஜூலியா பிளிம்ரன் தம்பதிகளின் மகனாகப் பிறந்தார் சாமுவேல் பிஸ்க் கிறீன்.

1845-ஆம் ஆண்டு, நியூயோர்க்கிலுள்ள வைத்தியக் கல்லூரியிலே பட்டம் பெற்றுத் தன் சொந்த ஊராகிய வூஸ்டரில் வைத்திய சேவை புரியத் தொடங்கிய அவர், 'இருள் சூழ்ந்த' நாடு ஒன்றுக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற எண்ணங்கொண்டார். தனது கனவை நனவாக்கும் நோக்குடன் அமெரிக்க மிஷனை அவர் நாடியதன் பலனாக, யாழ்ப்பாணம் வந்து அமெரிக்க இலங்கை மிஷன் வைத்தியராகப் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டியது. 1847 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் நாள் தமது 25-வது வயதிலே அவர் யாழ்ப்பாணம் வந்தார்.

வட்டுக்கோட்டையில் வைத்திய சேவை புரியத் தொடங்கிய கிறீன், 1848 ஆம் ஆண்டு மானிப்பாயில் தனது சேவையைத் தொடங்கினார்.

தமிழர் மத்தியிலே பணிசெய்தல் வேண்டும் என்று அறிந்தவுடனேயே, தமிழ்மொழி கற்கத் தொடங்கிய அவர், யாழ்ப்பாணம் வந்தவுடனேயே 'முறைப்படி' தமிழ் பயில ஆரம்பித்தார்.

தமிழ் மொழி கற்றல் மிகவும் சிரமமாகும் எனப் பலர் அவருக்குக் கூறிய வேளையிலே, 'மற்றையோர் அதைக் கற்றுள்ளனர்: அதேபோல நானும் கற்கமுடியும்' என்று துணிவுடன் அவர் கூறினார். இவ்வண்ணம் கூறிய அவர், மிக விரைவிலே தமிழில் தேர்ச்சி பெற்றார்.

முதலில் ஆங்கில மொழி மூலம் தான் வைத்தியக் கல்வி போதிக்கப்பட்டது. ஆயினும், 'மக்களின் மொழியிலே' மேனாட்டு வைத்தியத்தைக் கற்பித்தல் வேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது. தமிழ்மொழி மூலம் மேனாட்டு வைத்தியத்தைக் கற்பிப்பதன்மூலம், விஞ்ஞான ரீதியில் அமைந்த மருத்துவ அறிவை மக்களிடையே நிலைபெறச் செய்தல் வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது.

1850 ஆம் ஆண்டிலேயே, நல்ல தமிழறிவு பெற்று, தமிழிலே மருத்துவக் கல்வியை ஆரம்பிக்க அத்திவாரமிட்டார், அதற்கு அடிப்படைத் தேவை கலைச் சொற்கள் அல்லவா? எனவே, கலைச் சொல்லாக்க முயற்சியிலும் ஈடுபடத் தொடங்கினார்.

### தமிழில் கலைச் சொற்கள்

'கலைச் சொல் ஆக்கும் முயற்சியில் நான் ஈடுபடத் தொடங்குகிறேன். நல்ல மருத்துவக் கலைச் சொற்கள் தமிழில் உள்ளன, எனது இந்த முயற்சி, தமிழில் மருத்துவ இலக்கியம் வளர்வதற்கு அத்திவாரமாக, ஆரம்பமாக அமைதல் வேண்டும் என நான் விரும்புகிறேன்'

1850 ஆம் ஆண்டிலேயே, டாக்டர் கிறீன் இப்படிக் கூறினார். காலப் போக்கிலே, கலைச் சொற்களை ஆக்கிய பின், திருவாங்கூரில் அன்று பணியாற்றிய டாக்டர் லோ என்பவருக்குத் தமது கலைச் சொற்களை அனுப்பி, 'எல்லோரும் ஒருமைப்பாடான கலைச் சொற்களைப் பயன்படுத்த உடன்பட்டால், நான் உற்சாகம் அடைவேன்: மகிழ்ச்சி அடைவேன்' என்று எழுதினார்.

இங்கு, அன்னாரின் தீர்க்க தரிசனம் தெளிவாகவுள்ளது. அக் காலத்திலேயே ஒருமைப்பாட்டை எண்ணிய கிறீனின் சிந்தனைக்கும் இன்றைய அறிஞரின் சிந்தனைக்குமுள்ள வேறுபாடும் புலனாகியது. தமிழ்க் கலைச் சொற் பிரயோகத்தில், தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்குமிடையே இற்றை வரை ஒருமைப்பாடில்லை. இரு நாட்டுத் தமிழரும் வெவ்வேறு கலைச் சொற்களையே இன்றும் பயன்படுத்தி, 'பூனைக்கு மணி கட்டுவது யார்' என்ற நிலையிலுள்ளதை தமிழ் உலகு நன்கறியும்.

### கிறீனின் மனவுறுதி

தமிழ் மொழி மூலம் வைத்தியக் கல்வியைக் கற்பிப்பதற்கு கிறீன் எத்துணை மனவுறுதியுடன் செயற்பட்டார் என்பதை விளக்கப் பல சம்பவங்களைக் கூறலாம். அவற்றுட் சிலவற்றை எனினும் குறிப்பிடுதல் இங்கு பொருத்தமாகும்.

1. போதனா மொழியாகத் தமிழைப் பயன்படுத்த ஆரம்பித்தவேளையிலே, அவரது மாணவர்கள் சற்றுத் தயங்கினர். ஆங்கிலமொழி மூலம் கற்பதையே அவர்கள் விரும்பினர். அப்பொழுது அவர் தமது மாணவர்களை அழைத்து, இவ் வண்ணம் கூறினார்.

'உங்களுக்குப் பத்துநாள் விடுமுறை தருகிறேன். நீங்கள் சென்று நன்றாகச் சிந்தியுங்கள், தமிழ்மொழி மூலம் கற்க விரும்பினால் மீண்டும் திரும்பி வகுப்புக்கு வாருங்கள், இன்றேல் வேறு தொழிலுக்குச் செல்லுங்கள்' ஆங்கில மொழி மூலம் கற்றால், குடியேற்ற நாட்டரசின் கீழ் நல்ல சம்பளத்துடன், தொழில் பார்க்க முடியும். ஆனால், தமது மாணவர்கள் வைத்தியப் பட்டம் பெற்றதும் அவரவர் ஊரிலே சென்று சேவை செய்ய வேண்டும் என்பதே அவரது இலட்சியமாக இருந்தது.

2. ஒரு முறை, கிறீன் கடும் நோய் வாய்ப்பட்டு உயிருக்கு ஆபத்து நேருமோ என்று பலரும் அஞ்சிய வேளை, அவரது சகோதரிமார், தமது தம்பி மீண்டும் அமெரிக்கா திரும்ப வேண்டும் என்று விரும்பினர். அவர்களது வேண்டுகோளை நிராகரித்த கிறீன், 'தமிழைக் கற்பதில் நான் அதிக நேரத்தைச் செலவழித்துவிட்டேன்..... நிலையாக நிற்கக்கூடிய சில மருத்துவ நூல்களை விட்டுச் செல்லவே நான் விரும்புகிறேன் என்றார்.

தமது உயிரைப் பயணம் வைத்துச் சேவை புரிந்த அன்னார், ஒரு செயல்வீரன்: தன்னலமற்ற தியாகி என்பதில் ஐயமேயில்லை.

3. தமிழிலே வைத்திய நூல்களை அச்சிடுதற்கு நிதி உதவி கேட்டு, அன்றைய குடியேற்ற நாட்டரசுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். அதற்குக் கிடைத்த பதில் என்ன தெரியுமா?

'அமெரிக்க மிஷன் நடைமுறையில் கொண்டுள்ள ஆங்கிலத்தை தவிர்க்கும் கொள்கை, ஆபத்தானது: தற்கொலைக்கு ஒப்பானது' என்று கூறி, நிதி உதவி மறுக்கப்பட்டது. ஆயினும், கிறீன் தன் முயற்சியைச் சிறிதும் கைவிடவில்லை. இவ்வாறு, பல விதமான கஷ்டங்களையும் அனுபவித்துத்தான் கிறீன் தமிழ் மொழி மூலம் மருத்துவக் கல்வியை நடைமுறைப்படுத்தினார். அதன் விளைவாக, எத்தனை நூல்களைத் தமிழில் வெளியிட்டார்?

அவற்றுட் சில இதோ:

மனுச சுகரணம்
அங்காதி பாதம்
வைத்தியம்
இரண வைத்தியம்
கெமிஸ்தம்
வைத்திய கை வாகடம்

இன்னும் பல மொத்தம் 4000 பக்கங்களுக்கு மேற்பட்ட மருத்துவ நூல்களை அவர் எழுதியும் மொழி பெயர்த்தும் வெளியிட்டார்.

62 தமிழருக்கு மேனாட்டு வைத்தியத்தை கற்பித்த கிறீன், இவர்களுள் 33 பேருக்குத் தமிழ்மொழி மூலம் கற்பித்தார்.

இறுதிக் காலத்தில், அவர் எழுதிய மரண சாசனத்திலே, இவ்வாறு எழுதியிருந்தார்:

'எனக்கு நினைவுக்கல் ஒன்று அமைக்கப்படின், அது எளிமையானதாக அமையட்டும், பின்வரும் வாக்கியம் அதில் பொறிக்கப்படட்டும்'

சாமுவேல் பிஸ்க் கிறீன்
1822-188
தமிழருக்கான வைத்திய ஊழியர்.
யேசுவே எனதெல்லாம்.

1884 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி அன்னார் இறையடி எய்தினார். அவரது விருப்பத்திற்கிணங்க, எளிமையான அவரது நினைவுக்கல், வூஸ்ரர் கிராமிய சவக்காலையிலே இன்றும் இவரது தமிழ்ச் சேவையை நினைவூட்டி நிற்கிறது!

அன்னாரின் தீர்க்க தரிசனத்தையும் திறமான தமிழ்ப் புலமையையும் மதித்துக் கௌரவித்தல் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

அன்னாரின் 175 ஆவது பிறந்த தினம் 1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் நாள் ஆகும். அன்னார் யாழ்ப்பாணம் வந்து 150 ஆண்டு நிறைவு, 1997 ஒக்ரோபர் 06 ஆம் நாள் ஆகும். அன்னாருக்கு எமது அஞ்சலியை செலுத்துவதோடு, அன்னாரைப்பற்றி ஆய்வு செய்த, கவி. இ. அம்பிகைபாகன், மருத்துவ விஞ்ஞானத் தமிழ் முன்னோடி டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்களின் நினைவாஞ்சலியைக் குறிக்குமுகமாக தபால் முத்திரை வெளியிட வேண்டுமென, இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், 1998 ஆம் ஆண்டு முத்திரை வெளியிடப்படுமென்பதை தெரியப்படுத்துவதோடு, அம்பி அவர்கட்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

- த. தர்மகுலசிங்கம்
டென்மார்க்

---

# நாற்று
## இளம் ஆக்கங்கள்

### ஓலங்களைத் தாண்டி

உலகத்தின்
மூலைமுடுக்குகளெல்லாம்
மறுக்கப்பட்ட மானிடங்களும்
மிதிக்கப்பட்ட உரிமைகளும்
புதைக்கப்பட்ட குழிகளிலிருந்து
உச்சரிக்கும் இறுதி
முனகல்கள்...
புலன்களைக் கூர்மைப்படுத்தி
மொழிய முடியாத—இந்த
முனகல்களை
உணரத் தலைப்படுங்கள்!
அந்த உணர்வுகளின்
வாங்கல்களிற்குப் பின்னர் - ஒரு
புதிய உலகத்திற்கான
கனவுகளை நிறைத்த
இதயம்... தோள்களில்
பாரத்தைப் பகிர்ந்துகொண்டு
நடைபோடும் பாதையில்
எங்கள் பாதங்களும்
சுவடுகளைப் பதித்து
தொடரட்டும்!
தூரமில்லை விடியல் வர!!

- ஈழமைந்தன்

★★★

### வானம் வெளுக்கிறது

நரிய் அலறும் சத்தம்
நெஞ்சைத் திகிலாக்கும்
தூரத்தில் வேட்டொலி கேட்கும்!
அதிகாலைக் குளிரிலும்
நெஞ்சம் சுடும்.
இராணுவ இரைச்சல்
எம் உயிரைப் பதறவைக்கும்
மனதுக்குப்பட்டது
எந்த நகரமோ நரகமாகுமென்று...
தொழிலுக்கு போவதில்லை
நேரக் கெடுபிடி
மீன் பிடிக்கத் தடைபோட்டு
கஞ்சியில் மண்விழும்!
இரவுத் தொழில் இல்லாமல்போனது
பகல் வலையில்
மீன்கள் படுவதில்லை
வழமையான சங்கதி இது.
வழமைக்கு மாறாக இன்று
காகங்கள் கரையுதே!
யார் வருவார் என
ஆருடம் கூறினாள் மனைவி
படலைச் சத்தம் காதில் கேட்டது
எட்டிப் பார்த்தேன்
கண்ணில் ஒளியுடன்
தோழில் பையுடன் கிழிந்த
சாரத்துடன்...
இளைஞன் சிரித்தான்!
என்னவென்றேன்,
தாகம், கொஞ்சத் தண்ணி என்றான்
காட்டில் அலைந்திருப்பான் போல்
களைப்பாய் இருந்தான்!
உள்ளே அழைத்தேன்
உணவு கொடுப்பதற்கு!
இளைப்பாற நேரம் இதுவல்ல என்றான்!
செம்பு தண்ணியை
ஒரு முடக்கில் குடித்தான்.
வெறுமனே வழியனுப்ப
மனம் மறுத்தது
கையிலே பழமொன்றைக்
கொடுத்தேன்
நன்றி சொன்னான்...
அவன் போய்விட்டான்
இன்னும் மறைய மறுத்தது
அவன்முகம்...
திடீரென ஒரு இடிச்சத்தம்!
ஒன்றுமட்டும் புரிந்தது.
நல்ல சாத்தொன்று
நடந்திருக்க வேணுமென்று!!
இன்னும் அவன்முகம்
நெஞ்சிலே தோன்றி...
பெரிதாகி பெரிதாகி...

மட்டுவில் ஞானக்குமாரன்
ஒஸ்னாப்றூக்
ஜேர்மனி

# சிறீலங்காவின் கருத்தரங்கில் ஜேர்மனியர் வெளிநடப்பு

(ஜேர்மனியிலிருந்து வி.ஆர்.வரதராஜா)

ஜேர்மனியில் பிறேமன் நகரில் ஜேர்மன் சிறீலங்கா தூதுவராயலத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஜேர்மன் வர்த்தகர்களுக்கான கருத்தரங்கில் சிறீலங்காவில் நடைபெறும் மனிதக் கொடுமைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்களை தமிழர்கள் விநியோகித்தனர். துண்டுப் பிரசுரங்களை வாசித்த சில வர்த்தகர்கள் கருத்தரங்கின் இடையில் எழுந்துசென்றனர்.

சிறீலங்காவில் ஜேர்மனியர் வர்த்தக முதலீடுகளைச் செய்வதற்கான பரப்புரையாகவே இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மண்டபவாயிலில் தமிழர்கள் துண்டுப் பிரசுரங்களை ஜேர்மன் வர்த்தகர்களுக்கு விநியோகம் செய்தனர். மண்டபத்தினுள்ளும், தமிழர்கள் துண்டுப் பிரசுர விநியோகம் செய்தனர். தமிழர்களின் நிலையை ஆதரித்து ஒரு சட்டத்தரணி உட்பட இரண்டு ஜேர்மனியர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இவர்கள் சிறீலங்கா ஜேர்மனி தூதரக அதிகாரிகளினால் மிரட்டப்பட்டனர். இவர்கள் இருவரும் கருத்தரங்கு மண்டபத்திலிருந்தும் அந்த அதிகாரிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

இக் கருத்தரங்கில் ஜேர்மன் சிறீலங்கா தூதரக உதவித் தூதுவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.வர்த்தக முதலீடுகளுக்கு சிறீலங்கா சிறந்த இடம் என அவர் குறிப்பிட்டாரேயன்றி அங்குள்ள பிரச்சினைகள் குறித்து சிறீலங்காவில் முதலீடு செய்ய பல வெளிநாட்டவர் தயக்கம் காட்டுவது குறித்தோ எவ்வித விபரமும் தெரிவிக்கவில்லை.

இவரின் உரையையடுத்து ஒரு சட்டத்தரணி உட்பட இரண்டு ஜேர்மனியர் துண்டுப் பிரசுர விநியோகம் செய்ய ஆரம்பித்தனர். கருத்தரங்கில் கலந்துகொண்ட ஜேர்மன் வர்த்தகரிடையே அவர்கள் துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்தனர். திடீரென தூதரக அதிகாரி ஒருவர் அவர்களிடம் வந்து துண்டுப்பிரசுரங்களை வாங்கி துண்டு துண்டாக கிழித்துப்போட்டார். பின்பு அவர்களைப் பிடித்து பலவந்தமாக மண்டபத்தின் வெளியே அனுப்பினர். அங்கிருந்த வர்த்தகர்கள் வியப்புடன் அதனைப் பார்த்துக்கொண்டிருந்தனர். தமிழர்களுக்கு சிறீலங்காவில் கொடுமை இழைக்கப்படுவதால் அங்கு வர்த்தக முயற்சிகளில் ஈடுபட வேண்டாம் என துண்டுப்பிரசுரங்களில் கேட்கப்பட்டிருந்தன.

# ஜேர்மன் பத்திரிகைக்கு மறுப்பு எழுத வேண்டுகோள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் விடுதலைப் புலிகளுக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் ஜேர்மனியில் இருந்து வெளிவரும் DIE WELT என்ற பத்திரிகை செய்தி கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவத்தின் தகவல்களை, சரணடைந்த போராளியின் வாக்குமூலம் என்ற பேரில் அவர்கள் வழங்கிய பொய்யான தகவலின் அடிப்படையிலும் எழுதப்பட்ட இக் கட்டுரை உண்மைக்கு மாறானது என்று ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கம் கண்டித்துள்ளதுடன் இக் கட்டுரைக்கான மறுப்பையும் தமிழீழ மக்கள் எழுதி அனுப்பவேண்டும் என்று கோரியுள்ளது.

ஜேர்மன், ஆங்கில மொழிகளில் மறு விமர்சனத்தை அனுப்பவேண்டிய முகவரி என கீழுள்ள முகவரியும் குறிப்பிட்டுள்ளது.

AXEL SPRINGER VERTAG
DIE WELT - REDAKTION
AXEL SPRINGER PLATZ -1
22350 HAMBURG
GERMANY

# கோதுமை மா தட்டுப்பாடு வெதும்பி விலை ஏற்றம்

மட்டக்களப்பில் கோதுமை மாவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் வெதும்பியின் விலை அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களாக ஏற்படுத்தப்பட்ட மன்னம்பிட்டி வாகனத் தடையினாலே இத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் உற்பத்தி விலை அதிகரித்துள்ளதே இவ் விலை ஏற்றத்திற்கான காரணம் என வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை திருமலையில் இருந்து கொண்டு வரப்படும் கோதுமைமா, மரக்கறிகள், தேங்காய் என்பனவும் மட்டக்களப்பு நகருக்குக் கொண்டுவரப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மரக்கறி தேங்காய்களின் விலையும் அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

லாச்சப்பலில்
சலவை
இயந்திரங்களுடன்
கூடிய கடை
குத்தகை
விற்பனைக்கு

59 Rue Louis Blanc
(மக்கள்கடைக்கு அருகாமையில்) உள்ள சலவை இயந்திரங்களுடன் கூடியகடை குத்தகை/ வாடகைக்கு உடனடியாக உள்ளது.
மேலதிக விபரங்களுக்கு
01 48 05 81 73.

## ஈழத் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் - பிரான்ஸ்

## தெரிவு அணிக்கான பயிற்சிகள்

ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தெரிவு அணிக்கான பயிற்சிகள் எதிர்வரும் 5ம் திகதி Stain மைதானத்தில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கும் பயிற்சிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

– ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம்

# ஆண்ட்ரியஸ் வைசாலியஸ்

இளவயது இருபத்தெட்டில் உலகப் புகழ்பெற்று ஸ்பெயின் நாட்டு மன்னர் 5-ம் சார்லஸிடம் உயிருக்காகத் தஞ்சமடைந்து மருத்துவத்துறைகளில் உள்ள குறைகளை மக்களுக்குச் சுட்டிக்காட்டி, மடையர்களால் மனம் நொந்து, அனாதையாக இறந்த மற்றுமொரு அறிஞர் ஆண்ட்ரியஸ் வைசாலியஸ்.

வைசாலியஸ் கி.பி 1514 -ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 'ப்ரசெல்ஸ்' நகரில் மருத்துவக் குடும்பத்தில் பிறந்தார். அவர் தந்தை 5-ம் சார்லஸ் மன்னரிடம் மருத்துவராகப் பணியாற்றினார். தந்தையின் அரவணைப்பும், வளர்ந்த சுற்றுச்சூழலும் வைசாலியஸை மருத்துவத் துறையில் ஈடுபடவைத்தது. எனவே சிறு வயதில் இருந்து மருத்துவத்தில் ஆர்வம்கொண்டு எலி, நாய், பெருச்சாளி போன்றவைகளை அறுத்து பரிசோதனை செய்வதில் ஈடுபட்டார்.

வைசாலியஸ் தந்தையின் செல்வாக்கால் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களான லூவேன் பல்கலைக்கழகம், பாரிஸ் பல்கலைக்கழகம், பாடுவா போன்ற பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் சேர்ந்து கல்வி பயின்றார். படிக்கும் பொழுதே மருத்துவத் துறையில் உள்ள திறமையின் காரணத்தால் பாடுவா பல்கலைக் கழகத்தில் வைத்தியப் பேராசிரியராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது.

அவர் பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து மகத்தான செல்வாக்கை மருத்துவத்தில் உருவாக்கிய திரு. கேலன் அவர்கள் கண்டுபிடித்துக்கூறிய கோட்பாடுகளில் தவறு இருப்பதைக் கண்டார். எனவே திரு. கேலன் அவர்கள் கண்டுபிடித்தவற்றில் சில தவறானவை மற்றும் ஐயத்திற்குட்பட்டவை என எட்டுத் தொகுப்புகளாக எழுதி வெளியிட்டார். எல்லாத் தொகுப்புகளிலும் திரு. கேலன் அவர்களின் ஆராய்ச்சியை குறை கூறியதோடு அவரின் ஆய்வுக்குச் சவாலாகவும் இருந்தது. இதனால் கொதிப்படைந்த காழ்ப்புணர்ச்சி கொண்ட அறிவினர்கள் மக்களைத் தூண்டிவிட்டு பல்வேறு துன்பங்களைக் கொடுக்க ஆரம்பித்தனர். இதனால் பேராசிரியர் பணியில் இருந்து நீக்கினர். தம் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பில்லாமல் அறிவு ஜீவி அறிவுலக அரசன் மண்ணுலக அரசரிடம் அடைக்கலம் அடைந்தார்.

வைசாலியஸின் திறமையை அறிந்த அரசன் தன் மகனான இரண்டாம் பிலிப்பின் உடலைப் பாதுகாக்கும் நேரடி மருத்துவராக பணிபுரியுமாறு கேட்டுக்கொண்டார். அந்த நேரமப் பணியை ஏற்றுக் கொண்ட பிறகும், அறிவியலில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களால் உந்தப்பட்டு ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்தார். ஆனால் அப்பொழுது மனித உடலை அறுத்துப் பார்க்கும் உரிமை யாருக்கும் கொடுக்கப்படவில்லை.அதற்கு அப்போதிருந்த அரச சட்டமும், மதச் சட்டமும் இடந்தரவில்லை. அறிவியல் மேதை கெலன் அவர்கள் கூட மனித உடலைச் சோதித்து முடிவுகளைத் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக கெலன் அவர்கள் வாலில்லா குரங்குகளை அறுத்துப் பார்த்து மருத்துவக் கலைக்குரிய முடிவைத் தெரிவித்திருந்தார். இதையெல்லாம் தெளிவாக அறிந்த வைசாலியஸ் எப்படியேனும் மனித உடலை அறுத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று நினைத்தார்.


ஒருநாள் சிறைச்சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தார். அவ்வழியில் பற்பல மனித எலும்புகள் இருப்பதைக் கண்டு அதைச் சேகரித்து ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார், மனம் தளராமல் இரவு நேரங்களில் இடுகாட்டிற்குச் சென்று பிணங்களை யாருக்கும் தெரியாமல் எடுத்துவந்து ஆராய்ச்சி செய்தார். அதன் பலனாகப் பற்பல உண்மைகளைக் கண்டறிந்து, அளவில்லாத ஆனந்தம் அடைந்து, மேன் மேலும் பிணங்களை அறுத்து சோதனை செய்வதில் ஈடுபட்டார். அதனால் பற்பல மனித உடற்கூறு இயல் பற்றிய செய்திகளை உலகுக்கு அறிவித்துக்கொண்டேயிருந்தார். இப்படி உடற்கூறு பற்றிய உண்மைகளைக்கூறி வல்லுநர் மனித உடலை ஆராய்ச்சி செய்தது மதகுருமார்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது, எனவே மதகுருமார்களெல்லாம் ஒன்று சேர்ந்து பேரறிஞருக்கு மரண தண்டனை விதித்தனர்.

மரணதண்டனையை அறிந்த அரசன் மதகுருமார்களின் விஷயத்தில் தலையிட்டார். ஆதலால் வைசாலியஸுக்குக் கொடுத்த மரண தண்டனையிலிருந்து விடுத்து சிறைச்சாலையில் அடைத்தனர். சிறை வாசத்திலும் ஆய்வைப்பற்றிய சிந்தித்திருந்த வைசாலியஸை புண்ணியத் திருத்தலங்களில் காலம் கழிக்க வேண்டும் என பல்வேறு நிபந்தனைகளோடு வெளியேற்றினர். அறிவுக்கூர்மை அடங்காத அவர் பல்வேறு இடங்களுக்குச் சென்றார். கடைசியில் அந்த அறிவியல் மேதை கி.பி 1564 ஆம் ஆண்டு அனாதையாக இறந்து கிடந்தார்.

உலகுக்கு வழிகாட்டிய அவரை யாரும் அரவணைக்காமல் அனாதையாக இறந்து கிடந்ததைக் கண்ட மக்களும், மதகுருமார்களும் தாம் செய்த தவறுகளை எண்ணி கண்ணீர் வடித்தனர். மனிதன் செய்த செயல்கள் இறந்த பின்பு தான் அவை நல்லவையா? அல்லது தீயவையா? எனத் தெரியும். அதைப்போலவே வைசாலியஸ் இறந்த பின்பு அவர் செய்த நற்செயல்களை நல்லாய்வுகளை நலமிக்க கோட்பாடுகளை நாநிலம் போற்றத் தொடங்கியது!

செத்தபின் சிந்துபாடும் உலகமல்லவா இவ்வுலகம் !!

- எஸ். அன்பழகன்
பி.எஸ்.சி



## வானலைகளில் உலகளாவிய ரீதியில் தமிழ்

## I.B.C.

**Astra Satellite - Movie Channel**

**Transponder - 18 / Audio 7.56Kz / Video 11.479Kz**

தொடர்புகட்குக்கு: P.O.Box -1505, London SW 82 ZH.
Tel: 0171 787 8000 / Fax: 0171 787 8010

## Radio Asia Canada

தொடர்புகளுக்கு: 680, Progress Avenue Unit 01,
Scarborough, Ontario, M1 H3 A5, Canada.
Tel: 00 1 416 289 1522 / Fax: 00 1 416 289 1840

## Tamil Radio & Television (T.R.T)

**(Tamil Ozhi Oli)**

### தினமும் உங்கள் சின்னத் திரையில்

12.00 செய்தி நேரம், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
21.00 செய்தி நேரம், எமது பிரதான செய்தித் தொகுப்பு

### தினமும் உங்கள் வானொலியில்

8.00 செய்தித் தலைப்புகள், 8.30 ஐரோப்பிய வலம்,
13.30 பிரதான செய்திகள், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
17.16 கனடாவிற்கான ஒலிபரப்பு, 21.00 பிரதான செய்திகள்
**நள்ளிரவு முதல் காலை 6.00 வரை கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள்.**

தொடர்புகளுக்கு: 79, Rue Rateau, 93120 La Courneuve.
Tel: 01 43 11 27 77 / Fax: 01 43 11 27 72

## Radio veritas Asia (Tamil Section)

தொடர்புகளுக்கு: P.O. box 2642
Quezon City 1166, Philippines.
Tel: (632) 93900 11-4 / Fax: (632) 9381940

Pub



முத்துக் குஞ்சங்கள் இழைத்த கச்சிதமான

## மணவறைகளா!

மணநாளைக் கொண்டாட **மண்டபச் சோடனைகளா!**

மணப்பெண்ணை அழகூட்டும்

## அலங்கார ஆபரணங்களா!

அனைத்துவகை விருந்துகளுக்குமான சுவைநிறைந்த

## சைவ அசைவ உணவுவகைகளா!

எல்லாத் தேவைகளையும் சிக்கனத்துடனும் சிரத்தையுடனும்
திருப்தியாக நிறைவேற்ற

*தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மனிக்கிளையின்*
புதியதொரு ஏற்பாடு! உடனே நாடுங்கள்!!

தொடர்புகளுக்கு:

E.Anantharajah
Hompesch Str.16,
41189 Monchengladbach.

தொடர்புகட்கு:
01 72 45 08 487

அழகும் சுவையும் மலிவும் இணைந்த சேவை

*தமிழர்களின் சமையலுக்கேற்ற சகலவிதமான*
*அரைத்தல் துவைத்தல் வேலைகளுக்கும்*
*நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய*

## அபூர்வா மிக்சர் & கிரைண்டர்

**Apoorva Mixer & Grinder**

ஆறுமாத உத்தரவாதப்பத்திரத்துடன் கூடிய மலிவுவிலையில்
ஐரோப்பாவின் அனைத்துப்பாகங்களுக்கும் விநியோகிக்கப்படும்.

இது ஒரு
தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மனிக்
கிளையின் புதியதொரு ஏற்பாடு.

Pub



# வெளிவந்துவிட்டன

# ரமியின்










RAMIY
RECORDS



# நெல்சன் மண்டேலாவிடம் பாடம் கேட்ட கிளின்டன்



கடந்தவாரம் தென் ஆபிரிக்கா உட்பட 6 ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் மேற்கொண்ட 12 நாள் உத்தியோக பூர்வ பயணம் அவர் எதிர்பார்த்த பலனைக் கொடுப்பதற்குப் பதிலாக எதிர்மாறான விளைவுகளைக் கொடுத்துவிட்டது.

பில்கிளின்டன், 6 முக்கிய ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் அங்கு உருவாகி வரும் புதிய தலைமைத்துவத்தை தமது அணிக்குள் கொண்டுவந்து விடலாம் என்று எதிர்பார்த்தார். பொருளாதார ஒத்துழைப்பு என்ற பெயரில் இந்த நாடுகளை ஒரு உடன்பாட்டுக்குக் கொண்டுவருவதன் மூலம் அந்தக் கண்டத்தில் அமெரிக்காவை ஆளமாக கால் பதிக்க வைத்துவிடலாம் என கிளின்டனுடைய ஆலோசகர்கள் திட்டமிட்டிருந்தனர்.

ஐரோப்பிய கூட்டமைப்புக்குள் இருந்துகொண்ட அமெரிக்காவுக்கு எதிரான போக்கை கடைப்பிடித்து வரும் பிரான்சை பணிய வைப்பதற்கு அதனுடைய அரசியல் பொருளாதார செல்வாக்கிற்கு உட்பட்ட ஆபிரிக்க கண்டத்தில் கால் பதிப்பது அவசியமான ஒரு விடயமாக கிளின்டன் நிர்வாகம் கருதியது.

ஆனால் அவர்களுடைய இந்தத் திட்டங்களையெல்லாம் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா மண்கௌவச் செய்துவிட்டார்.

ஆபிரிக்கக் கண்டத்தினதும் கறுப்பின மக்களினதும் ஆற்றலும் உறுதியும் மிக்க தலைவரான நெல்சன் மண்டேலா சந்தர்ப்பம் பார்த்திருந்து 'வெள்ளை மாளிகை' யின் வெளிநாட்டுக் கொள்கையை கருத்தியல் ரீதியாக புரட்டி எடுத்துவிட்டார். அதிலுள்ள சிறப்பு பில்கிளின்டனோ அவரது அரசியல் ஆலோசகர்களோ தங்களை நியாயப்படுத்த முடியாத அளவுக்கு நெல்சன் மண்டேலாவின் விமர்சனமும் அவர் அதை வைத்த விதம் இடம் காலம் ஏல்லாம் அமைந்துவிட்டது.

கடந்த 27.03.98 வெள்ளிக்கிழமை பில்கிளின்டனை உடன் வைத்துக்கொண்டு 100க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய நெல்சன் மண்டேலா கறுப்பின அடக்குமுறைக்கு எதிராகப் போராடுகின்ற எல்லா நாடுகளுக்கும் உதவவேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது. இந்த அடிப்படையிலேயே சுதந்திர ஆபிரிக்காவிற்கு வரும் முதல் வெளிநாட்டு தலைவராக நான் பிடல் காஸ்ரோவை அழைத்தேன். லிபியாவுடன் ஈரானும் கூட நாங்கள் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்றோம். ஏனென்றால் எங்கள் வரலாற்றில் இருண்டுபோன பகுதிகளில் எங்களுக்கு அவர்கள் செய்த உதவிகளை நாங்கள் மறக்கமுடியாது. அவர்களுக்கு நாங்கள் நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கிறோம் என்று கூறியபோது கிளின்டனுக்கு அது தர்மசங்கடமான ஒரு நிலையைத் தோற்றுவித்தது. ஏனெனில் அமெரிக்கா இந்த மூன்று நாடுகள் மீது கடுமையான பொருளாதாரத் தடையை விதித்தது. அந்த நாடுகளை சர்வதேச ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாக்க முயன்று வருகிறது.

பின்னர் கிளின்டனுடன் நடந்த தனிப்பட்ட சந்திப்பிலும் கூட நான் கியூபாவுக்கும், லிபியாவுக்கும், ஈரானுக்கும் அதரவாக இருப்பேன் என்பதை மண்டேலா வலியுறுத்தத் தவறவில்லை. கிளின்டனை மனச்சாட்சியுள்ள மனிதன், தென்னாபிரிக்காவின் நண்பன் என்று வர்ணித்த மண்டேலா அதே வர்ணனையோடு ஈராக்கின் மீதான கிளின்டனின் இராணுவ அச்சுறுத்தல் நடவடிக்கையையும் கண்டிக்கத் தவறவில்லை. அமெரிக்கா தனது எதிரிகள் மீது இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்குப்பதில் அவர்களை அழைத்து வாருங்கள் இருங்கள் எங்களுக்கிடையில் இருக்கும் பிரச்சினைகள் பேசுவோம் என்று சொல்லவேண்டும். என்று கிளின்டனால் அதை மறுத்துப் பதில் எதுவும் சொல்லமுடியவில்லை. அப்படி ஏதாவது பதில் சொல்ல முற்பட்டால் தனது நோக்கம் சிதறிப்போய்விடும் என்பது கிளின்டனுக்குத் தெரியும். ஆபிரிக்கக் கண்டத்திலேயே பலம் பொருந்திய சக்தியான தென்னாபிரிக்காவை தனது வழிக்குக் கொண்டுவரும் திட்டம் சிதறிப்போய்விடும் என்று அவருக்குத் தெரியும்.

ஆனாலும் கிளின்டன் எதை எதிர்பார்த்து மௌனம் காத்தாரோ அது நிறைவேறவில்லை. நெல்சன் மண்டேலா கிளின்டன் நிர்வாகத்தினது வெளிநாட்டுக் கொள்கையை மட்டுமல்லாது ஆபிரிக்கா கண்டத்தின் மீதான அதனுடைய அக்கறையையும் பொருளாதார உதவி என்ற பெயரில் அந்தக் கண்டத்தில் அது மேற்கொள்ள நினைக்கும் ஊடுருவலையும் மறைமுகமாகக் கண்டிக்கத் தவறவில்லை.

மண்டேலாவின் கண்டனங்களுக்கு கிளின்டனின் தேசிய பாதுகாப்பு அலோசகர் சண்டிபேகர் சமாதானம் சொன்னது கூட மண்டேலாவின் கோபத்தை தூண்டிவிட்டதாக சொல்லப்படுகிறது.

லிபியாவை தாங்கள் தனிமைப்படுத்துவதற்கான காரணங்களை நியாயப்படுத்திய பேகர் 1998-ம் Panam விமான குண்டு வெடிப்பில் பலியான 200 பேருக்கும் லிபியா நியாயம் சொல்ல வேண்டும் என்றார்.

இதற்கு மண்டேலா நேரடியாகப் பதிலளிக்காவிட்டாலும், அவருடைய ஆலோசகர்கள் அமெரிக்கா பதிலளிக்க வேண்டிய விடயங்கள் இதை விடப் பலமட் கு அதிகம் என்பதை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

கடந்த வருடம் லிபியாவுக்கு மண்டேலா செல்ல இருந்தபோது அமெரிக்கா அதை தடுக்கும் விதத்தில் அழுத்தம் கொடுத்தது அவருக்கு பிடிக்கவில்லை. நான் ரஷ்ய அதிபர் யெல்சினை அல்பேனியாவுக்குப் போக வேண்டாம் என்று சொன்னால் நான்தான் உலகத்திலேயே தலைக்கனம் பிடித்த 'கறுப்பன்' என்று சொல்லியிருப்பார்கள். என்று கடுமையான வார்த்தைகளை பிரயோகித்திருந்தார். பாரிசிலிருந்து வெளிவரும் லுமொந்த் பத்திரிகை கிளின்டன் மீதான அமெரிக்கா மீதான மண்டேலாவின் விமர்சனங்கள் பற்றி எழுதுகின்றபோது வாஷிங்டன் ஆபிரிக்காவின் புதிய தலைவர்கள் கட்டுப்படுத்தக் கூடியவர்களோ, ஆட்டிவைக்கப்படக் கூடியவர்களோ இல்லை என்ற பாடத்தை இதிலிருந்து கற்றிருக்க வேண்டும் என்றும், புதிய ஆபிரிக்கா மேற்சத்தைய சக்திகளிடமிருந்து ஜனநாயகப் பாடம் ஒன்றையும் இனி கற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை கிளின்டன் மண்டேலாவிடமிருந்து கற்ற பாடம் அவருக்கு உணர்த்தியிருக்கும் என்றும் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருப்பது முக்கியமான ஒரு விடயமாகும்.


வெண்டலியில்

# ஆச்சீஸ்

ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 15 வரை



புதுவருடத்தை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

**பச்சையரிசி (ஆச்சீஸ்) - 1கிலோ** £1.49
(மூன்று கிலோ வாங்கினால் ஒரு கிலோ இலவசம்)

**சர்க்கரை (ஆச்சீஸ்) - 500கிராம்** £1.49

**யாழப்பாண மிளகாய்த் தூள் - 450 கிராம்** £1.69
ஆச்சாஸ், லீலா)
(மூன்று வாங்கினால் ஒன்று இலவசம்)





லீலா, ஆச்சீஸ் தயாரிப்பு பொருட்கள் அனைத்திலும் 5 வீதக் கழிவு உண்டு

இலங்கை மரக்கறி வகைகள் அனைத்தும் 1 இறாத்தல் 99P

Arhie'S

Tel: 0181-2053552

205, Edgware Road, Colindale-Nw 9.

# தேர்வு எது

## கலைஞனுக்கு சிறப்பு

### பெரும் பட்டங்கள் வழங்குதல் / ஆய்விற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாதல்

## நகர்வலம்

உண்மைக் கலைஞனுக்கு எல்லைகள் கிடையாது என்பது நிதர்சனமானதென்பதுடன், அக் கலைஞன் வாழும் போதே சிறப்பிக்கப்படவேண்டும் என்ற கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றும் கூட.

ஆனால், எமது புகலிடக் கலைஞர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பட்டங்கள் பற்றி எழுந்த 'சலசலப்பு' ஒலிவாங்கியாரையும் ஈர்த்துக்கொண்டதனால், இவ் வார 'நகர்வலத்'ற்கு அதனையே கருப்பொருளாக எடுத்துக் கொள்ள முடிவெடுத்தார்.

ஒரு கலைஞனை அவன் பற்றிய ஆய்வு ஒன்றிற்கு உட்படுத்தப்படாமல் எழுத்துக்கோர்வைகளால் உருவான ஒரு சொற்பட்டத்தினை அவனுக்குச் சூட்டுவது அவனை மலினப்படுத்துவதற்கு ஒப்பானது என்ற கருத்து படைப்புக்களை நேசிப்பவர்களால் முன்வைக்கப்படவே, அதுபற்றி இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என ஒலிவாங்கியார் நாடிபிடித்துப் பார்ப்பது... தொடர்கிறது.

**திரு. தயாநிதி** *(நாடகக் கலைஞர்)*

ஒலிவாங்கியார் தனது நோக்கத்தினை அறிமுகப்படுத்த பதிலுக்கு தன்னை ஒரு வளரும் கலைஞர் என அறிமுகப்படுத்திய இவர் தொடர்கிறார்.

ஒரு கலைஞன் என்பவன் மக்களால் பேசப்பட வேண்டும். அவனது படைப்புக்கள் மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். அவன் ஏதாவது சாதித்திருக்க வேண்டும். அப்படியான கலைஞன் பட்டங்கள் வழங்கப்படுவதற்கும், சிறப்புப் பெறுவதற்கும், ஏன் சன்மானங்கள் கொடுக்கப்படுவதற்கும் தகுதியானவன். இவ்வாறு அவன் சிறப்பிக்கப்படுவதற்கு பொதுமக்களோ, இரசிகர்களோ ஒருபோதும் பின்வாங்கக் கூடாது.

ஒலிவாங்கியார்: **புகலிடக் கலைஞர்களைப் பொறுத்தவரை, விமர்சனங்களுக்கு அவர்கள் உட்படுத்துவதைவிட பட்டங்கள் அவர்களுக்கு வழங்குவது முக்கியமானதா?**

பட்டங்கள் என்பதை நீங்கள் ஏன் அழுத்திக் கேட்கிறீர்கள் என்பது புரியவில்லை. ஆனாலும், கலைஞன் சிறப்பிக்கப்படத்தான் வேண்டுமென்பது என் கருத்து. இதேவேளை, விமர்சனங்களை நாம் வரவேற்கிறோம். நாடகங்களைப் படைப்பவன் என்ற ரீதியில் எனக்கும் விமர்சனங்கள் சில வந்துள்ளன. விமர்சனங்களின் தாக்கம் எனது படைப்புக்களில் பிரதிபலித்துமுள்ளது. ஆனால், விமர்சனங்கள் எந்த சூழலில், யாரால் எழுதப்படுகின்றன என்பது என்னைப் பொறுத்தவரையில் முக்கியமாக நோக்கப்படுகிறது. இந்த வகையில் சில விமர்சனங்கள் படைப்பாளிகளை அழிக்கும் நோக்குடன் வெளிவருகின்றன. இவற்றுக்கு படைப்பாளிகள் செவிசாய்க்க முடியாது.

அடுத்து ஒலிவாங்கியார் நாடிச்சென்றது

**பிரியாலயம் துரைஸ்** *(திரைப்பட நடிகர், இயக்குனர்)*

பட்டம் கொடுப்பது என்பது, மனிதர்களை வாழும் போது கௌரவிக்கப்பட வேண்டும் என்ற வகுப்பிற்குள் அடங்குகிறது என்பது என் கருத்தாக இருந்தாலும், இதை நான் உருவாக்கவில்லை. இது ஏற்கனவே உலகில் நடந்து வரும் ஒரு விடயம். இந்தக் கௌரவத்திற்கு ஒரு முத்திரையாகத்தான் பட்டம், பணமுடிப்பு, பொன்னாடை போன்றவை வழங்கப்படுகின்றன.

இந்நடைமுறை 'உரியவர்களுக்கு' போய்ச் சேரத்தானே வேண்டும். மற்றையது, கலைஞர் மேல் வைக்கப்படும் விமர்சனம் அவர்களை நோகப்படுத்தாமல் எப்போதும் செய்யப்பட வேண்டும். வைக்கப்படும் விமர்சனங்கள் கலைஞர்களின் படைப்புகளை நேர்த்திசெய்யக்கூடிய விதத்தில் அமைய வேண்டும்.

ஒலிவாங்கியார்: **அப்படியானால் விமர்சனங்கள் 'நோகடிக்கும் தன்மையற்றவர்களால்' தான் வைக்க முடியும் என்ற தகுதி நிலை உண்டா?**

நான் அப்படிச் சொல்ல வரவில்லை. விமர்சனங்கள் வைக்கப்படுவதற்கு தகுதி வேண்டும் என்பதை விட, ஞானம், பார்வை, பக்குவம் என்பனவற்றை ஆரோக்கியமான முறையில் தெரிவிப்பது ஒரு பொறுப்பு வாய்ந்த விமர்சகனின் கடமை.

இவ்வாறு கூறிமுடித்தார் பிரியாலயம் துரைஸ். அடுத்ததாக ஒலிவாங்கியார் அம்மாவிற்கு தலைமகனாக இருக்கும் ஒருவரை நாடினார். யார் அவர்? குழப்பமாக இருக்கிறதா? அவர் வேறு யாருமல்லர். 'அம்மா' இலக்கிய இதழின் ஆசிரியரான **திரு. மனோகரன் (ஓசை மனோ)** தான் அவர்.

ஒலிவாங்கியார்: **புலம்பெயர்ந்த நாடுகளில் கலைஞர்களுக்குப் பட்டமளித்துப் பாராட்டுவது பற்றி ......**

கொடுப்பதும் வாங்குவதும் அது அவரவர் பிரச்சினை. ஆனாலும் 'சில விடயங்கள் மலினப்படுத்தப்படும் போது 'அவை' தமக்குரிய பெறுமதியை இழந்துவிடுகின்றன.

ஒலிவாங்கியார்: **சரி அப்படியானால் கலைஞர்களை எப்படிக் கௌரவிக்கலாம்?**

ஒருவரை 'கலைஞர்' என்பதே கௌரவம் தான். அவர்கள் மேலும் தரம் மிக்கவர்களாகவும், வரலாற்றில் பதிவாகக்கூடிய கலைஞர்களையும் உருவாக அவர்களுக்கு உறுதுணையாய் நிற்பதன் மூலமும் அவர்களைக் கௌரவப்படுத்தலாம்.

ஒலிவாங்கியார்: **கலைஞர்கள் பாராட்டுவதன் மூலம் வளர்கிறார்களா? அல்லது விமர்சனத்தின் மூலம் வளர்கிறார்களா?**

சாதாரண நகரிலிருந்து மாபெரும் எழுத்தாளர் வரைக்கும் புகழ்மாலைக்காக அலையாதவர்களில்லை. அது தவறான ஒரு காரியமுமில்லை. பாராட்டு என்பது, குறிப்பாக கலைஞனுக்கு அவசியமான ஒன்றும் கூட. ஆனால் பாராட்டைவிட ஆரோக்கியமான விமர்சனங்களே கலைஞர்களை வளர்த்தெடுக்கும்.

ஒலிவாங்கியார்: **கலைஞர்களுக்குப் பட்டமளித்துப் பாராட்டுவது சரியா? தவறா? என்றும் தொடரும் விவாதம் பற்றி....**

தேவையற்ற விவாதம். எம்மை நாமே தாழ்த்திக் கொள்வதாகக் கருதக்கூடாது. தரமான கலைப்புலம் இன்னும் எம்மிடையே உருவாகவேயில்லை. இந்நிலையில் இது தேவையில்லாத விவாதம்.

ஒலிவாங்கியார்: **நல்ல கலைகள் எப்படி வளரும்?**

கலைஞர்களும், நல்ல கலைகள் வளர்க்க வேண்டுமென ஆர்வம் கொண்டோரும் தம்மைத்தாமே வளர்த்துக்கொள்ள நல்ல கலைகள் தானே வளரும்.

ஒலிவாங்கியார்: **ஒரு இதழாசிரியர் என்ற ரீதியில் புலம்பெயர்ந்த கலைஞர்களுக்கு....?**

'புகழ்' ஒரு போதும் தேடிக்கிடைப்பதில்லை. 'தரம்' காலத்தால் நிலைக்கும்.

தேடுவோம்: கற்போம்!! வளர்வோம்!!!

அவரது வாழ்த்திற்குப் பதிலாக ஒலிவாங்கியாரும் அவரது 'அம்மா'விற்கு வாழ்த்துக்கூறி முடித்துவிட்டு **பாடகர் பாலமுரளியிடம்** தாவி கேள்வியை தொடுக்கவே,

இங்குள்ள கலைஞர்களுக்கு கொடுக்கப்படும் பட்டங்களுக்கு ஏற்ற சேவையினை அவர்கள் மக்களுக்குச் செய்யவில்லை என்பதே எனது கருத்து. ஒரு தகுதி வாய்ந்த கலைஞனை பாராட்டுவதற்கு தடையேதும் இல்லை. மாறாக நடைபெறும்போதுதான் இப் பாராட்டுத் தேவைதானா என்ற கேள்வி எழுகிறது. ஒரு வளரும் கலைஞனுக்கு 'கலை ஜாம்பவான்' என்ற பொருந்தாத பெரிய கிரீடமொன்றை சூட்டும்போது, அங்கு அவனது கலைப்பயணத்திற்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது. இது அக் கலைஞனின் தப்பல்ல அங்கு. அவனுக்கு அக் கிரீடத்தைச் சூட்ட முனைபவர்களே இதனைக் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்தவரை புகலிடக் கலைஞர்கள் பெரும்பாலானோர் வளரும் கலைஞர்கள்தான். எனவே அவர்களை தற்போது உற்சாகப்படுத்தவேண்டுமே தவிர பட்டங்கள் கொடுத்து தலையடி அடிப்பதல்ல.

அடுத்ததாக ஒலிவாங்கியார், மக்கள் மனதில் தனக்கென ஒரு இடத்தை நக்க வைத்துக்கொண்டவரும் வானொலி நாடகத்துறையில் நீண்டகால கால்பதிப்பாளருமான **'முகத்தார்' ஜேசுரட்ணம்** அவர்களைத் தொடர்பு கொண்டார். இவர் அண்மையில் 'கலைமாமணி' பட்டம் பெற்றவர். அதற்காக பாரிசில் நடந்த பாராட்டுவிழா ஒன்றிலேயே (பார்க்க: புகலிட நிகழ்வுகள் பக்கம்) கலைஞர்களுக்கு பட்டம் வழங்குவது தொடர்பான சலசலப்பு எழுந்தது. (ஒலிவாங்கியாருக்குக் கிடைத்த தீனி) இதோ! முகத்தார் ஜேசுரட்ணம் சொல்கிறார்:

உண்மைக் கலைஞன் என்பவன் பொருள், பண்டம், பட்டம், புகழ் என்பவற்றுக்கு அலைபவனல்ல. தன்னுடைய படைப்பு மக்கள் மனதில் போய் நிலைக்கிறதா? தனது படைப்பு சமுதாயத்தை பண்படுத்துகிறதா என்பதே உண்மைக் கலைஞனின் நோக்காக இருக்கவேண்டும். இவ்வாறான நோக்கம் நிறைவேறி நிரந்தரமாக அவன் மக்கள் மனதில் இடத்தைப் பெற்றுக்கொண்டால், பட்டங்கள் சிறப்பிக்கும் தன்மையைவிட மக்கள் மனதில் அவன் பெற்ற இடமே அவனுக்கான நிரந்தரச் சிறப்பாகி விடுகிறது. இது அவனின் இறப்பிற்குப் பின்னரும் தொடரும்.

ஆனால் இப்போதுள்ள காலகட்டத்தில் கலைஞர்களின் பல தரப்பினர் உள்ளனர். அவர்களுக்கும் சில 'ஆசைகள்' அபிலாசைகள் உண்டு. அதில் 'தான் வாழும் போது கௌரவிக்கப்படவேண்டும்' என்பதும் ஒன்று.


ஒலிவாங்கியார் குறுக்கீடு: **இங்குள்ள புகலிடக் கலைஞர்கள் மக்கள் மனதில் தமக்கென்றொரு இடத்தினை பிடிக்குமளவிற்கு கலைச்சேவை செய்கிறார்களா?**

அப்படிப் பார்க்கும்போது இங்குள்ள கலைஞர்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் நாம் பார்க்கவேண்டும். இவ்வாறான பிரச்சினைகள் எமது அன்றைய காலகட்டத்தில் இருந்ததில்லை. மாறாக எமக்குரிய நேரம் அங்கு போதியளவு இருந்தது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. எனவே இங்குள்ள சூழலில் இருக்கும் கலைஞர்களுக்கு பட்டங்கள் வழங்குவது அவர்களை ஓரளவு திருப்திப் படுத்துகிறது என்பதாக இருக்கலாம் ஆனால் இத்தகைய பட்டங்கள் வழங்குபவர்கள் எந்த அளவுகோலாக வைத்து அப்பட்டங்களை வழங்குகிறார்கள் என்பது விமர்சனத்திற்கு உள்ளாகி வருவதையும் இங்கு குறிப்பிடலாம்.

ஒலிவாங்கியார்: **கலைஞர்களுக்கு வைக்கப்படும் விமர்சனங்கள் பற்றி?**

ஆக்கபூர்வமான எந்தவொரு விமர்சத்தையும் ஏற்கும் தன்மை கலைஞனுக்கு இருக்கவேண்டும். விமர்சனங்களின் மூலமாக ஒரு கலைஞன் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென்பது இப்போதைய காலத்தின் கட்டாயமாகிவிட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு கூறி முடித்தார் முகத்தார் ஜேசுரட்ணம்.




## தேடியவை

ஏனைய்...யா பாப்ஜியாரின் புதிய அரசாவது எமது விசயத்தில் நீதியாக நடந்துகொள்ளுமா? அல்லது... பழைய குருடி...கதை தானா?

இவ்வாறு அங்கலாய்த்தபடி வந்துகொண்டிருந்தார் திருவாளர் கையார் அவர்கள். பாப்ஜியாரின் புதிய அரசா? பாப்ஜி என்பவர்யார் அதை முதலில் சொல்லும் என குழப்பத்துடன் மோனையார் வினவினார். [நீர் எப்போதுதான் தெளிவாக இருந்திருக்கிறீர்]

'ஏதோ எல்லாம் தெரிந்தவர் போல க[ா]ட்டிக் கொள்ளுவீரே. பாப்ஜியார் யாரென்னும் இந்தச் சின்ன விசயம்கூட உமக்குத் தெரியவில்லையே? அஃதாவது ஐயா இந்தியாவின் புதிய பிரதமரான வாஜ்பாயை அவரது நண்பர்கள் பாப்ஜி என்று தானாம் செல்லமாக அழைப்பார்கள். 71 வயதான பாப்ஜியாருக்கு மீன்கறியென்றால் ரொம்பவும் விருப்பமாம்....

## டில்லியும் கொழும்பும்

இவ்வாறு பாப்ஜியாரின் சுய தரவுகளை அடுக்கிக் கொண்டே போனார் கையார்...

பல கட்சிகளின் கூட்டில் உருவாகியுள்ள இவ் அரசு 'ஒத்துழைப்பு – இணக்கப்பாடு – பொதுக்கருத்து ஆகியவற்றிற்கான புதிய யுகம்' என பாப்ஜியார் அறிவித்துள்ளமை பாப்ஜியாரின் உத்தேச செயற்திட்டத்தின் நோக்கத்தினைக் காட்டினாலும், அவருடன் கூட்டாக உள்ளவர்களுக்கு 'காங்கிரசின் கவிழ்ப்பு புத்தி' வந்துவிட்டால்தான் பிரச்சினை ஆரம்பமாகும்.

சரி! அந்தக்....கதைகள் ஒரு பக்கமிருக்கட்டும்.... பாப்ஜியாரின் அரசினால் 'சிங்கக்கொடி'யோருடைய அரசும் கொஞ்சம் கலக்கத்திலிருக்கிறதாக கூறப்படுகிறதே உண்மையா? ஏதோ கைதேர்ந்த ஒரு நிருபரைப்போல கேள்வி ஒன்றினை வீசினார் கையார்.

உண்மைதான் ஐயா... பாப்ஜியாரின் அரசில் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் அங்கம் வகிப்பது பெரிய அம்மணியாருக்கு வயிற்றில்புலி[ளி]யை கரைப்பது போலாகிவிட்டது. எங்கே தனது சமாதானத்திற்கான யுத்தத்தினை தமிழர் மீது தொடர முடியாதுபோய்விடுமோ என்பதுதான் இக் கலக்கத்திற்கான காரணம். இதனால்தான் பாப்ஜியார் பொறுப்பேற்ற கையோடு லக்ஷ்மன் பப்பி 'க' ணா காமரை வாழ்த்துச் செய்தி ஒன்றுடன் டில்லிக்குத் துரத்திவிட்டுள்ளார் பெரிய அம்மணியார். ஆனாலும் இவர்களுக்கு சாதகமான நிலை டில்லியில் காணப்படவில்லையாம்.

.....சரி...சரி! டில்லிப் பிரதமரின் கதை சொன்னீர் கொழும்பு பிரதமரின் கதையையும் கொஞ்சுண்டு சொல்லுமேன் கேட்போம் என்று வாயை சப்புக்கொட்டினார் கையார்.

ஓ..பெரிய அம்மணியாரின் ஆத்தாவின் கதையா கேட்கிறீர்?... சரி ...சரி...

ஆத்தாவிற்கு எதிர்வரும் சித்திரை மாதத்தோடு 82 வயதாகிறது. இந்த ஆண்டில் எப்படியும் தான் பதவியை துறந்துவிடப்போகிறேன் என ஆத்தா, மகளிடம் முடிவாகச் சொல்லிவிட்டதால் சு..'தந்திரக்' கட்சியினர் புதிய பிரதமராக யாரைப் போடுவது என்று தலைகளை உருட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கைத்தடி வத்தையார், க 'னா' காமர், தீரத பொதி நாயகன் பீரிஸ், ஆகியோர் பதவிக்கு குறிவைத்து முயலோட்டம் ஓடிய போதிலும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளாத ஆமை..ச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடிக்குத்தான் இப் பதவி போகப் போகிறதெனவும், எப்படியும் மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் புதிய தலை தெரிவு செய்யப்படலாமெனவும் கொழும்பில் கிசு..கிசுக்கள் அடிபடுகின்றன. ஆனால் ஆத்தாவோ தனது இடத்தில் தனது புத்திரனான அனுராவை இருத்திப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறாராம் [இறுதி ஆசை?]

'அட... அப்படியானால் தாயின் இடத்தில் மகன் இருக்கப்போகிறாரென்று சொல்லுமையா' புருந்திரித்தனமாக இவ்வாறு கேட்டவர் கையார்.

யோவ்...யோவ்....சும்மாயிருமைய்யா உமது அரசியல் அறிவீனத்தைப்பற்றி கண்மணிகள் என்ன நினைப்பார்கள். அனுரா தற்போது உறைவது ஐக்கியத்திற்கும் தேசியத்திற்குமான கட்சியில் என்பதை மறந்துவிட்டீரே..

ஹி....ஹி..அதுதானே! இவ்வாறு கூறி தலையை சொறிந்துகொண்டு நகைத்தார் கையார் ....ம் ...ம் ....ம்!!

# புலம் பெயர்ந்த சிறார்களின் கல்விக்காக தமிழ்ச் சோலை விடுக்கும் அழைப்பு

பிரான்சில் வாழுகின்ற தமிழ்ச் சிறார்களின் தாய்மொழி அறிவை வளர்ப்பதற்கும் அவர்களின் எதிர்கால வாழ்வை வளப்படுத்துவதற்காகவும் தமிழ்ச் சோலை கல்வி அமைப்பு தமிழர் வாழும் நகரங்களில் கல்விக் கூடங்களை அமைத்து செயற்பட்டு வருகின்றது.

புலம் பெயர்ந்து வாழுகின்ற நம் சிறார்களுக்கு அந்தந்த நாட்டின் சூழலுக்கு எற்ற முறையிலே அமைக்கப்பட்ட பாட நூல்கள் தமிழில் வெளிவராதது பெரும் குறையாக உள்ளது.

இக்குறையைப் போக்குவதற்கு புலம் பெயர்ந்து வாழும் கல்வியியலாளர்கள் தங்கள் பங்களிப்பினை வழங்க முன்வர வேண்டும் என தமிழ்ச்சோலை கல்வி அமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

குறிப்பாக தாயகத்தில் கல்வி கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியப் பெருமக்களினதும், கல்வித் துறை ஆர்வலர்கினதும் ஆலோசனைகளும், ஆக்கங்களும் பாட நூல்களை உருவாக்குவதற்குப் பேருதவியாக இருக்கும். எமது சிறார்கள் தினமும் பழகும், காணும், கேட்கும் பொருட்களை அல்லது சொற்பதங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் அமைவது முக்கியமானதென தமிழ்ச் சோலை அமைப்பு கருதுகின்றது.

எனவே சிறுவர்களுக்கான கதைகள் பாடல்கள், உரையாடல்கள், நாடகங்கள், தாய் நிலத்து வரலாறு, வாழ்ந்து மறைந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், சாதனையாளர்கள் போன்றவர்களின் வரலாறுக்ள் போன்ற ஆக்கங்களை உருவாக்கித் தருவதுடன் எற்கனவே வெளிவந்த சிறுவர் கல்விக்கான நூல்கள், குறிப்புக்கள் போன்றவற்றைச் சேகரித்துத் தந்துதவும்படியும் கேட்டுக் கொள்கின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Tamoul Cholai
Chez O.R.T France
26, rue du deapartement
75018 Paris, France.

# ‘முகத்தார்’ யேசுரட்ணம் கௌரவிக்கப்பட்டார்

இலங்கை வானொலியில் முகத்தார் வீடு நாடக மூலம் பிரபல்யம் அடைந்த திரு.யேசுரட்ணம் அவர்களுக்கு, கடந்த 15.03.98-ல் பாரிசில் பாராட்டு விழா நடத்தி கௌரவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் வாழ் கலைஞர்களால் நடாத்தப்பட்ட இப் பாராட்டு விழாவிற்கு ஏராளமானவர்கள் வருகை தந்திருந்தனர். நாடகத்துறையில் நீண்ட அனுபவமும், ஏராளமான வானொலி — மேடை நாடகங்கள் நடித்தவருமான முகத்தார் யேசுரட்னத்தின் கலை அனுபவங்களை பலரும் நினைவுகூர்ந்து பேசினார்கள்.

மேற்படி பாராட்டுவிழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகப் பொறுப்பாளர் திரு.இளங்கோ அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றுகையில், சிறந்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டிய அதேவேளையில், கௌரவிப்பு, பட்டமளிப்பு என்ற போர்வைகளில் கலைஞர்களும், கலைப் படைப்புகளும் மலினமாக்கப் படக் கூடாது என்று குறிப்பிட்டார். மேற்படி பாராட்டு விழாவில் திரு பென்சமின் இமானுவேல், திரு. கீழ்கரவை பொன்னையன், திரு. காராள பிள்ளை, திரு.ரகுநாதன் போன்ற பலரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். ஜேர்மனி தமிழ் இல்லப் பொறுப்பாளர் சிவனடியான் சிறீபதி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

பாரிஸ் ஈழநாடு விழாவிற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது.

# புகலிட நிகழ்வுகள்

## மலேசிய ஆலயங்களில் தமிழர் நிவாரணநிதி சேகரிப்பு

கடந்த தைபூசத் திருவிழாவின்போது மலேசியாவில் பல நகரங்களிலுள்ள கோயில்களில் தமிழீழ மக்களுக்காக உலகத் தமிழர் நிவாரண நிதி உண்டியல் பத்துமலை, ஈப்போ, சுங்கைப்பட்டாணி, பினாங்கு, ஈழத் தமிழர் மக்களுக்காக நன்கொடை வழங்கினார்.

பெருந்திரளான மக்கள் தம்மால் இயன்ற நன்கொடை வழங்கி ஈழத்தமிழரின் இன்னல்கள் சம்பந்தமான கையேடுகளை கேட்டுப் பெற்றுச் சென்றனர்.



ஜோனர்பனா, கோலசிலாங்கூர் போன்ற நகரில்தான் தைபூச விழா நடைபெறுவது வழக்கம்.

பத்துமலை கோயிலில் நன்கொடை திரட்டப்பட்டபோது கோயிலுக்கு விஜயம் செய்த மலேசிய பொதுப்பணி அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு, அவர்கள் எமது பாசறைக்கு வந்து

எல்லா இடங்களிலும் மொத்தமாக 2479400 மலேசிய வெள்ளி (U$ 6612) திரட்டப்பட்டது.

இந் நன்கொடைத் திரட்டலுக்கு மலேசியத் தமிழ் நெறிக் கழக உறுப்பினர்களும் உலகத் தமிழர் நிவாரண நிதி தொண்டர்களும் அறங்காவலர் குழுவினரும் பெரும் பங்கு வகித்தனர்.








எங்கும்
கிடைக்கிறது





*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail: bhasky@aol.com*





போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# பலதும் பத்தும்

## அமெரிக்க அரசு ஆபிரிக்காவில்!



திரு. பில் கிளின்டன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன்பின் முதல்முதலாக மிக நீண்டதொரு சுற்றுப் பயணத்தை ஆபிரிக்காவிற்கு மேற்கொள்வதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த 19 வருடங்களில் ஒரு அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஆபிரிக்காவிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாகவும் இது அமைகிறது. வழக்கமாக ஒரு நாட்டின் ஜனாதிபதி வேறு நாடுகளுக்கு விஜயத்தினை மேற்கொள்ளும்



போது அவருடன் அவரது துணைவியார் உட்பட தெரிந்து எடுக்கப்பட்ட சிலரைக்கொண்ட தூதுக்குழு ஒன்றுதான் பயணப்படுவது வழக்கம். ஆனால் பில் கிளின்டன் தற்போது மேற்கொண்டுள்ள இச் சுற்றுப் பயணமானது சற்று வித்தியாசமானதுதான்.

கிளின்டன் தலைமையில் உகண்டா, ருவண்டா, செனகல், கானா, தென்னாபிரிக்கா, பொட்சுவானா போன்ற நாடுகளுக்கான இவ் விஜயத்தில் ஈடுபட்டிருக்கும் குழுவினரின் தொகையை நினைத்தால் மலைத்துப் போவீர்கள். இவ் விஜயத்தில் அவருடன் திருமதி. கிளின்டன், மகள் உட்பட 981 பேர்கள் கலந்துகொள்கிறார்கள். அரசியல் உதவியாளர்கள், நிர்வாக அதிகாரிகள், சமையல்காரர்கள், தொழில் தொடர்பு உத்தியோகத்தர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், மற்றும் ரொக்கட் லோஞ்சர்கள், தானியங்கித் துப்பாக்கிகள் சகிதம் பாதுகாப்பு அதிகாரிகள் என 500 பேர்கள், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிபுணர்கள் என 400 பேர்கள். இவை தவிர வணக்கத்துக்குரிய பிதா ஜெசிஜக்சன் உட்பட 16 பேர்கள் அடங்கிய கறுப்பின காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் அமெரிக்காவின் கறுப்பின வர்த்தகத் தலைவர்கள் குழு ஒன்று என பெரும்பட்டாளமொன்று ஆபிரிக்காவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட இடம் பெயர்ந்திருக்கிறது. இதுவரை ஆட்களின் எண்ணிக்கையையே அறிந்தீர்கள். இனி இச் சுற்றுப் பயணத்தில் இடம்பெற்றுள்ள தளபாடங்களைப் பார்ப்போம்:

கிளின்டன் குழு சுற்றுப் பயணம் செய்ய 4 குண்டுதுளைக்காத ஆடம்பரக் கார்கள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தூதுக்குழுவினரின் பயணத்திற்காக ஏராளமான வாகனங்கள் போன்றவற்றுடன், 4 ஏவுகணை எதிர்ப்புச் சாதனம் பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகள், 'Air Force One' எனப்படும் அணு ஆயுதக் கட்டளை விமானம் ஒன்றும் இதில் அடங்குகின்றது. அத்துடன், இப் பயணத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் இரத்த மாதிரிகளுடன் கூடிய ஒரு சத்திரசிகிச்சைக்கூடம் ஒன்றும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகைப் பொருட்களும் ஆட்களும் 4 பாரிய போயிங் இராட்சத விமானங்களில் திணிக்கப்பட்டு ஆபிரிக்கா நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன.

ஆக 12 நாட்களுக்கு அமெரிக்காவின் நிர்வாகம் ஆபிரிக்காவில் இருந்தே மேற்கொள்ளப்படப் போகின்றது என்பதுதான் ஆச்சரியமான உண்மை.

## பேராசை = பெருநட்டம், சிறைக்கூடம்

ஒரு கார்த் திருடனுக்கு மேலும் ஆசையயூட்டி அவனை மிகச் சாதுரியமாக மடக்கிப் பிடித்த ஒரு சம்பவம் அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

பிரித்தானிய நகர் ஒன்றில் கட்டட வேலையாளரான ஒருவர் தனது காரை ஒருநாள் தெருவோரத்தில் விட்டுவிட்டு ஏதோ அலுவலாகச் சென்று திரும்பியபோது கார் உடைக்கப்பட்டு அதில் இருந்த பொருட்கள் திருட்டுப் போய் இருந்தன. காரில் இருந்து களவுபோன பொருட்களுடன் அவர் தொலைபேசி 'பேஜரும்' அடங்கியிருந்தது. கார் உரிமையாளர் பொலிசாரை ஸ்தலத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்தார். அத்துடன் தானாக யோசித்து வேறு ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட்டார். தனது களவு போன பேஜருக்கு ஒரு செய்தியை அனுப்பினார். அச்செய்தியில் ஒரு அதிர்ஸ்டலாபச் சீட்டில் 500 பவுண்ஸ்களை வென்றுள்ளதாகவும் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் குறிப்பிட்டிருந்தார். அவரது எதிர்பார்ப்பின்படி நினைத்தவாறே திருடன் சில நிமிடங்களுக்குள் தனது கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொண்டான். தான் 500 பவுண்ஸ்களை வென்றுள்ளதாயும் அதை எப்படிப் பெற்றுக்கொள்வது, தனக்கு அதை அனுப்பி வைக்கமுடியுமா என்றும் வினவியுள்ளான். கார் உரிமையாளரோ மிகவும் சாதுரியமாக இச் சீட்டிழுப்பு ஒரு தேவாலயத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆகையால் நேரடியாகத்தான் அதைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனக்கூறி ஓர் தேவாலயத்தின் விலாசத்தையும் குறிப்பிட்டுள்ளார். திட்டப்படி பொலிசார் ஏற்கனவே அத் தேவாலயப் பகுதியில் மறைந்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் பரிசினைப் பெற்றுக் கொள்ள திருடன் தேவாலயத்திற்கு வந்தபோது மிகச் சாதுரியமாக மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

## ஒரேநாளில் தாயான இரட்டைச் சகோதரிகள்

இஸ்ரேலின் மத்திய பிராந்தியத்தின் நெதண்யா நகரின் மருத்துவ நிலையம் ஒன்றில் குழந்தைப் பேற்றுக்காக 27 வயதான ஒரு பெண் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்கு அன்று மதியம் அவரது மற்றொரு இரட்டைச் சகோதரி வந்திருந்தார். அவருக்கும் குழந்தைபெறும் நேரம்தான், ஆனால் எப்போதென்பது அறியப்படவில்லை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சகோதரி ஒரு பையனைப் பெற்றெடுத்தார். அதே நாளில் சில மணி நேரத்தில் பார்க்க வந்திருந்த சகோதரியும் ஒரு மகவைப் பெற்றெடுத்தாள். இவ்விரட்டைச் சகோதரிகள் தாம் பிறந்ததுமுதல் ஒரேநாளில் பாடசாலையில் சேர்ந்து, ஒரே பள்ளியில் கல்வி கற்று ஒரே நாளில் பாடசாலையைவிட்டு வெளியேறினர். அதே போன்று ஒரே தினத்தில் தமது எதிர்கால கணவரை தெரிவுசெய்திருந்தனர். தற்போது ஒரே நாளில் குழந்தையையும் பெற்றுள்ளனர்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இருவரும் திருமணம் செய்துகொண்டதும் சகோதரர்களையே.

## கடத்தல் முயற்சிக்கு பயன்பட்ட தலை மயிர் உலர்த்தும் கருவி

பிரேசிலின் தலைநகர், ரியோடி ஜெனிரோவில் பயணம் செய்துகொண்டிருந்த ஒரு பேருந்தில் திடீரென இரு முகமூடி நபர்கள் தோன்றினார்கள். அவர்களது கையில் மறைக்கப்பட்ட இரு பொருட்கள். அவற்றின் மூலம் பேருந்தின் சாரதி மிரட்டப்பட்டார். சாரதியை மிரட்டி பேருந்தைக் கடத்த இருவரும் முயன்றனர். இச்சமயத்தில் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த இன்னொருவர் தனது இடையில் இருந்து துப்பாக்கியை வெளியில் எடுத்து கடத்தல் முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கிச் சுடத் தொடங்கினார். இதில் ஒரு கடத்தல்காரர் கொல்லப்பட மற்றவர் காலில் காயத்துடன் மயங்கிவிழுந்தார். கடத்தல் முயற்சியில் ஈடுபட்டவர்களின் கையில் வைத்திருந்த பொருட்களைப் பார்த்தால், அவைகளோ தலைமயிர் உலர்த்தும் கருவிகள். பொலிசார் காயப்பட்டவரை கைதுசெய்தனர். சுட்டவர் யார் என்பது தெரியவில்லை.




O.R.T. France - 26 Rue du Departement, 75018 Paris. Tel: 01 40 38 30 74

# கலைந்த சொற்கள் எண்: 3.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | ல் | வா | கை | லா | ச | ம் | பா | வ | ம் | ள் | வெ | ய் |
| ந | த | ம் | ச | ஞ் | த | த | ங் | ச | கு | க | கா | அ |
| தி | த் | ம் | சி | ம் | கு | னி | ங் | மி | க் | ங் | டை | ந் |
| க | னி | கை | ல | ஜ | றி | பு | தி | கை | ண | க | ப | த |
| ள் | க | ங் | ல | நி | ப் | ப் | சீ | ப | து | ட | ர | ர |
| ள் | த | ற் | ம் | தி | பு | ப் | னி | ன் | ம | க | ட் | ம் |
| பு | ப் | ர | ப | ர | ப | ப் | ப | பு | ர் | ம் | டை | ல் |
| ம் | க | சே | பி | ல | பா | ம் | து | ப் | ம | ல | க | ப |
| த | பி | பு | சே | றை | கை | ப் | வா | ச | ம் | ப | வ | ம் |
| ச | லி | ப் | பு | ம | ப | ம் | ர | க | க் | ச | ன | து |
| ம | ஊ | ளை | சி | ட் | ஞ் | க் | ங் | தா | ப | க | வ | வெ |
| ம் | ஊ | க | டி | ச் | கு | ச | க | கா | க் | க் | ரை | த |
| சீ | ர | ண | ம் | ங் | து | வ | ள் | சி | கு | கு | ர் | க |
| ம் | வ | ட் | ட | ம் | ச | த் | த | ம் | வ | ம | த | வ |
| ப | ர் | ம | பு | ம் | ரு | க | மு | து | ம் | ம | ல் | ல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பனங்காய் | பரப்பு | பரட்டை | பனிப்பாறை | பரபரப்பு | பக்குவம் |
| சதங்கை | சம்பவம் | சக்கரை | சக்கரம் | சங்கம் | சதுப்புநிலம் |
| சரக்கு | குறிப்பு | புனிதம் | அந்தரம் | சஞ்சிகைகள் | இதம் |
| சீரணம் | ஊரவர் | கைலாசம் | களைப்பு | பாசக்கரம் | |
| சிக்கனம் | வெதும்பல் | வட்டம் | மடங்கு | பாவம் | கவசம் |
| கசப்பு | கற்பலகை | கரும்பு | கடகம் | முத்துச்சிப்பி | |
| கடகங்கள் | நதிகள் | மஞ்சள் | மர்மம் | மிதிப்பு | மன்னிப்பு |
| சிகரம் | தரகர் | தஞ்சம் | தகவல் | தர்மம் | தகனித்தல் |
| நிலங்கள் | துப்பட்டி | துவக்கு | தும்மல் | சலிப்பு | தாங்குதல் |
| தகரம் | சத்தம் | சபலம் | பதிப்பு | தசமம் | பாலபிசேகம் |
| துன்பம் | பகல் | நிஜம் | பாங்கு | வாசம் | துவாரங்கள் |

இங்கு சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் இருக்கும். இச்சொற்களைக் கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

**கலைந்த சொற்கள் எண்-3-இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 11.04.98**

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

பெயர்: ..............................

முகவரி: ..............................


..............................

..............................

பிறந்த திகதி: ..............................

சந்தா இல: ..............................

## கலைந்த சொற்கள் எண்- 2 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு நூற்றுக்கணக்கான வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) ஜெகன் சின்னத்துரை
4313 Mohlin,
Swiss.

2) கணபதிப்பிள்ளை உதயமூர்த்தி
47798 Krefeld.
Germany.

3) சாரங்கன்
7400 Herning, Denmark.

4) ந. ந. ராஜா
33615- Bielefeld
Germany.

5) தயாநிதி சிவா
4370 - Egersund,
Norway.

இவர்களுக்கு Lune International Paris நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

**இந்த கலைந்த சொற்கள் எண்-3 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-4 உம், 16 - 22 ஏப்ரல் 98 ஈழமுரசில் வெளிவரும்.**

**தயாரிப்பு: சௌந்தரராஜன்**


# Centre Educatif Franco Tamoul

## கடந்த 11 வருட சிறந்த கல்விமுறைச் சேவையின் தொடர்ச்சியாக.....

**CEFT-யின் புதிய பிரெஞ்சு பேச்சு வகுப்பு**
உங்கள் அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பம்
திகதி: 05.04.1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 14.30 மணிதொடக்கம் 16 மணிவரை
(காலம்: 4 மாதங்கள்)

பிரெஞ்சு மொழியைப் பேச எழுதுவதற்காக மற்றுமோர்
**புதிய விசேட வகுப்பு ஆரம்பம்**
திகதி: 04.04.1998 சனிக்கிழமை
நேரம்: 17.30 மணி தொடக்கம் 19 மணிவரை
(காலம்: 6 மாதங்கள்)

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் தமிழ், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் சரளமாகப் பேச, எழுத ஆற்றல் உள்ளவர்களாக உருவாக விரும்புகிறீர்களா?
உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!!!
உங்கள் பிள்ளைகள் சிறுவயதுமுதல் கற்றுக்கொண்ட இந்நாட்டு மொழிமூலம் தமிழ் மொழியை உணர்த்தும்
**புதியமுறை = வெற்றி**
ஆரம்பம்: 04.04.1998
நேரம்: 13.30 மணிமுதல் 15.00 மணிவரை
சனி, ஞாயிறு தினங்களில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

பிரெஞ்சு மொழிபேசும் திறனை நீங்கள் வளர்த்துக்கொள்ள விரும்புகிறீர்களா? உங்களுக்காக பிரெஞ்சு உயர்தர வகுப்புக்கள் (2 eme Degre) நடைபெறுகிறது.
நேரம்: 16 மணிமுதல் 17.30 மணிவரை

# நித்தி வாகன சேவை

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்



உங்கள் தொடர்புகட்கு:
நித்தி
Tel: 01 48 05 02 14 /
01 43 03 07 08,
(Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு.
06 07 34 80 51

# வோர்னின் விளையாட்டு சாதனையும் அவுஸ்ரேலிய அணியின் வெற்றியும்

25.03.98 பெங்களூரில் ஆரம்பமான இந்திய -அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது இறுதி டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. முதலில் துடுப்பாடிய இந்திய அணி இந்திய இளம்புயல் டெண்டுல்கரின் அபாரமான துடுப்பாட்டத்தால் குவிக்கப்பட்ட 177 ஓட்டங்களுடனும், இத் தொடரில் சித்துவால் அடிக்கப்பட்ட நான்காவது அரைச்சதமான 74 ஓட்டங்களுடனும் 424 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றுக்கொண்டது.

தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர் வோர்னுக்கு ஒரு சாதனை பதித்த மண்ணாக அமைந்தது பெங்களூர். அதிகூடிய விக்கட்டுக்களை வீழ்த்திய சுழல்பந்து வீச்சாளாராக புதிய சாதனையை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் மே. இந்திய தீவுகளைச் சேர்ந்த கிப்ஸ் 309 விக்கட்டுகளைப் பெற்றார். இந்தப் போட்டியின் இறுதியில் வோர்ன் 313 விக்கட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் கல்கத்தாவில் தவறவிட்ட சாதனையை பெங்களூரில் ஏற்படுத்திக் கொண்டார்.

அடுத்து ஆடிய அவுஸ்திரேலியா சால்டரின் 91 ஓட்டங்களுடனும் மார்க்வோவின் ஆட்டமிழக்காத 153 ஓட்டங்களுடனும் 400 ஓட்டங்களைப் பெற்றது. இத் தொடரில் அவுஸ்திரேலியர் ஒருவரால் அடிக்கப்பட்ட முதலாவது சதமாகவும், தனது அதிகூடிய ஒரு இனிங்ஸ் ஓட்டமாகவும் அமையும் முக்கிய சதமாக மார்க் வோவ் பெற்ற சதம் அமைந்ததது.



மார்க் வோவ்

தனது சொந்த மைதானத்தில் அனில் கும்பிளே 6 விக்கட்டுகளை சாய்த்துள்ளார். இதுவும் இத் தொடரில் ஒரு இனிங்சில் பெறப்படும். கூடிய விக்கட்டுகளாகவே அமைகிறது. அடுத்து ஆடிய இந்தியா அணி முன்பிருந்த திறமைகளையெல்லாம் மூட்டை கட்டிவிட்டு மோசமான ஆட்டத்தில் ஈடுபட்டதா? அல்லது தோல்விகளையே சுமந்த பலமான அணி ஒன்று மீண்டும் தனது பலத்தைக் காட்டமாட்டாதா? என்ற கேள்விகளைக் கேட்கும் அளவிற்கு ஆட்டத்தின் போக்குக் காணப்பட்டது. இந்திய அணியால் 169 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

194 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் களத்தில் ஆட இறங்கிய அவுஸ்திரேலிய அணி, தலைவர் ரெயிலரின் நிதானமான ஆட்டத்தில் 102 ஓட்டங்களைப் பெற்றதுடன் அவுஸ்திரேலிய அணி 2 விக்கட்டுகளை மட்டும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. இவ் வெற்றி மூலம் தொடரானது 2:1 என்று இந்தியாவே வெற்றி பெற்றது. ஆனாலும் அவுஸ்திரேலியாவின் பலம் 3-வது போட்டியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரை புதுப்பந்தை தகுந்த முறையில் பாவித்து விக்கட் வீழ்த்தக்கூடிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத் ஒருவர் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனியாக' உள்ளது. இப்போட்டியில் உடல் நிலை காரணமாக ஸ்ரீநாத் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




மார்க் ரெயிலர், கிலி

# தொடரை வெற்றிகொண்ட பாகிஸ்தான்



சிம்பாவே - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டி 25.03.98 முடிவடைந்தது. முதலில் ஆடிய சிம்பாவே 277 ஓட்டங்களைப் பெறுவதற்கு குட்வின் 53 ஓட்டங்களையும், வட்டால் 62 ஓட்டங்களையும், ஸ்ரங் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அடுத்து ஆடிய பாகிஸ்தான் முகமட் வசிமின் அபாரமான மட்டை வீச்சால் பெறப்பட்ட 192 ஓட்டங்களுடன் அணி 354 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்சை ஆடிய சிம்பாவே 268 ஓட்டங்களைப் பெற்றது. குட்வின் கூடிய ஓட்டங்களாக 81 ஓட்டங்களைப் பெற்றார். 192 ஓட்டங்களைப் பெறவேண்டிய பாகிஸ்தான் 7 விக்கட்டுக்களை இழந்தது. இறுதியில் 3 விக்கட்டுக்களால் வெற்றிபெற்று தொடரையும் 0:1 என்று வெற்றி கொண்டது.

## அவுஸ்திரேலிய சம்பியனாக மேற்கு அவுஸ்திரேலியா தெரிவு

அவுஸ்திரேலிய உள்ளூர் கிரிக்கட் போட்டிகளின் சம்பியனாக மேற்கு அவுஸ்திரேலியா தெரிவாகி உள்ளது. 'Sheffield Shield' எனப்படும் உள்ளூர் சம்பியன் இறுதியாட்டத்தில் தஸ்மானியாவும் மேற்கு அவுஸ்திரேலியாவும் பேர்த் நகரில் மோதிக்கொண்டதில், மேற்கு அவுஸ்திரேலியா 7 விக்கட்டுக்களால் வெற்றிபெற்றது.

51 போட்டித் தொடரில் இத்துடன் 14-வது தடவை மேற்கு அவுஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

முடிவின் விபரம்:

தஸ்மானியா - 1வது இனிங்ஸ் 285, 2வது இனிங்ஸ் 348


மே.அவுஸ்திரேலியா - 1வது இனிங்ஸ் 571, 2வது இனிங்ஸ் 63/3

# இங்கிலாந்தின் தோல்வியும் தலைவரின் பதவி விலகலும்



மைக் அதட்டன்

மேற்கிந்திய தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 6-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 24.03.98 முடிவுற்றது. இப்போட்டியை இனிங்ஸ் 52 ஓட்டங்களால் வெற்றிகொண்ட மேற்கிந்திய தீவுகள் தொடரையும் 3:1 என்று வெற்றியுடன் முடித்துக்கொண்டது. ஒருவர் வெற்றி பெறும்போது இன்னொருவர் தோல்வியடைய வேண்டியது பொதுவான நியதி. ஆனாலும் ஏற்படும் தோல்வியால் எழும் சர்ச்சைகள், மாற்றங்கள் எவ்வாறு அமையும் என்பது கூற முடியாது. இங்கிலாந்து அடைந்த தோல்வியால் அணியின் தலைவர் அதட்டன் பதவி விலகியுள்ளார். ஒரு தலைவர் வெற்றிகளைக் குவிக்கும்போது அவர் மீது ஏகப்பட்ட வாழ்த்துக்களும், மடல்களும் வருவது போன்று தோல்வியடையும் போதும் ஏகப்பட்ட எதிர் விவாதங்களும் ஏடாகூடமான கருத்துக்களும் எழுந்து விடுகின்றன. இந்த நிலையில் சிக்குண்ட அதட்டன் இங்கிலாந்தை கூடிய தடவை வழிநடத்தினார். 52 போட்டிகளுக்கு தலைமை வகித்தவர். அதட்டனின் இடத்தை நிரப்புவதற்கு ஸ்ரிவாட், நாசர் சுகைன், ராம்பிரகாஸ் ஆகியோரின் பெயர்கள் பெரியளவில் பேசப்படுகிறது.



இவ் இறுதி டெஸ்டில் முதலில் ஆடிய இங்கிலாந்து 127 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்த மே.இந்திய தீவுகள் 7 விக்கட்டுக்களை இழந்து 500 ஓட்டங்களுடன் தனது முதல் இனிங்சை நிறுத்தியது. லம்பேட், வலஸ், லாறா, கூப்பர் ஆகியோர் சிறப்பாக துடுப்பாடி முறையே 104, 92, 89, 108 ஓட்டங்களைப் பெற்றனர். இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்சில் 321 ஓட்டங்களைப் பெற்றது. குசைன், ஸ்ரிவாட், தோர்ப் முறையே 106, 79, 84, ஓட்டங்களைப் பெற்றனர்.

# ஒருநாள் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்ட சிறந்த இணைப்பாட்டம்

| இணைப்பு விக்கட் | வீரர்கள் | ஓட்டங்கள் | நாடு | எதிர்நாடு | திகதி |
|---|---|---|---|---|---|
| 1ம் | மார்ஸ், பூன் | 212 | அவுஸ்திரேலியா | இந்தியா | 7.09.86 |
| 2ம் | அமிர்சொலி, இசாம் | 263 | பாகிஸ்தான் | நியுசிலாந்து | 20.04.94 |
| 3ம் | சயிட் அன்வர், இயாஸ் அகமட் | 230 | பாகிஸ்தான் | இந்தியா | 18.01.98 |
| 4ம் | குலினன், டோடஸ் | 232 | தென்.ஆபிரிக்கா | பாகிஸ்தான் | 29.09.96 |
| 5ம் | அசாருதின்,ஜாடேஜா | 223 | இந்தியா | சிறீலங்கா | 17.08.97 |
| 6ம் | ரிச்சட்சன், டுயோன் | 154 | மே.இந்தியா | பாகிஸ்தான் | 21.01.91 |
| 7ம் | டுயோன், மார்சல் | 115 | மே.இந்தியா | பாகிஸ்தான் | 04.1186 |
| | பறோறே,கோர்மேன் | 115 | நியுசிலாந்து | பாகிஸ்தான் | 13.11.86 |
| 8ம் | றிப்பல், வோர்ன் | 119 | அவுஸ்திரேலியா | தென்.ஆபிரிக்கா | 04.04.94 |
| 9ம் | கபில்தேவ், கிர்மானி | 126 | இந்தியா | சிம்பாவே | 18.06.83 |
| 10ம் | ரிச்சட்ஸ்,கோல்டிங் | 106 | மே.இந்தியா | இங்கிலாந்து | 31.05.84 |

கிரிக்கெட் விளையாட்டில் ஒரு முனையில் ஒருவர் துடுப்பாட்டம் செய்ய மறுமுனையில் இன்னொருவர் அடுத்த துடுப்பாட்டத்திற்கு காத்திருப்பார். இவ்வாறு மாறிமாறி துடுப்பாட்டம் செய்து ஒருநாள் போட்டிகளில் கூடுதலான ஓட்டங்களைக் குவித்த சோடிகளின் விபரங்களை அவதானிக்கலாம். இங்கிலாந்து, சிம்பாவே, சிறீலங்கா எவ்விதமான சிறந்த இணைப்பாட்டத்தையும் தம் வசப்படுத்த முடியவில்லை. அதுபோல அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராகவும் எவ்வித சிறப்பு ஆட்டத்தையும் எந்த நாடும் படைக்கவில்லை.

# வீனஸ்ஸிடம் தோல்விகண்ட ஹிங்கிஸ்

'லிப்டன் சம்பியன் கிண்ணத்'திற்கான டென்னிஸ் போட்டிகள் கீபிஸ் கெய்ன் நகரில் நடைபெற்றன. முன்னணி வீரர், வீராங்கனைகள் பலர் பங்கேற்கும் இந்தப் போட்டியின் பெண்களுக்கான அரையிறுதி ஆட்டம் கடந்த 27.03.98 அன்று நடைபெற்றது. சர்வதேச தரத்தில் முதலாமிடத்தில் இருக்கும் சுவிஸ் நாட்டு வீராங்கனை 'ஹிங்கிஸ்' மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் மோதிய இப்போட்டியில் வீனஸ் 6:2, 5:7, 6:2 என்ற கணக்கில் ஹிங்கிசை வெற்றிகொண்டார். இந்த மாதத் ஆரம்பத்தில் கலிபோர்னியாவில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் ஹிங்கிஸ் வீனஸ்-ஐ தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

புதுவருடத்தை முன்னிட்டு 01.04.98 முதல் 15.04.98 வரை

# மாபெரும் மலிவுவிற்பனை



# ரஜிந்தாஸ்

தைத்த ஆடைகளின் சுரங்கம்

**ஆடவர்களுக்கான**

சேட் 59 Fr
ரவுசர்கள் 139 Fr
டெனிம் 99Fr
(பட்டு) வேட்டி சால்வைகள் 99Fr
குர்தா 99Fr
சாரம் 35Fr
ஆகிய விலைகளிலிருந்து விற்பனையாகும்

**பஞ்சாபி வகைகள்**

சிறுமியர், பெரியவர்களுக்கு 99 Fr லிருந்து

**பாவாடை சட்டைகள்**

சிறுமியர்களுக்கு 79 Fr லிருந்து

**குழந்ததைகளுக்கான சட்டைகள்**

59 Fr லிருந்து

அலங்காரப் பொருட்கள், சோகிமாலைகள், கவரிங் நகைகள், இன்னும் பல பொருட்கள் உங்களை ஆச்சரியப்படுத்தும் விலைகளில்

தரமான
ஜங்கரன், பிரமிட் வீடியோப் பிரதிகளும் மலிவு விலைகளில்...

மூன்று CDகள் 100 Fr மட்டுமே!

உங்களின் அச்சுத் தேவைகளுக்கு

21, Rue Perdonnet,
75010 Paris
Tel : 01 44 65 00 56

ரஜிந்தாஸ்
அழுத்தகம்

# RAJINTHAS

9, Rue Perdonnet, 75010 Paris
Tel & Fax : 01 40 36 53 20

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி சிவலை மகேந்திரன் (கலா)
வேலணை கிழக்கு
(லுகானோ, சுவிஸ்)

மண்ணில்
08.03.1955




விண்ணில்
02.03.1998

அந்திமக் கிரியை: 01.04.1998

என் வாழ்வுக்கு உறுதுணையாக இருந்த என் மனைவியே
அன்பின் இலக்கணமே அமைதியின் இருப்பிடமே
உன் உடல் என்னை விட்டுப் பிரிந்தாலும்
உன் நினைவு என் வாழ்நாளில் என்றுமே மறையாது
என் அன்பு மனைவியின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து
ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்
தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும்
ஆறுதல் கூறிய அனைவருக்கும், மற்றும் எண்ணற்ற உதவிகள் புரிந்து
எங்கள் துன்பத்தை தங்கள் துன்பமாக ஏற்று எம்மை அமைதிப்படுத்திய
நல் உள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**அன்பின் பிரிவால் வாடும் துணைவர் மகேந்திரன்**

தகவல்: மகேந்திரன் (சுவிஸ்) Lugano, Swiss. Tel: 079/2214169




# கோக் - பெப்சி கோலா யுத்தம்

20.03.1998- அமெரிக்க உயர் கல்விக்கூடம் ஒன்றில் கோக் தினம் (Coke day) கொண்டாடப்பட்டது. கொக்கோகோலா நிறுவனத்தின் உயர் நிர்வாகிகளின் முன் பாடசாலை மாணவர்கள் கொக்கோ கோலாவின் சிவப்பு-வெள்ளை உடைகளில் அணிவகுத்துச் சென்றனர்.

'கொக்கோகோலாவுடன் அணி சேருங்கள்' என்ற அமெரிக்கா தழுவிய பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியை அறிவித்து அதன்மூலம் நேரடியாக பாடசாலை மாணவர்களை தம் வாடிக்கையாளர்களாக்கும் 'கோக்'கின் திட்டத்தை 18 வயது மாணவர் மைக் கமரூன், சாமர்த்தியமாக கோக்கின் போட்டியாளர்கள் பெப்சிக்கு சார்பாக திருப்பி விட்டுவிட்டார்.

அவ்வூர்வலத்தின் நடுவே கமரூன், பெப்சியின் சேர்ட் அணிந்துசென்றது கோக்கையும் பாடசாலை நிர்வாகத்தையும் ஆத்திரப்படுத்திவிட்டது. கமரூன் பாடசாலையை விட்டு ஒருநாள் விலத்தி வைக்கப்பட்டார். ஆனால் அதுவே கமரூன் ஊடாக பெப்சி நிறுவனம் கொக்கோகோலா மீதான தாக்குதலைத் தொடுக்கும் 'ஆயுதம்' ஆகிவிட்டது.

'கமரூன் ஒரு தலைசிறந்த உடைத் தேர்வாளர்' எனப் பெப்சி குதூகலப்படுகிறது. தமது நிறுவனம் இவ்வாறான சேர்ட்டுக்களை எதிர்காலத்தில் தொடர்ந்து வழங்க உள்ளதாக பெப்சி அறிவித்துள்ளது. இதற்குப் பதிலளித்த கொக்கோ கோலா நிறுவனத்தினர் 'தம்மால் சந்தைப்படுத்த முடியாத பழைய பொருட்களை (உடைகளை) இவ்வாறு விற்றுத் தீர்க்க பெப்சி முயல்கிறது' என்கிறார்கள்.

ஆனால் சமரூன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதாக இல்லை. தொலைக்காட்சிகள் மூலம் கமரூன் நடாத்தும் விவாதம் கோக்கின் அணி சேர்க்கும் திட்டத்தை கேலிக்கூத்தாக்கியுள்ளது.

'ஊர்வலம் முழுவதும் நான் பெப்சி சேர்ட்டை அணிந்திருந்தேன். அப்போதெல்லாம் எதுவுமே செய்யாதவர்கள் புகைப்படம் எடுக்கும்போது எனக்கு தொல்லைதந்தனர்' என கமரூன் கோக்கை சமருக்கு அழைத்துள்ளார்.

# பாமி சோடாவும் கோலா கவர்ச்சியும்

வேர்ஜின் நிறுவனத்தின் அதிபர் றிச்சாட் பிரான்சன் வணிக உலகின் நாகரிகங்கள் பற்றி அக்கறை கொள்ளாதவர். ஆனால் அவரது தனிப்பட்ட நடவடிக்கைகள் வேர்ஜின் நிறுவனத்தை உலக புகழ்பெற்றதாக மாற்றியுள்ளது.

பிரித்தானிய தொழில் அதிபரான இவர், விமானப் போக்குவரத்து, இசைத்தட்டுகள், வொட்கா எனப் பலதரப்பட்ட துறைகளில் வேர்ஜினிற்கு புகழ் சேர்த்தவர். தற்போது பெப்சி-கோக் நிறுவனங்களிற்கு போட்டியாக வேர்ஜின் நிறுவனம் கோலா ஒன்றினை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. மூன்று வருடங்களுக்கு முன் ஐரோப்பிய சந்தைகளை சென்றடைந்த வேர்ஜின் கோலாவால் 1% சந்தையை மட்டுமே அதனால் கைப்பற்ற முடிந்தது. இதேவேளை 54 பில்லியன் டொலர்கள் பெறுமதியான அமெரிக்க கோலா சந்தையில் காலடி வைக்க பிரான்சன் முடிவு செய்துள்ளார். இச் சந்தையை 44% கோக்கும், 31% பெப்சியும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.



இச்சந்தை போட்டிகளுக்கு வேர்ஜின் கண்டுபிடித்துள்ள தீர்வு, அவர் அறிமுகப்படுத்தியுள்ள 'பாமி' போத்தல்கள் ஆகும். Pammy போத்தல்கள், புகழ்பெற்ற அமெரிக்க நடிகை பாமெலா அன்டர்சன்னின் தோற்றத்தை ஒத்தது என்கிறார் பிரான்சன். வளைவுகள் நிரம்பிய இப் போத்தல்கள் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துமா என்பது தெரியவில்லை. ஆனால் பாமெலா அன்டர்சன்னைப் பிரதிபலிப்பதாகக் கூறப்படும் பாமி போத்தல்கள், அமெரிக்க பெண்கள் அமைப்புக்களை ஆத்திரப்படுத்தியுள்ளது. 'பாமி சோடாக்கள் பாடசாலை மாணவனின் கனவுகளுடன் விளையாடுகிறது' என்கிறது அமெரிக்க தேசிய பெண்கள் அமைப்பு.

இதுவரை நடிகை பாமெலா அன்டெர்சன், தன்னைப் பிரதிபலிப்பதாக கூறப்படும் பாமி போத்தல்கள் பற்றி கருத்துக் கூறவில்லை.

# தேநீருக்குப் பிரியாவிடை

பாரம்பரியமாகத் தேநீரை விரும்பி வந்த இங்கிலாந்து சமூகத்தில், கோப்பிக் கலாச்சாரம் காலூன்றி வருகிறது. இங்கிலாந்து முழுவதும் நூற்றுக்கணக்கில் திறக்கப்பட்டுவரும் அமெரிக்கபாணியிலான கோப்பி 'பார்'கள் இதற்குச் சிறந்த உதாரணம் ஆகும். பிரபலமான பெயர்களில் இங்கிலாந்து எங்கும் உருவாகிவரும் இக் கோப்பி பார்கள் இங்கிலாந்து சமூகத்தில் அடிப்படை மாற்றம் இடம் பெறுவதைக் காட்டுவதாக விபரிக்கப்படுகிறது.

சராசரியாக ஒரு பிரித்தானியர் 160 லீற்றர் தேநீரை 1997 இல் பருகி உள்ளார். 1996 இல் இது 178.5 லீற்றர்கள். இதேவேளை கோப்பிப் பாவனை 1997-ல் 110 லீற்றர்கள் ஆகும். 1996-ல் இது 104.7 லீற்றர் ஆகும்.

வருடாந்த கோப்பி விற்பனை பிரித்தானியாவில் 840 மில்லியன் டொலர்களாகும். இதேவேளை தேநீர் 660 மில்லியன் டொலர்கள் ஆகும். பிரான்சில் கோப்பிப் பாவனை இங்கிலாந்திலும் இரண்டு மடங்கு.

இன்று 200 விதமான பெயர்களில் பிரித்தானியா எங்கும் கோப்பி பார்கள் உருவாகியுள்ளன. அதிகரித்துவரும் கோப்பி பொருளாதாரம் உலக சந்தையில் கோப்பியின் பெறுமதியை அதிகரித்து வருகிறது.

# சர்வதேச டிஜிட்டல் வானொலி

நோசமாரா ஒரு சட்டத்தரணி. அவர் கனவில் உதித்த ஒரு திட்டம் ஒரு பில்லியன் டொலர் முதலீட்டில் 75 வானொலி நிலையங்களை அடையும் 200 டொலர்கள் பெறுமதியான டிஜிட்டல் வானொலியாகும். இது இந்தியா, சீனா, ஆபிரிக்கா நாடுகளுக்கான சந்தையில் விற்பதற்காகத் திட்டமிடப்பட்டது.

7 வருடங்களுக்கு முன் பல மத்திய கிழக்கு முதலீட்டாளர்கள் தமது பணத்தை நோ சாமராவின் கனவுகளின் மேல் முதலிட்டனர்.

உலகம் முழுவதையும் தமது டிஜிட்டல் வானொலியூடாக இணைக்கும் திட்டத்தை படிப்படியாக அமுல்படுத்தும் இவர், 300 மில்லியன் மக்கள் தமது 200 டொலர் வானொலியை வாங்குவார்கள் என எதிர்பார்க்கிறார்.



ஆனால் 10 மில்லியன் நேயர்களுடன் இவரது வானொலி இலாபத்தை ஈட்டத் தொடங்கிவிடும் என்பது, சட்டத்தரணிகளின் பொருளாதாரக் கணிப்பு.

# வயிற்றை நிரப்பும் சொக்லேட் வருவாய்

உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் குளிர்பான நிறுவனமான நெஸ்டல் நிறுவனம் 2.69 பில்லியன் டொலர்களைக் கடந்த ஆண்டில் இலாபமாகச் சம்பாதித்துள்ளது.


உலகில் புகழ் மிக்க சொக்லேட் வகைகள் முதல், வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவுகள் வரை பலதரப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நெஸ்டலின் வருடாந்த இலாப அதிகரிப்பு 18% ஆகும்.

பிரான்சில் பெரியர் (Perrier) உட்பட பல நிறுவனங்களையும் நெஸ்டல் உரிமையாகக் கொண்டுள்ளது. 1997-ல் அமெரிக்க சந்தையில் நெஸ்டல் வெற்றிகரமான வணிகத்தை நடாத்தியுள்ளது. ஆனாலும் நெஸ்டலின் சொந்தப் பிரதேசமான ஐரோப்பாவில், இதன் வணிக அதிகரிப்பு கணிசமான அளவு காணப்படவில்லை. நெஸ்டலின் கடன் கொடுப்பனவுகள் 1997-ல் 4.8 பில்லியன் சுவிஸ் பிராங்குகள் ஆகும்.

நெஸ்டலில் Kitkat சொக்லேட்டுகள் நெஸ்டலின் ஆதிக்கத்திற்கு ஒரு சர்வதேச உதாரணம் ஆகும்.

# தொலைத்தொடர்புக்கான சந்தை

இன்றைய பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவைகளில் தொலைத் தொடர்பும் ஒன்றாகும். பணக்கார நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையேயான இடைவெளியை இவ்விரு நாடுகளின் தொலைபேசிப் பரிவர்த்தனைத் திறனை வைத்துப் பாகுபடுத்தலாம்.



உலகம் முழுவதும் நிலவும் தொலைத்தொடர்புப் பாகுபாடு

உலகின் பாரியதும், வெற்றிகரமானதுமான தொழில் துறை தொலைத் தொடர்புத்துறை தொடர்பான வர்த்தகம் ஆகும். 2000-ம் ஆண்டளவில் இது 1 ரில்லியன் டொலர்கள் பெறுமதியானதாக இருக்கும் என கணிப்பிடப்படுகிறது. வளர்முகநாடுகளில் நல்ல தொலைத் தொடர்பு சர்வதேச முதலீட்டுக்கான ஒரு நிபந்தனையாகக் கருதப்படுகிறது. ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்பு (ITO) வெளியிட்ட புள்ளி விபரத்தில் ஆபிரிக்காவின் சகார சாராத வட பகுதிகளில் 100 குடிமனைகளுக்கு 0.29 குடிமனைகளே தொலைபேசிகளைக் கொண்டுள்ளதாக கூறுகிறது. உலகின் வறுமையான பிரதேசம் இதுவாகும். இதேவேளை ஐரோப்பாவில் 100 பிரசைகளில் 40 பேரிடம் தொலைபேசி உண்டு.

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.83 | 3.07 | – | 0.30 | 1.22 |
| சூரிச் | 1.50 | 2.52 | 0.82 | 0.24 | – |
| பாரிஸ் | 6.12 | 10.30 | 3.35 | – | 4.09 |
| லண்டன் | 0.59 | – | 0.32 | 0.09 | 0.40 |
| நியூயோர்க் | – | 1.68 | 0.55 | 0.16 | 0.67 |
| பம்பாய் | 39.45 | 66.36 | 21.59 | 6.44 | 26.36 |
| கொழும்பு | 62.05 | 104.38 | 33.96 | 10.13 | 41.47 |

ஈழமுரசு ஜேர்மனி

நடாத்தும் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டி

ஐரோப்பா வாழ் தமிழ் கலைஞர்களிடையே நாடகக் கலையை ஊக்குவிக்கும் வகையில் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டியொன்றினை ஈழமுரசு பத்திரிகையின் ஜேர்மனிப் பணியகம் நடாத்தவுள்ளது. இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் தனிக்குழுக்கள் அல்லது கழகங்கள் எதிர்வரும் 01.05.98-ற்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். நாடகப்போட்டி பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்வதற்கு கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

N. Kathirgamanathan - Branden Burger Str -13, 40880-Ratingen, Germany.

தொலைபேசி எண்: 02102-475633

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

**40** நிமிடங்கள்




**40** நிமிடங்கள்

| | |
|---|---|
| இந்தியா | 36 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 40 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 55 நிமிடம் |
| மொரோக் | 55 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |

## இலங்கைக்கு 40 நிமிடங்கள்

**(10 ஏப்ரல் 1998 வரை)**

தொடர்புகளுக்கு:

**Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14**

**GNANAM**
**Telecom Center**
195, Rue du Fg. Saint Denis.
75010 Paris, France.
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
**M°: La Chapelle / Gare du Nord**

**பாரிஸ் 18-ல்**
13, Rue de Suez,
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Château Rouge

**பாரிஸ் 20-ல்**
38, Rue de Belleville
75020 Paris.
Tel: 01 40 33 36 72
M°: Concourt

**பாரிஸ் 11-ல்**
175, Rue de St.Maur,
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

**பாரிஸ் 10-ல்**
83, Rue du Fg. St.Denis
75010 Paris.
M°: Château d'eau

வெகு விரைவில்

**சுவிஸ், லண்டனில்**
**எமது சேவை ஆரம்பமாகின்றது!**

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

Pub

## இரு ஈ.பி.டி.பியினர் விடுதலை

விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த மேலும் இரு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இவ் இருவரையும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவகப் பணியப் பொறுப்பாளர் திரு சங்கர் அவர்கள் மல்லாவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைத்தார்.

விடுதலை செய்யப்பட்ட இருவரும் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## இராணுவ தலைமையகத்திற்கு கடத்தி வரப்பட்ட பெண்யார்?

இராணுவ 'லான்ட் றோவர்' வாகனமொன்றில் மறைவாக வைக்கப்பட்டு சிறிலங்கா இராணுவத் தலைமையகத்தினுள் பெண் ஒருவர் கடத்தி வரப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இராணுவ தளபதி றொகான் தலுவத்தைக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவில் சேவையிலீடுபடும் இந்த வாகனத்தின் உள்ளே இளம் பெண் ஒருவர் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் இராணுவ தலைமையகத்தின் பல காவல் நிலைகளைத் தாண்டி கொண்டுவர முயன்ற வேளையில் இராணுவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பெண் யார் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. இவர் விசாரணைக்கென உயர் பணிப்பின் பேரில் கடத்திவரப்பட்டாரா? அல்லது வேறு நோக்கத்திற்காக கடத்தி வரப்பட்டாரா என்பது பற்றி எதுவுமே தெரியவரவில்லை.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மாங்குளத்தில்....

இந்த இராணுவ அணிகள் மீது கடந்த 13ம் திகதி முதல் விடுதலைப் புலிகள் இடைவிடாத தாக்குதல்களை நடாத்தி வருவதால் பலத்த இழப்புக்களைச் சந்தித்த படையினர் தமது நிலைகளை விட்டு சுமார் 1 கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கி வந்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். நீர்வேலியில்....

அவசர சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடமராட்சி புராப்பொறுக்கிச் சந்திக்கு அருகாமையில் வசிக்கும் இரு பெண்கள் படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் நடாத்த திட்டமிட்ட தாக்குதல் தொடர்பான செய்தியை தமக்கு இவர்கள் வழங்கவில்லை என்று காரணத்தாலேயே இவர்களை கைதுசெய்ததாக வடமராட்சி இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சீனக் கடற்படை அதிகாரிகள் கொழும்பு வருகை

சிறீலங்கா கடற்படைக்கென சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அதி விரைவு பீரங்கிப் படகுகள் கொழும்புத் துறைமுகத்தினை வந்தடைந்துள்ளன. இப் படகுகளின் செயற்பாடுகள் குறித்து சிறீலங்கா கடற்படை அதிகாரிகளுக்கு பயிற்றுவிக்கவென சீன அதிகாரிகள் குழுவொன்றும் கொழும்பு வந்துள்ளது.

கடற்புலிகள், கடற்சிறுத்தைகள் ஆகிய படையணிகளின் தாக்குதல்களினால் பெரும் இழப்புக்களை சந்தித்துவரும் சிறீலங்கா கடற்படையினர் தமது பலத்தினை அதிகரிக்க அவசரமாக முடிவு செய்தமையாலேயே தாக்குதற் கலங்கள் உட்பட பல ஆயுத தளவாடங்களை கொள்வனவு செய்ய கடற்படை அதிகாரிகள் பல் வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

மேற்படி கொள்வனவு தொடர்பாக பாகிஸ்தான் நாட்டிற்குச் சென்ற கடற்படை அதிகாரிகள் அங்கு சில கடற்கலங்களைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பியுள்ளனர். இதே வேளை சிறீலங்கா கடற்படைக்கு புதிய ஆளணிப் பொறுப்பாளராக ரியர் அட்மிரல் சந்தகிரி கடந்தவாரம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வடபிராந்திய கடற்படை தளபதியாக பதவி வகித்தவராவார்.

## அதிர்ச்சி தரும் புள்ளிவிபரம்

முல்லை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் மட்டும் ஒரு இலட்சத்து நாற்பத்தொன்பதினாயிரத்து ஐம்பத்திரண்டு பேர் வெளி நோயாளர்களாக மலேரியாவுக்குச் சிகிச்சை பெற்றனர் என புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக முல்லை மாவட்டத்தின் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சென்ற வருடம் தினமும் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வந்த நோயாளிகளில் 40 வீதமானோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் எனவும், இதில் 30 வீதமானோர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.


## வாணன் வாகன சேவை




உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

Tel: 01 42 52 06 80 / 01 48 05 21 63 / 06 09 26 88 35


## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24.05.1944



விண்ணில் 03.04.1992

### திருமதி பிரான்சிஸ் சேவியர் மகேஸ்வரி

கருவறையில் சுமந்து
கண்மணிபோல் எமைக் காத்து
கரையேற்றி விட்டோம் என்றா
நீங்களின்று கல்லறையில்
கண்முடித் தூங்குகின்றீர்கள்...?
அலையிடைத் துரும்பாய்
அலைக்கழியும் வாழ்வை –மாற்றி
அமைதியை எமக்களிக்க
அம்மா நீங்கள் மீண்டும் வேண்டும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்: மகன் நிரஞ்சன்
தொடர்புகட்கு: 05 12 05 05 36

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16.02.1931



உதிர்வு: 28.03.1996

### அமரர் ஆழ்வார் சின்னையா

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு
யாழ்ப்பாணம்

அன்புத் தெய்வமே!
மாதங்களானாலும் பல
வருடங்களானாலும், மறையுமா
உம் நினைவு
தெய்வத்தை கோவிலிலோ
தேடியது கிடையாது
உம்மைவிட தெய்வமொன்றை
உள்ளமிது அறியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சி. சத்தியபர் (அன்ரனி)
தொலைபேசி: 09-40 70 532


# AMV

IMPORT - EXPORT

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்

கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# சிங்கள சமாதானக் குழுவிற்கு சிறீலங்கா இராணுவம் தடை

(30.03.98)

சிறீலங்காவிலிருந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக தென் தமிழீழம் சென்றிருந்த சிங்களத் தூதுக் குழுவினர் மட்டக்களப்பில்வைத்து இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இன்று சிறீலங்காவின் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டின் பேரில் விடுதலைப் புலிகளை படுவான்கரைப் பகுதியில் சந்திப்பதற்காக பௌத்த மதகுரு சித்தார்த்த தேரோ உட்பட அனைத்துக் கட்சிக் குழு ஒன்று மாத்தறையிலிருந்து மட்டக்களப்பு சென்றிருந்தது. இவர்களுடன் தேசிய சமாதானப் பேரவையின் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்வதை சிறீலங்கா இராணுவம் தடுத்து நிறுத்தி விட்டது. இதனைத்தொடர்ந்து தமது முயற்சிகளை கைவிட்ட சிங்களத் தூதுக் குழுவினர் படையினருடன் பேச்சுக்களை மேற்கொண்டு தமது பயணத்தை தொடர முயன்று வருகின்றனர்.

கடந்த மார்ச் 23ம் திகதி மாத்தறையிலிருந்து மட்டக்களப்பு வந்திருந்த தேசிய சமாதானப் பேரவையின் குழுவினர் விடுதலைப் புலிகளை சந்தித்து இன்றைய சந்திப்பிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

அண்மையில் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பது பயங்கரவாத குற்றம் என தடை விதிக்கப்பட்டிருந்தது.

## இருவாரங்களில் 1500 சிப்பாய்கள் தலைமறைவு

சிறீலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு மீண்டும் இணைந்துகொள்ள பெப்ரவரி 25 ஆந் திகதி வரை கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இணைந்துகொண்ட 3900 இராணுவத்தினரில் 1500இற்கும் மேற்பட்டவர்கள் கடந்த இரு வாரங்களில் மீண்டும் தலைமறைவாகிவிட்டதாக சிறீலங்கா இராணுவத் தலைமையகத்தினை ஆதாரம்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சுமார் 19000 சிப்பாய்களுடன் இவர்களது தொகையும் இணைந்து கொண்டுள்ளது.

ஜயசிக்குறுய் படைநகர்வில் பாரிய ஆளணி பற்றாக் குறையினை எதிர்நோக்கும் படைத்தரப்பு நாளாந்தம் சிப்பாய்கள் தலை மறைவாகி வரும் செய்கையினால் பெரிதும் கலக்கமடைந்து வருகிறது.

தப்பியோடிய மேற்படி சிப்பாய்களைத்தேடி இராணுவப் பொலிசார் தென்பகுதி கிராமங்களில் தற்போது தேடுதல்களை நடாத்தி வருகின்றனர்.

## யாழ் நீர்வேலியில் காவலரண் மீது தாக்குதல்

(29.03.98)

யாழ் நீர்வேலியில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவக் காவலரண் ஒன்றின் மீது இன்று பிற்பகல் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் ஒரு படையினர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.

பிற்பகல் ஒரு மணியளவில் இராணுவத்தினர் எதிர்பார்த்திராத வகையில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும், படுகாய படுத்தப்பட்ட சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஜேர்மனில் மாபெரும் ஊர்வலமும் ஒன்றுகூடலும்

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை வெளியுலகின் கவனத்திற்குக் கொண்டுவரும் முகமாகவும், தமிழ் மக்களின் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் அவர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரியும் எதிர்வரும் சனிக்கிழமை 04.04.98 மாபெரும் ஊர்வலமும் ஒன்று கூடலும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆதரவுடன் நூறன்பேர்க் மாநிலத்தில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

Fleischbrucke (Hauptmarkt அருகாமையில்) எனும் இடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் இவ் ஊர்வலத்தில் ஜேர்மன் வாழ் அனைத்து தமிழ் மக்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## மட்டு. குடாபொக்கணை பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நான்கு பொலிசார் பலி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குடாபொக்கணை சிறீலங்கா பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பொலிசார் கொல்லப்பட்டனர். ஏனையவர்கள் காயமடைந்தவர்களையும் காவிக் கொண்டு ஓடித்தப்பித்துக் கொண்டனர்.

கடந்த சனி இரவு 10.40 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகளின் அதிரடிப்பிரிவின் வேகத் தாக்குதல் அணி தாக்குதலை நடத்தினர். சுமார் 10 நிமிடங்களில் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வீழ்ந்தது. இழப்புக்கள் எதுவுமின்றி தாக்குதலை முடித்துக்கொண்ட புலிகளின் அணி, பொலிஸ் நிலையத்தை முற்றாக எரித்து அழித்துவிட்டு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் தளம் திரும்பினர். இதேவேளை மட்டு. நிந்தாவூர் பகுதியில் சிறீலங்கா ஊர்காவற்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஊர்காவற்படையினன் கொல்லப்பட்டார். இத் திடீர் தாக்குதலில் நிலை குலைந்த படையினர் சடலத்தையும் கைவிட்டு விட்டு ஓடித் தப்பித்துக்கொண்டனர். இத் தாக்குதலின் போதும் சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## மாங்குளத்தில் பின்வாங்கியதை படைத்தரப்பு ஒப்புதல்

மாங்குளம் நகரினை கைப்பற்றும் நோக்குடன் முன்னேறிய இராணுவ படையணிகள் விடுதலை புலிகளின், இடைவிடாத தாக்குதல்கள் காரணமாக தமது நிலைகளை விட்டு பின்வாங்கி வந்தமையை கடந்தவாரம் இராணுவத்தரப்பு ஒத்துக்கொண்டுள்ளது.

ஆனால் தமது இயலாமையை சமாளிக்கும் நோக்குடன் இது ஒரு 'தந்திரோபாய ரீதியிலான' பின்வாங்குதல் எனவும் இராணுவத் தரப்பு வியாக்கியானப் படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும்
பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய,
புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள்,
சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள

Archie'S Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.